


9, 10, O/L மாணவர்களுக்கானது

# புதிய சித்திரக்கலை

A.S. சற்குணராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய

# சித்திரக்கலை

( விளக்கப்படங்களுடன் கூடியது)

2001 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது

ஆக்கம்:

## ஏ.எஸ்.சந்குணராஜா

( சிறப்புப் பயிற்சி - சித்திரம் )

*வெளியீடு:*

**( S ) PUBLICATION**

Viyaparimoolai,
Point Pedro

*விற்பனையாளர்:*

## பூபாலசிங்கம் புத்தகசாலை

340, செட்டியார் தெரு, கொழும்பு 11.

*கிளைகள்:*

309, காலி வீதி, கொழும்பு 06.
இல 4, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புதிய சித்திரக்கலை |
| ஆசிரியர் | : | ஏ.எஸ்.சற்குணராஜா |
| முகவரி | : | வியாபாரிமூலை, பருத்தித்துறை. |
| தற்காலிக முகவரி | : | **12/7**, ஆதர்ஸ் பிளேஸ், தெஹிவளை.<br>075. 518783 |
| பதிப்புரிமை | : | திருமதி செ.சற்குணராஜா |
| வெளியீடு | : | **( S )** பப்ளிகேசன்<br>வியாபாரிமூலை, பருத்தித்துறை. |
| முதற்பதிப்பு | : | 05.11.1996 |
| திருத்திய இரண்டாம் பதிப்பு | : | 28.09.2001 |
| மூன்றாம் பதிப்பு | : | 01.03.2002 |
| நான்காம் பதிப்பு | : | 10.-05.2002 |
| பக்கங்கள் | : | **106 + vi + 8** |
| அச்சுப்பதிப்பு | : | **( S )** பிறின்ட்,<br>**4C.1**, பஸல்ஸ் லேன், வெள்ளவத்தை.<br>072. 858204 |
| விலை | : | **200/=** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரக்கலையின் தோற்றம்:-

மனிதன் தனது புத்திக்கூர்மையினால் இயற்கையில் கிடைக்கும் பொருட்களின் மூலம் இயற்கையினால் உருவாக்கப்படாத கருத்துள்ள ஆக்கம் ஒன்றை உருவாக்குவதே கலை எனப்படுகின்றது.

கலையின் ( ஆரம்பத்தை ) தோற்றத்தை அறுதியிட்டுக்கூறுதல் கடினமாகும். மனித சமுதாயத்தின் தோற்றத்துடன் கலையும் தோன்றியிருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம்.

ஆரம்பகால மனிதன் தனது வேட்டைத் தொழிலுக்காக உபகரணங்களைத் தயாரிக்க முயன்றான். இவ்வாறு ஆக்கப்பட்ட கல்லாயுதங்கள் வெவ்வேறு வடிவங்களில் அமைந்தன. இதன் மூலமே ஆதிமனிதன் வடிவம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்டிருப்பான் எனக்கருதலாம்.

ஆதிமனிதன் தனது தேவைகளுக்காக வடிவமைத்த கருவிகளே மனிதனால் ஆக்கப்பட்ட முதல் உருவங்களாகும். பின்பு ஓய்வுநேரங்களில் கருவிகளை அலங்காரம் செய்ய முற்பட்டான் . கற்குகைகள் மனிதனின் இருப்பிடமாக இருந்தபோது அதில்தான் கண்ட காட்சிகளை கூரான கற்களினாலும் , மிருகத்தின் இரத்தம் போன்றவற்றினாலும் ஓவியமாக வரைய முற்பட்டான்.

கற்குகைகளைவிட்டு மந்தைமேய்த்தல் , விவசாயம் செய்தலில் ஈடுபட்டபோது சமூகம் சிக்கல் நிறைந்ததாக மாறியதால் தேவைகள் அதிகரித்தன. இதனால் தனக்குத் தேவையான பொருட்கள் , உபகரணங்கள் , உறைவிடம் பற்றிய புதிய எண்ணக்கருக்கள் எழுந்தன. வாழ்நாளில் பெற்ற அனுபவங்கள் அதிகரிக்கையில் சமூக, உளவியல், தேவைகளும் அதிகரித்ததால் நம்பிக்கைகளும் , வழிபாடுகளும் தோற்றமெடுத்தன. இதன்மூலம் மனத்திருப்தியை எதிர்பார்த்த மனிதனில் இரசனை ஆற்றல் , ஆக்கத்திறன் போன்றவை மேலும் வளர்ச்சியடைந்தன.

கருத்துப் பரிமாற்றத்திற்கு கலையை ஊடகமாகப் பயன்படுத்த முயன்றதனால் எண்ணக்கரு விரிவடையத்தொடங்க கருத்து வெளிப்பாடு, ஆக்கம் போன்றனவும் விரிவடையத் தொடங்கின.

இதுவரையும் அரூபமாக இருந்த தெய்வங்களுக்கு வடிவம் கொடுக்க முனைந்தான். வெவ்வேறு மனிதக்குழுக்களுக்கிடையே வேறுபட்ட , தனித்துவமான கருத்து வெளிப்பாடுகளும் , ஆக்க முயற்சியும் காணப்பட்டன. சமயம் தொடர்பான எண்ணக்கருக்கள் கலைகளின் வளர்ச்சிக்கும் , பரவலுக்கும் துணைபுரிந்தன.

மேலைத்தேய , கீழைத்தேய கலாச்சாரங்கள் வேறுபட்டதுபோல கலையும் வேறுபட்டது. கீழைத்தேயக் கலையானது இரேகைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும், மேலைத்தேயக் கலையானது ஒளிநிழல் காட்டுதலை அடிப்படையாகக் கொண்டதாகவும் வளர்ச்சியடைந்தது.


மனித சமுதாயமானது மேலும் முன்னேற்றமடைகையில் கலை பற்றிய அறிவு, விளக்கம், இரசனை போன்றவை மேலும் வளர்ந்தன. மனிதன் பழைய கோட்பாடுகளைத் துறந்து புதியனவற்றை தேட முற்படுகையில் நவீன ஓவியப் பாணியானது தோன்றி வளரத் தொடங்கியது எனலாம்.

## இரேகைகள்:-


சித்திரம் வரைவதற்கு இரேகைகள் பற்றிய அறிவு முக்கியமானதொன்றாகும். எனவே சிறுவயதிலிருந்தே இரேகைகளை வரைந்து பழகுதல் விரும்பத்தக்கது. இரேகைகளைக் கோடுகள் எனவும் அழைப்பர். பல்வேறுபட்ட இரேகைகளை இணைத்தோ , அடுக்கியோதான் நாம் உருவங்களை வரைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரேகைகளைப் பின்வருமாறு பெயரிட்டுள்ளனர்.



நிலைக்குத்துரேகை   சாய்வுரேகை   வட்டரேகை   வளைரேகை   நீள்வட்டரேகை   கிடைரேகை




முட்டைவடிவரேகை   சுருள்ரேகை   கோணரேகை   அலைரேகை   சமாந்தரரேகை   தடித்தரேகை

இரேகைகளால் ஆக்கப்படும் சித்திரத்தை புனையாஓவியம் என அழைப்பர். எளிமையான , சுயாதீன கோடுகளால் வரையப்படும் சித்திரம் துரிதரேகைச்சித்திரம் எனப்படும். இரேகைகளை தாறுமாறாகக் கிறுக்கி பின்பு அதில் உருவங்களைக் கண்டுபிடித்து நிறந்தீட்டி ஆக்கப்படும் சித்திரம் கிறுக்கல் சித்திரம் எனப்படும்.

## வர்ணங்கள்:~

இரேகைகள் மூலம் வரையப்படும் சித்திரமானது முழுமை பெறுவதற்கு வர்ணம் தீட்டுதல் அவசியம். வர்ணங்கள் நிறங்கள் எனவும் அழைக்கப்படும். ஓர் பிள்ளையானது வர்ணம் தீட்டும்போது அதிகமாக உபயோகிக்கும் வர்ணத்தை வைத்து அப்பிள்ளையின் மனநிலையை அறிந்துகொள்ள முடியும்.

வர்ணங்கள் பற்றிய அறிவைப் பெறுவதன்மூலமே சரியான, சிறந்த முறையில் வர்ணந்தீட்டலை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய மூன்று வர்ணங்களும் மூலவர்ணங்கள் அல்லது ஆரம்பவர்ணங்கள் அல்லது அடிப்படை வர்ணங்கள் அல்லது தூயவர்ணங்கள் எனப்படும்.

இவ்வர்ணங்களை ஒன்றுடன் ஒன்று கலப்பதால் பெறப்படும் வர்ணங்கள் இரண்டாம் வர்ணங்கள் அல்லது கலப்புவர்ணங்கள் அல்லது துணைவர்ணங்கள் என்று அழைக்கப்படும். பச்சை, செம்மஞ்சள், ஊதா ஆகியவை துணைவர்ணங்களஆகும். ஒன்றோடொன்று கலக்கும்போது கலக்கும் விகிதத்தைப் பொறுத்து துணைவர்ணத்தை வேறுபட்ட செறிவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

சிவப்பு + மஞ்சள் ⟶ செம்மஞ்சள்

சிவப்பு + நீலம் ⟶ ஊதா

மஞ்சள் + நீலம் ⟶ பச்சை


சிவப்பு + நீலம் + மஞ்சள் ⟶ கபிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணங்களுக்கிடையிலுள்ள தொடர்பை விளக்க வர்ணச்சக்கரமானது உதவுகிறது.

## வர்ணச்சக்கரம்




வர்ணங்களை வெப்பு வர்ணங்கள், குளிர்வர்ணங்கள் எனவும் பிரிக்கலாம்.

சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் போன்றவை வெப்பு வர்ணங்கள். இவை முன்செல்லும் இயல்புடையன. நீண்ட தூரத்திற்குத் தெரியக்கூடியவை.

பச்சை, நீலம் ஆகியவை குளிர்வர்ணங்கள். இவை பின்செல்லும் இயல்புடையன. கண்ணிற்கு குளிர்மையானவை.

### எதிர்வர்ணங்கள்

மூலவர்ணங்கள் இரண்டைக் கலக்கும்போது தோன்றும் துணைவர்ணமானது கலக்கப்படாத மூலவர்ணத்திற்கு எதிர் வர்ணமாகும். வர்ணச்சக்கரத்தின் உதவியுடன் ஒரு வர்ணத்தின் எதிர்வர்ணத்தை அறிந்து கொள்ளலாம்.

வர்ணச்சக்கரத்தில் எதிர்வர்ணங்கள் எதிரெதிரே காணப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிற்கு எதிர்வர்ணம் பச்சை, நீலத்திற்கு எதிர்வர்ணம் செம்மஞ்சள்
மஞ்சளிற்கு எதிர்வர்ணம் ஊதா

நீலப்பச்சையின் எதிர்வர்ணம் சிவப்புசெம்மஞ்சள், மஞ்சட்பச்சையின் எதிர்வர்ணம் சிவப்புஊதா
மஞ்சள்செம்மஞ்சளிற்கு எதிர்வர்ணம் நீலஊதா

### அயல்வர்ணங்கள்

வர்ணச்சக்கரத்தில் ஒரு வர்ணத்திற்கு அருகே காணப்படும் வர்ணங்கள் அதன் அயல்வர்ணங்கள் எனப்படும். அயல்வர்ணங்களை அருகருகே தீட்டும்போது வர்ணஒத்திசைவு ஏற்படும்.
ஒரு வர்ணத்தை மென்மையாகவும் , கருமையாகவும் தீட்டும்போது வர்ணபலம் ஏற்படும்.

### வர்ணங்கள் சிலவற்றிற்கு வழங்கும் பெயர்கள்:-

* சிவப்பு - கிறிம்சன் (crimson), காமைன் (carmine), ஸ்காலெட் (scarlet)
* நீலம் - அல்ராமரைன் (ultramarine), சீபுளு (sea blue), கொபால்ற்று(cobalt). பிரசியன் (prussian)
* கறுப்பு - ஐவரி (ivory)
* பச்சை - எமறெல்ட் (emereld) , விரிடியன் (viridian)
* மஞ்சள் - குரோம் (chrome)
* இளஞ்சிவப்பு- வேமிலியன் (vermilian)
* நீலப்பச்சை - அகுவா (aqua)
* கபிலம் - பேண்ட் சியானா (burnt sienna)
* கருங்கபிலம்- பேண்ட் அம்பர்(burnt ampher), சிபியா (sepia)

## சித்திரக்கலைக்கான ஊடகங்கள் :-

சித்திரம் வரைவதற்கு ரேகைகளும், வர்ணங்களும் அவசியம். எனவே ரேகைகளை வரைவதற்கும் வர்ணங்கள் தீட்டுவதற்கும் தேவைப்படும் பொருட்கள் ஊடகங்கள் எனப்படும். இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. வரைவதற்குப் பயன்படும் ஊடகங்கள்.

இதற்குப் பென்சில், தூரிகை, கரி, பேனா, சோக் போன்றவற்றை உபயோகப்படுத்தலாம். பென்சில்களில் கருமை கூடிய பென்சிலான 3B பென்சில் சிறந்ததாகும்.

2. வர்ண' டுவதற்கான ஊடகங்கள்.

இதற்குப் பின்வரும் ஊடகங்களை உபயோகப்படுத்தலாம்.

அ) நீர்வர்ணம் - இது ஒளிபுகவிடும் தன்மை கொண்டதாகும். கலக்கப்படும் நீரின் அளவினால் செறிவை மாற்றிக் கொள்ளலாம்.

ஆ) தூள் வர்ணம் - இது பசையுடன் கலந்து வரையப்படும் சித்திரங்களில் ஒட்டப்படும்.

இ) பஸ்ரல் (சோக்) வர்ணம் - இவை எண்ணெய்த்தன்மை கொண்டவை இலகுவில் கையாளக்கூடியவை.

ஈ) போஸ்ரர் வர்ணம் - இவை பிரகாசமான வியாபார நோக்கமுடைய சித்திரங்கள் வரையப்பயன்படுகின்றன.

உ) எண்ணை வர்ணம் - கன்வஸ் மீது வரைவதற்கு ஏற்றதாகும். தொழில் ரீதியாக சித்திரம் வரைவதற்கு இதனைப்பாவிப்பர். இது தேப்பன்ரைன், லின்சீட் ஓயில் போன்றவற்றில் கரையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * சிற்பக்கலைக்கான ஊடகங்களும் உருவம் அமைத்தலில் நடைபெறும் செயற்பாடுகளும்:-

சிற்பங்களை ஆக்குவதற்குப் பலவிதமான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவையே சிற்பக்கலைக்கான ஊடகம் எனப்படும்.

(உ-ம்) :- களிமண், சீமெந்து, மரம், கருங்கல், பளிங்குக்கல், சுண்ணாம்புக்கல், உலோகம் போன்றவையாகும்.


சிற்பம் செய்யப்படும் போது நடைபெறும் செயற்பாடு ஊடகத்திற்கு ஊடகம் வேறுபடுகின்றது.


* மரம், கற்கள் என்பவற்றில் சிற்பம் செய்யப்படுதல் செதுக்குதல் எனப்படுகின்றது.
* உலோகத்தை உருக்கி சிற்பம் செய்தல் வார்த்தல் எனப்படும். இதற்கு வேண்டிய மூல மாதிரியானது மெழுகினால் ஆக்கப்படும்.
  உலோகத் தகட்டை ஏற்றபடி வளைத்து வடிவமைத்து சிற்பமாக்கப்படும் முறை தகட்டு வேலை எனப்படும்.
* களிமண்ணில் சிற்பம் செய்யப்படுதல் பிடித்தல் எனப்படும்.
* சீமெந்தில் சிற்பம் செய்யப்படும் முறை கட்டியெழுப்புதல எனப்படும்.

## சமநிலை:~

ஓர் சித்திரம் வரையும் போது அதன் இடப்பக்கத்திற்கும், வலப்பக்கத்திற்கும் இடையே உருவங்களிலும், வர்ணங்களிலும் காணப்படும் ஒத்த தன்மை சமநிலை எனப்படும். சமநிலையில் வரையப்பட்ட சித்திரமே சித்திரக்காரர்களினால் பொதுவாக விரும்பப்படுகிறது. இரு தட்டுக்களும் சமமாகவுள்ள தராசானது சமநிலையின் குறியீடாக பாவிக்கப்படுகின்றது.


சமநிலையின் குறியீடு


உருவங்கள் சமநிலையிலுள்ளது



உருவங்கள் சமநிலையற்றது

## தூரதரிசனம்:~.

இது தூரநோக்கு, பார்வை எறியம் போன்ற பெயர்களால் வழங்கப்படுகின்றது. முன்னுள்ள பொருட்கள் பெரிதாகவும் பின்னுள்ள பொருட்கள் சிறியதாகவும் தோன்றும் தோற்றப்பாடாகும். முன்னுள்ள பொருட்களால் பின்னுள்ள பொருட்கள் மறைக்கப்படும்.

(உ-ம்) :- நீண்ட வீதிக்காட்சி, நேராகவுள்ள ரயில்த்தண்டவாளம், கட்டிடத்தொடர், மின்கம்பத் தொடர் போன்றவற்றில் அவதானிக்கலாம்.


ஒருபுள்ளியில் மறையும் எறியம்


இருபுள்ளியில் மறையும் எறியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அளவீடு:~

நாம் சித்திரம் வரையும் போது இருபரிமாணத்தன்மை கொண்டதாகவும் முப்பரிமாணத் தன்மை கொண்டதாகவும் வரையலாம்.

நீளம், அகலம் ஆகிய ஈரளவீட்டைக் கொண்டவை இருபரிமாணச்சித்திரங்கள் ஆகும். இதற்குத் தட்டையாக வர்ணம் தீட்டுவர்.

நீளம், அகலம், உயரம் ஆகிய மூன்று அளவீடுகளைக் கொண்டு வரையப்படும் சித்திரம் முப்பரிமாணச் சித்திரம் எனப்படும். இதற்கு ஒளிநிழல் காட்டி வர்ணம் தீட்டப்படும்.

பந்து போன்ற கோளவடிவமான பொருட்களுக்கு நீளம், அகலம், உயரம் மூலம் முப்பரிமாணத் தைக்காட்ட முடியாது. இது ஒளிநிழல் மூலம் திரட்சி காட்டப்படுவதனால் முப்பரிமாணத்தன்மையைப் பெறும்.



இருபரிமாணம் முப்பரிமாணம்


## கண்மட்ட ரேகை:~

ஒரு பொருளானது எமது கண்மட்டத்திலோ அன்றி கண்மட்டத்திற்கு மேலாகவோ அன்றிக் கண்மட்டத்திற்குக் கீழாகவோ வைக்கப்படலாம். இவ்வாறு கண்மட்ட ரேகையானது மாறும் போது வரையவேண்டிய பொருளின் தோற்றமும் வேறுபட்ட முறையில் எமக்குத் தென்படுகின்றது.

கண்மட்டத்திற்கு மேலாக வைக்கப்படும்போது பொருளின் அடிப்பாகமும் பக்கப்புறமும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

கண்மட்டத்தில் வைக்கப்பட்டால் அப்பொருளின் மேற்பாகமோ, கீழ்ப்பாகமோ தெளிவாக எமக்குத் தெரியமாட்டாது. பக்கப்புறம் மட்டும் தெளிவாக வரைந்தால் போதுமானது.


கண்மட்டத்தின் கீழ் வைக்கப்பட்டால் பொருளின் மேற்புறம் பக்கப்புறமும் தெளிவாகக் காட்டி வரையப்படுதல் வேண்டும்.



கண்மட்டத்தின்கீழ் கண்மட்டம் கண்மட்டத்தின்மேல்

## பரவுருபச் சித்திரம்:~

குறித்த ஓர் உருவம் குறித்த ஓர் ஒழுங்கில் (கிரம முறையில்) அமையும் அலங்காரம் பரவுருபம் எனப்படும். நிறங்களும் குறித்த ஒழுங்கிலேயே தீட்டப்பட்டிருக்கும்.
(உ-ம்) :- சீத்தைத்துணி, மேசைவிரிப்பு, பரிசுப்பொருள்சுற்றும் கடதாசி.



## கொலாஜ் சித்திரம்:~

இது ஒட்டுச்சித்திரம் எனப்படும். இலகுவாக சுற்றாடலில் பெறக்கூடிய பழைய நிறக்கடதாசிகள், பறவைகளின் இறகுகள், மிருக உரோமம், துணிகள், விதைகள், இலைகள், பூக்கள், வைக்கோல், சிற்பிகள் போன்றவற்றை கோதுமைப்பசை அல்லது பிசின் அல்லது உகு போன்றவற்றால் ஒட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகளையோ, உருவங்களையோ ஆக்குவதன் மூலம் இவ்வகையான சித்திரத்தை ஆக்கிக் கொள்ளலாம்.

## கிரபிக் முறைகள் (அச்சுப்பதித்தல்):-

### 1) மொனோகிறபிக்

இதுதனி ஒரு பிரதிமட்டும் பெறப்படும் முறையாகும். கண்ணாடி மீது மை தடவி விட்டு அதில் ஈக்கு போன்ற கூரான பொருட்களால் உருவம் வரைந்து பின்பு அதில் தாளை வைத்து அழுத்தும் போது பிரதி பெறப்படும். வரையப்படும் உருவங்கள் தாளின் நிறத்தில் காணப்படும்.

### 2) லைனோ கிரபிக்

லைனோ அட்டையில் வேண்டிய உரு தவிர்ந்த ஏனைய பகுதிகளை வெட்டி அகற்றிவிட்டு மை தடவிக் கடதாசியில் அழுத்தும்போது பிரதி பெறப்படும். இம்முறையில் தனிவர்ணத்தில் பல பிரதிகள் பெறலாம்.

(உ-ம்) :- உருளைக்கிழங்கில் உருவம் வெட்டி அச்சுப்பதித்தல்.

### 3) லித்தோ கிரபிக்

இது பல வர்ணத்தில் பல பிரதிகள் பெறப்படும் முறையாகும். ஒவ்வொரு நிறத்திற்கும் தனித்தனியே பதிகுற்றிகள் (Block) ஆக்கப்படுதல் வேண்டும். நிறப்படங்கள் இம்முறையாலேயே பதிக்கப்படுகின்றன.

### 4) ஸ்ரென்சில் பதிப்பு

ஸ்ரென்சில் தாளிலோ, கடதாசி அட்டையிலோ தேவையான உருவங்களையோ, எழுத்துக் களையோ வரைந்து அதை வெட்டி அகற்ற வேண்டும். பின்பு அதனை தாளின் மீது வைத்து மை பூசி அழுத்தும் போது பிரதி பெறப்படும். ஒரு வர்ணத்தில் பல பிரதிகள் பெறலாம்.

## பற்றிக் அலங்காரம்:-

இதற்கு மெழுகு, நீரில் கரையும் சாயம், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், மெழுகுப்புனல், பிறேம் போன்றவை தேவைப்படும். பருத்தித்துணியை பிறேமில் இறுக்கமாகப் பொருத்துதல் வேண்டும். அதில் வேண்டிய உருவங்களை வரைந்து கொள்ளுதல் வேண்டும். அதன் பின்பு நிறமூட்டப்பட வேண்டிய பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு மெழுகுப்புனல் உதவியுடன் துணியின் இருபறமும் மெழுகு பூசுதல் வேண்டும். அதன் பின்பு பிறேமிலிருந்து துணியைக் கழற்றி நிறச்சாயத்தில் தோய்த்தல் வேண்டும். இப்பொழுது மெழுகு பூசப்படாத இடங்களில் சாயம் ஒட்டிக்கொள்ளும். மெழுகைத் துணியிலிருந்து அகற்ற சுடுநீரில் அவித்தல் வேண்டும்.

வகுப்பறையில் தாளில் சித்திரத்தை ஆக்குவதற்கு மெழுகு (சோக்) வர்ணத்தையும், நீர் வர்ணத்தையும் பயன்படுத்தலாம்.

## சித்திர சிற்பக்கலை ஆராய்ச்சியாளர்கள்:-

புராதன சித்திர சிற்பங்களின் சிறப்பை ஆராய்ந்து அவற்றின் காலம், மரபு, கலைச்சிறப்பு போன்றவற்றை வெளிப்படுத்துவோர் சித்திர சிற்பக்கலை ஆராய்ச்சியாளர் எனப்படுவர்.

### 1) ஆனந்த K குமாரசாமி. (1877 – 1947)

கீழைத்தேசத்தின் கலைத்திறனை மேலைத்தேசத்திற்கு விளங்க வைத்த பெரியார் இவராவர். இலங்கை, இந்திய கலை வெளிப்பாடுகளை ஆராய்ந்து இவர் பலநூல்களை எழுதியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன.

1) இடைக்காலச் சிங்களக்கலை
2) இந்திய சிற்பி
3) இந்தியத்தேசியத் தத்துவக் கட்டுரைகள்
4) சிறந்த இந்தியக் கலா வடிவங்கள்.
5) கலையும் சுதேசியமும்
6) இந்திய, இலங்கைக் கலைகளும், கைத்தொழில்களும்.
7) இலங்கையின் உலோக வடிவங்கள்
8) சிவ நடனம்.
9) இராஜபுத்தான ஓவியங்கள்
10) புத்தரும் அவர் போதனைகளும்.
11) இந்தியாவினதும், இந்திய ஆசியாவினதும் கலைகளின் வரலாறு
12) புத்தர் வடிவத்தின் ஆதித் தோற்றம்
13) பௌத்த விக்கிரக அமைப்பிலக்கணம்.
14) கலையில் இயற்கையின் திரிபு
15) கலைப்பொருட்களைக் காட்சிக்கு வைப்பதேன்
16) சொற்சித்திரமும் நினைவுச் சித்திரமும்
17) காலமும், காலாதீயமும்.

### 2) S. பரணவிதான.

இலங்கைத் தொல்பொருள்த் திணைக்களத்தில் கடமை புரிந்தார். தூபிகளின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றை ஆராய்ந்து இலங்கைத்தூபி என்னும் நூலை எழுதி வெளியிட்டார்.

## *சிற்ப சித்திரக் காட்சியகங்கள்:~*

### 1) கலாபவனம்

இது கொழும்பில் அமைந்துள்ள சிற்ப, சித்திரக்காட்சி நடைபெறும் இடமாகும். 1922 இல் கொழும்பு ஆனந்தகுமாரசாமி வீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

### 2) லயனல் வென்ட்

இது 1930 ம் ஆண்டில் 43 குழு (43Group) என்னும் ஓவிய அமைப்பை ஸ்தாபித்த திரு. லயன்ல் வென்ட் (1900 - 1944) என்பவரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட சித்திர சிற்பக் காட்சி நடைபெறும் இடமாகும். கொழும்பு 7 இல் கில்ட்போட் கிறசன்ட் வீதியில் அமைந்துள்ளது.

## *அலங்கார வடிவங்கள் (மரபுரீதியான நோக்குருக்கள்):~*

இவை தொன்று தொட்டு கலைஞர்களால் அலங்காரங்களை மேற்கொள்ளப்பாவிக் கப்பட்டவையாகும். இவை வழிபாட்டுத்தலங்கள், புராதன ஓவியங்கள், அரண்மனைகள், செதுக்கு வேலைகள், கைவினைப்பொருட்கள் போன்றவற்றில் அலங்காரங்களாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவற்றை பௌத்த சிங்கள அலங்கார வடிவங்கள், இந்து தமிழ் அலங்கார வடிவங்கள் எனப்பாகுபடுத்தலாம்.

### இந்து தமிழ் அலங்கார வடிவங்கள்

| | | |
|---|---|---|
| 1) கூடுதலை | 2) நாகபந்தம் | 3) தாமரை இதழ் வடிவங்கள் |
| 4) பத்மதாரை | 5) இலவங்கப்பூ | 6) சங்கிலிப்பின்னல் |
| 7) நீரலை | 8) இலைக்கருக்கு | 9) பூசந்தரம் |
| 10) நாகமோடி | 11) முத்துக்கரை | 12) பூந்தாரை 13) யாழி |

போன்றவை இதில் அடங்கும். இவற்றை இந்து ஆலயங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்த சிங்கள அலங்கார வடிவங்கள்:-

இவைபற்றிய விடையங்கள் ரூபாவளிய, வைஜந்திய, சாரிபுத்திரய போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வலங்கார வடிவங்கள் திவ்ய(தெய்வீக), சத்வ(பிராணிகள்), விருட்ஷ (தாவரங்கள்), நிர்ஜீவ (உயிரற்றவை) என நான்காகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. கற்பனையான,உண்மையான வடிவங்கள் எனவும் பாகுபடுத்தலாம்.

திவ்ய(தெய்வீக) வில் அடங்குவன - சூரியத்தாமரை, சந்திரத்தாமரை, தர்மசக்கரம்

சத்வவில் (பிராணிகள்) அடங்குவன - மகரம், உசம்பகுஞ்சரம், ஏத்உறந்தலிகினியா, சிம்மம், கஜசிங்ஹ, ஹம்சம் செரபென்டிய.

விருட்ஷ(தாவரங்கள்) இல் அடங்குவன - நாரிலதா, கத்தரிப்பூ, சீனமலர், தாளம்பூ, சப்புமலர், மல்லிகை, பின்னறமல, செங்கழுநீர், லியவெல, பலாபெத்தி.

நிர்ஜீவ(உயிரற்றவை) - அரும்பு, கல்பிந்து, சீப்புரு, தியரல, காதணி, தீச்சுடர்(கினிதல்ல)

இவற்றில் அரும்பு, தாழரையிதழ், போபத், வகதெக்க, பலாபெத்தி, நெலும்பெத்தி, நெலும்மல, நாகமலர் போன்றன கண்டிக்கால உலோகவேலைகளிலும், ஓவடிய, தனிச்சுழி, இரட்டைச்சுழி, போபத் போன்றன துணிஅலங்காரங்களுக்கும், பின்னறமல, பலாபெத்தி, லியவெல பலாப்பெத்தி போன்றன கற்செதுக்கல்களிலும், சுவஸ்திகா கூடை, பாய் அலங்காரங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நெலும்மல (தாமரை) தூய்மையைக் குறிக்கும்.இது கண்டிக்கால சுவரோவியங்களில் இடைவெளியை நிரப்பவும், தாழம்பூ புத்தர் உருவங்களுக்கு அருகிலும் வரையப்பட்டுள்ளது.

வகதெக என்னும் வடிவமே சிங்கள புராதன சித்திர ஆசிரியர் தமது மாணாக்கர்களுக்குக் கற்பித்த முதலாவது சித்திர அப்பியாசமாகும். இதிலிருந்து தோன்றிய சிக்கலான வடிவமே திரிங்கிதலை ஆகும்.

மீனானது (மத்சய) 108 அலங்காரங்களில் ஒன்று. மட்பாண்ட அலங்காரமாகப் பாவிக்கப்படுகின்றது.

மகரமானது மங்கலச்சின்னங்களில் ஒன்றாகும்.இது யானையின் துதிக்கை, சிங்கத்தின் கால்கள், பன்றியின் காதுகள், முதலையின் பற்கள், மீனின் உடல், அனுமானது விழிகள், கொடி இலைக்காட்டுரு வடிவில் அமைந்த வால்கள் உடையதென ரூபாவளிய கூறுகின்றது. மகரமானது கண்டிக்காலக் கொடியாகவும் பாவிக்கப்பட்டுள்ளது. கண்டிக்கால விகாரைகளில் மகரத்தின் வடிவமானது இடத்திற்கிடம் சிறிதளவு வேறுபடுகின்றது.

அன்னமானது நல்லியல்புகளின் தேக்கமாகக் கருதப்படுகின்றது. இதில் ஹம்சம், சாரீய அன்னம், சரச அன்னம் எனப்பிரிவுகள் உள்ளன.

கின்துர தலையில் அடர்ந்த மயிரையும், கழுத்தைச்சுற்றி மாலைகளையும், இறகையும், அழகான முகத்தையும், இனியகுரலையும், மனிதஉடலையும், இடுப்பிற்குக்கீழ் பறவையின் தன்மையையும் கொண்டதாக ரூபாவளிய கூறுகிறது.

சிங்கம் 13 விதமான வடிவங்களில் காணப்படுகின்றது. ரிதிவிகாரையில் நரசிங்கம், கஜசிங்ஹ போன்றன வரையப்பட்டுள்ளன. எம்பக்கவில் கஜசிம்ஹ, சிம்மம் போன்றன செதுக்கப்பட்டுள்ளன. வாளுடன் வரையப்பட்ட சிங்கம் இலங்கைக்கொடியில் உள்ளது.

சப்தநாரி பல்லக்கு என்னும் வடிவமானது 7 பெண்களால் ஆன பல்லக்கு வடிவமாகும். இதைப்போல தெவ்நாரிரத, பஞ்சநாரி ஹெட்ட போன்ற வடிவங்களும் உள்ளன. நாரிலதா என்பது பெண்ணைப்போன்ற பூ ஆகும். இது விருட்ஷ என்னும் பிரிவில் அடங்கும். இதனைக் கொடியலங்காரமாக வரையும்போது நாரிலதாவெல எனப்படுகின்றது. எம்பக்கவில் காணப்படுகின்றது.



போபத் கங்குல்


ரத்வத்த அலங்காரம்



சூரியன்



சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரும்பு



கல்பிந்து



குந்திரிக்கம்



சீப்புரு (பணாவ)



சங்கிலிச்சவடி



சவடி



இரட்டைச்சுழி



தனிச்சுழி



போபத


பதுரு


தனியிழை



ஈரிழை



வகதெக



பின்றுமலர்


வேல்பொத்த



லியபொத்த



கேதுவடிவம்


பூவும் மொட்டும்


நெலும்பெத்தி


சிங்கம்(தேசியக்கொடியிலுள்ளது)


சிம்மம்


நாரசிங்ஹ



கஜசிம்ஹ


சப்தநாரிபல்லக்கிய



நாரிலதாவெல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமரை திரிபுகள்



பலாபெத்தி வடிவங்கள்



கின்துர




மீன் (மத்சய)



கூத்தாராமவிகாரை மீன்



ஏத்ஹந்தலிகினிய



உசமபகுஞ்சரம்



அஸ்தியாழி



யாழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிளி(கிரவ)



ஹம்சம்


சாரியஅன்னம்


அன்னப்பிணையல்(ஹம்சபூட்டுவ)


மகரம்



பாஹற் ஸ்தூபமகரம்




சிங்கப்பட்சி(செரபெந்தா)



நாபென்ன



நீரலை(தியரல)


லியவெல


சாலுபோரதமக்


போகொள சக மல


மல்லிகை(பிச்சமல)



காதணி(கர்ணிகா)


தீச்சுடர்(கினிதல்ல)


திரிங்கிதலை


சீனமலர்


கத்திரிமல (வகதெகவின்திரிபு)



சுவஸ்திகாமல



நாரிலதா


நாசித்தலை(கிபிகிமுகுண)


தாழம்பூ(வற்றஹெயமல)


சப்புமலர்


செங்கழுநீர்(மானெல்மல)


கடுப்புல்மலர்


அன்னாசிமலர்


கத்திரிமலர்


நாகமலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரச்சுதை ~ உலர்சுதை:~

முற்காலத்தில் ஓவியம் சுவர்களிலேயே வரையப்பட்டது. சுவர்களில் ஓவியம் வரைவதற்கு இரண்டு முறைகள் கையாளப்பட்டன.

1) ஈரச்சுதை முறை
2) உலர்சுதை முறை

### 1) ஈரச்சுதை முறை:-

இது காலத்தால் முற்பட்ட முறையாகும். பாறை அல்லது சுவரில் சுதையானது பூசப்பட்டு உலர்வதற்கு முன் ஓவியம் வரையப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு விடும். சுதையானது சுண்ணாம்பு, மண், முட்டைவெண்கரு, மிருக அல்லது மீனின் கொழுப்புப் போன்றவற்றைக் கலந்து ஆக்கப்படும். ஈரமான சுதை மீது தீட்டப்படும் வர்ணம் சுதையின் அடிவரை ஊறிவிடுவதால், வர்ணம் இலகுவில் மங்கியோ, அழிந்தோ விடுவதில்லை, வர்ணங்கள் இயற்கைப் பொருட்களில் இருந்து ஆக்கப்படும்.

| | |
|---|---|
| சிவப்பு | - சாதிலிங்கத்திலிருந்தும். |
| நீலம் | - அவுரியிலிருந்தும். |
| பச்சை | - கெகிபித்தன் இலைச்சாறிலிருந்தும். |
| மஞ்சள் | - கொகட்டுச் சாறிலிருந்தும். |
| வெள்ளை | - சுண்ணாம்பிலிருந்தும், மகிழு களிமண்ணிலிருந்தும் |
| கறுப்பானது | - பலாப்பாலை கெகுணு எண்ணையுடனும் பழந்துணியுடனும் எரித்துப் பெறப்படும். |

ஓவியத்தில் பளபளப்பை ஏற்படுத்தவும், பூச்சிகளிலிருந்து பாதுகாக்கவும் தொறன எண்ணையானது பூசப்படும்.

### 2) உலர் சுதை:-


இது பிற்கால முறையாகும். சுதையானது உலர்ந்த பின்பு ஓவியம் வரைந்து வர்ணம் தீட்டும் முறையாகும்.

## இலங்கையின் பாரம்பரிய கலை கைப்பணி:~

இலங்கையில் தொன்று தொட்டு பாரம்பரியமாக கைவினைப் பொருட்கள் ஆக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். சிற்சில பிரதேசங்கள் குறித்த கைப்பணிகளில் பிரபல்யம் அடைந்து வந்துள்ளன.


### 1) பாய்இழைத்தல்:-

இதற்குத் தும்பறை மிட்டியாவத்தை பிரசித்தமான இடமாகும். பாயானது பன்புல்லால் இழைக்கப்படுகிறது. சிவப்பு, மஞ்சள், கறுப்பு போன்ற வர்ணங்கள் அதிகளவில் பாவிக்கப்படுகின்றன. கொறுக்காப்புளி இலையை அவித்து சிவப்பு நிறத்தையும், சீந்தில் கொடியை அவித்து மஞ்சள் நிறத்தையும், தான்றிக்காயை அவித்து கறுப்பு நிறத்தையும் பெறுவர். தொறணபொத்த, ரத்வத்த அலங்காரம், தாரா, தனியிழை, ஈரிழை, கல்கஸ, யானை, பாம்பு என்பன பயன்படுத்தப்படும் அலங்காரங்களாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) மட்பாண்ட வேலை:-



இதற்குக் களனி பிரசித்தமானது. சட்டி, முட்டி, குடம் போன்றவை ஆக்கப்படும். மட்பாண்டங்களில் இருவகைகளில் அலங்காரமிடுவர்.

1) சூளையில் சுடமுன் அலங்காரமிடுதல்
2) சூளையில் சுட்டபின் அலங்காரமிடுதல்

சுடுவதற்குமுன் அலங்காரம் வரைந்து வெண்களியால் மூடிச்சுடும்போது அலங்காரம் வெள்ளைக்கோடுகளாகக் காணப்படும்.


3) மெழுகு வேலை (விரல் நகவேலை):-


இத்தொழிலில் ஈடுபடுவோர் 'ஈ வடுவா' எனப்படுவர். கெப்பிட்டிய, தலகிரிய போன்ற மரங்களின் பாலைப் பெற்றுக் கொள்வர். மெழுகைப் பலகையில் பூசி பலகையை சூடாக்கி வேகமாகச் சுற்றும் உபகரணத்தினால் பாலைப்பூசுவார். பின்னர் மஞ்சள், சிவப்பு, நீலம், கறுப்பு நிறங்களை நகத்தினால் பூசுவர். அரும்பு, கல்பிந்து, சவடி, கலஸ்தங்கய போன்ற அலங்காரங்கள் பாவிக்கப்படும். ஈட்டிப்பிடி, கைப்பிடி, கொடிக்கம்பு, வெற்றிலைத்தட்டு, கதிரைக்கால் போன்றவற்றிற்கு அலங்காரம் இடுவர்.கண்டி தலதாமாளிகைத் தூண்கள் சிலவற்றில் இம்முறையில் அலங்காரமிடப்பட்டுள்ளது. இவ்வேலை செய்வோர் பலாங்கொட, பல்லேஹந்த, பாத்ததும்பறை, தங்காலை போன்ற இடங்களில் வசிக்கின்றனர்.

4) உலோக வேலை:-


இரும்பு வேலை, பித்தளை வேலை போன்றவை இதில் அடங்கும். மண்வெட்டி, கத்தி, பாக்குவெட்டி, அரிவாள், வெற்றிலைத்தட்டு, விளக்கு, பாத்திரங்கள், மிருக உருவங்கள் போன்றவை ஆக்கப்படும். கருடன், அரசிலை, வியவெல, சிங்கம் போன்றவை அலங்கார அமைப்பாகப் பயன்படும். தெதிகமை விகாரையிலுள்ள நாலு தேங்காயெண்ணை விளக்குகள் சிறந்த கலையம்சம் உடையனவாகும். யானையின் வடிவத்தில் அமைந்தவை. யானை தொங்கும் சங்கிலியில் இடையிடையே மேளம் அடிப்பவர், தாளம் போடுபவர் உருவங்களும் விளக்கு சங்கிலியுடன் இணையும் பகுதியில் படம் விரித்த நாகத்தின் உருவமும் அமைக்கப்பட்டுள்ளது. கண்டியில் உள்ள கிரிவுவலவில் பித்தளை வேலையும், தொங்கவெல, கடுகண்ணாவை, மாவனல்லை, கடலாதெனிய, பிலிமத்தலாவ, எம்பக்க, கொத்மலை போன்ற இடங்களில் இரும்புவேலையும் செய்யப்படுகிறது.











தந்தவேலை:-

யானைத்தந்தங்களில் முழுமையான உருவங்களையோ அல்லது புடைப்பான சிற்பங்களையோ செதுக்குதல் தந்தவேலை எனப்படும். சீப்பு, வளையல்கள், நகைப்பெட்டிகள் போன்றவை தந்தத்தால் ஆக்கப்படுகின்றன. மாவனல்ல, மாத்தளை, குருநாகல் போன்ற இடங்கள் இவ்வேலைக்குப் பிரசித்தி பெற்றவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமூடி வெட்டுதல்:-

இவ்வேலைக்கு அம்பலாங்கொடை பிரசித்தமானது. முகமூடியானது கதுறு என்னும் (கடல்மாங்காய்) மென் மரத்தில் வெட்டப்படும். இது பலி, தொவில் போன்ற நடனங்களுக்கும் பாவிக்கப்படுகிறது. பலவேறு கதாபாத்திரங்களை சிரிப்புக்கு ஆளாக்க குரூபியான வடிவங்களான பேய்முகங்கள் (வெஸ்முகுண) இராட்சதனின் முகம் போன்றன போல் செய்யப்படும். பிரகாசமான நிறங்கள் தீட்டப்படும். ரௌத்திரம் அல்லது கோபம், வீரம் அல்லது பேராண்மை, ஹாஸ்யம் அல்லது நகைச்சுவை ஆகிய ரஸங்களை வெளிப்படுத்தும் வகையில் முகமூடிகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படலாம்.



## புராதன இலங்கையின் அமைப்பு, மகிந்தன் வருகை, பௌத்த கலை வளர்ச்சி, அயல் நாட்டுக்கலாச்சாரத் தொடர்பு:-

புராதன இலங்கையில் இயக்கர், நாகர் ஆகிய கோத்திரங்களை சேர்ந்த மக்கள் ஆதிக்குடிகளாகக் கருதப்படுகின்றனர். இராவணன் என்ற மன்னன் இலங்கையினை ஆண்டதாக இராமாயணம் கூறுகிறது. பின்பு கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து காலத்துக்குக்காலம் இந்தியாவிலிருந்து வந்த ஆரிய மக்கள் இலங்கையின் வடமேல், தென்கிழக்குக் கரையோரங்களில் குடியேறினார்கள். சிங்களவரின் மூதாதையரான இவர்கள் கி.மு. 3ம் நூற்றாண்டளவில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியிருந்தார்கள். இவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழர்களும் வடக்கு, கிழக்கு பகுதியில் பரவியிருந்தனர். கி.பி. 7ம், 8ம் நூற்றாண்டில் வியாபாரிகளாக வந்த அராபியர்களும் சில இடங்களில் குடியேறினர்.

கி.மு. 3ம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் தேவநம்பியதிஸ்ஸ மன்னனின் ஆட்சி நடைபெற்றபோது அசோகனின் தூதுவனாக இலங்கை வந்த மகிந்ததேரர் மூலம் பௌத்தமதம் இலங்கையில் புகுத்தப்பட்டது. சங்கமித்தை வெள்ளரசுக் கிளையுடன் இலங்கை வந்தபோது 18ற்கு மேற்பட்ட வகுப்புக்களைச்சேர்ந்த கம்மியர் கூடவந்தனர் எனவும் இவர்களே இந்தியாவின் மௌரியக் கலையினை இங்கு அறிமுகம் செய்து வைத்தனர் எனவும் கருதப்படுகின்றது.

பௌத்தமதத்தின் வருகையுடன் மதவழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட தூபிகள், சிலைமனைகள், பிக்குமார் தங்குவதற்கு வேண்டிய கட்டிடங்கள் மற்றும் ஆராமை, போயாமனை, போதிமனை, சிலைமனை போன்றவை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டன. ஆரம்பத்தில் புத்தகுருமார் வசிப்பதற்கு கற்குகைகளே அமைக்கப்பட்டன. வெஸ்ஸகிரி, தம்புள்ள, மிகிந்தலை, றிதிகலை, சிகிரியா போன்ற இடங்களில் கற்குகைகளைக் காணலாம். கற்குகைகளின் வாசல்களில் கற்பீலிகள் காணப்படுகின்றன. மழைநீர் உள்ளே வராமல் இருக்கவே கற்பீலி அமைக்கப்பட்டது. எனவே சமயத்தேவைகளுக்காக கலை வெளிப்பாடுகள் தோன்றின. சமயத்துடன் இணைந்து கலை வளர்ச்சியடையத் தொடங்கியது.

பௌத்த மதத்தின் வருகையுடனேயே கல், செங்கல் போன்றவற்றைக் கொண்டு உறுதியான கட்டிடம் அமைக்கும் முறை ஆரம்பமானது எனக்கூறலாம். ஆனால் இதற்கு முன் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் இலகுவில் அழியக்கூடிய களிமண், மரம் முதலியவற்றால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதனால் இவற்றின் எச்சங்கள் எதையும் எம்மால் காணமுடியவில்லை.

ஆனாலும் விஜயன் வருகைக்கு முன்னும், பின்னும் கலைவெளிப்பாடுகள் பற்றிய தகவல்கள் இராமாயணம், மகாபாரதம், ஸ்கந்தபுராணம், மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. இராவணன் கோட்டை, மாளிகைகள் போன்ற விடயங்கள் இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளன.

இலங்கையானது இந்திய உபகண்டத்திற்கு அண்மையில் கீழைத்தேசத்திற்கும், மேலைத்தேசத்திற்கும் இடையில் முக்கியமான ஸ்தானத்தில் அமைந்திருப்பதால் பற்பல நாடுகளுடன் வர்த்தக, கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தமதத்தின் வருகையுடன் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான கலாச்சாரத் தொடர்புகள் இறுக்கமடைந்தன. இதனால் வடஇந்தியக் கலாச்சாரத்தின் பாதிப்பானது இலங்கையில் ஏற்பட்டது. சோழர் ஆட்சி, சிங்கள அரசர்கள் பாண்டிய இளவரசிகளை மணம் முடித்தமை. தென்னிந்திய சிற்பிகள் மூலம் வழிபாட்டுத் தலங்களை அமைத்தவை போன்ற நிகழ்வுகளால் தென்னிந்தியத் தாக்கம் ஏற்பட்டது.

தாய்லாந்து போன்ற தென்கிழக்காசிய நாடுகளுடனும் சமயரீதியில் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக அந்நாட்டுக்கலாச்சாரத்தின் தாக்கமும் இங்கு ஏற்பட்டது. பொலநறுவையில் உள்ள சத்மஹால் பிரசாத என்னும் கட்டிடம் இதற்கு உதாரணமாகும்.

கிரேக்கம், உரோமபுரி, அரேபியா, சீனா (சீனமட்பாண்டங்களின் சிதைவுகள் யாப்பகூவாவில் உள்ளன.) போன்ற நாடுகளுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பினாலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சியாலும் இலங்கை கலாச்சாரத்தில் தாக்கங்கள் ஏற்பட்டன எனலாம்.

## இலங்கையின் சிற்ப, சித்திர, கட்டிடக்கலை வளர்ச்சிக் காலங்கள்:-

கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரையான காலம் இதில் அடங்குகின்றது. இக்காலத்தில் அரசநிர்வாகம் நடைபெற்ற இடத்தை மையமாக வைத்து நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### 1) அநுராதபுரக்காலம். (கி.மு. 3ம் நூற்றாண்டு - கி.பி. 9ம் நூற்றாண்டு)

அநுராதபுரத்தைக் கொண்டு ஆட்சி நிகழ்ந்த காலத்தில் ஆக்கப்பட்ட கலைவெளிப்பாடுகள் இதில் அடங்கும். இதுவே இலங்கையில் நுண்கலை ஆரம்பித்த காலமாகும். இக்கால கலை வெளிப்பாடுகளில் வடஇந்தியத் தாக்கம் கூடுதலாகக் காணப்படுகிறது.

இக்காலக் கட்டடங்களாவன:-

1) தூபராமதாதுகோபம்
2) இசுறுமுனிய விகாரை
3) அம்பத்தலை தாதுகோபம்
4) மிகிந்தலை கந்தகசைத்திய
5) மிகிந்தலை இந்திகடுசாய
6) றூவான்வெலிசாய
7) மிரிசுவெத்தி
8) லோபமகாபாய (ஆயிரம்கால் மண்டபம்)
9) அபயகிரி
10) லங்காராம
11) ஒட்டப்புவ தாதுகோபம்
12) ஜேதவனராம
13) நாலந்தகெடிகே
14) அத்தனகலை தாதுகோபம்

இக்கால சிற்பங்கள்:-

1) றூவான்வெலிசாய புத்தர்சிலை
2) மகாமேகவனப் புத்தர்சிலை
3) தொலுவில புத்தர்சிலை
4) இசுறுமுனிய சிற்பங்கள்
5) பங்குழிய புத்தர்சிலை
6) அவுக்கண புத்தர் சிலை
7) மகாஇலுப்பள்ளம புத்தர்சிலை
8) சஸ்சேறுவ புத்தர்சிலை
9) தந்திரிமலை புத்தர்சிலை
10) புதுறுவகல புத்தர்சிலை
11) பதுளை உலோகப்புத்தர்சிலை
12) சித்துல்பவ்வ போதிசத்துவர்சிலை
13) வெலிகம போதிசத்துவர்சிலை
14) தேவநம்பியதீசன் சிலை
15) துட்டகைமுனு சிலை
16) பாத்திய அரசன்சிலை
17) மிகிந்தலை கந்தகசைத்தியவில் கிடைக்கப் பெற்ற களிமண்தலைகள்
18) மாயாதேவியின் கனவு
19) சிராவஸ்தியின் அற்புதச்செயல்
20) மைத்திரேய போதிசத்துவர்
21) பத்தினி (தாராதேவி)
22) சந்திரவட்டக்கல்
23) காவற்சிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இக்கால ஓவியங்கள் காணப்படும் இடங்கள்:-

1) சிகிரியா 2) வெஸ்சகிரி 3) சிதுல்பவ்வ
4) கரகம்பல 5) கொனாகொல்ல 6) கொட்டியாகல
7) தொட்டகலகந்த 8) ஹிந்தகல 9) மிஹிந்தலை
10) றூவான்வலிசாய 11) மஹியங்கனை

## 2) பொலநறுவைக் காலம்: (கி.பி. 10ம் நூற்றாண்டு - கி.பி. 13ம் நூற்றாண்டு)

இக்கால கலைவெளிப்பாடுகள் தென்னிந்தியத் தாக்கத்திற்கு உட்பட்டவை ஆகும்.

### இக்காலக் கட்டடங்களாவன :-

1) 1ம், 2ம், 3ம், 4ம், 5ம் இலக்க சிவன் கோவில்கள் 2) ஹட்டதாகே
3) வட்டதாகே 4) தூபராம
5) பொலநறுவை இலங்காதிலக 6) கல்விகாரை
7) கிரிவிகாரை 8) பொத்குல்விகாரை
9) தெமழமகாசாய 10) றங்கொத்த விகாரை
11) நிசங்கலதா மண்டபம் 12) திவங்க ஆலயம்.
13) பபுலு விகாரை 14) விஷ்ணு ஆலயம்
15) அட்டதாகே

### இக்கால சிற்பங்கள் :-

1) பராக்கிரமபாகு சிலை 2) சிவன், பார்வதி, நடராஜர்,விஷ்ணு சிலைகள்
3) அப்பர், சுந்தரர், மணிவாசகர், சம்பந்தர், காரைக்கால் அம்மையார் சிலைகள் 4) கல்விகாரை புத்தர் சிலைகள்
5) வட்டதாகே புத்தர்சிலை 6) ஹட்டதாகே புத்தர் சிலை
7) திவங்க ஆலயப் புத்தர்சிலை 8) லங்காதிலக புத்தர் சிலைகள்
9) காவற்சிலைகள், சந்திரவட்டக்கல் 10) அட்டதாகே புத்தர்சிலை
11) போதிசத்துவர் சிலை 12) பபுலுவிகாரைப் புத்தர்சிலை

### இக்கால ஓவியங்கள் காணப்படும் இடங்கள் :-

1) திவங்க ஆலயம் 2) திம்புலாகல குகை.
3) கல்விகாரை வித்தியாதரகுகை 4) பொலநறுவை இலங்காதிலக
5) 2ம் சிவன் கோவில்

## 3) இடைக்காலம், கண்டிக்காலம் : (கி.பி. 14ம் நூற்றாண்டு - 1815)

பொலநறுவையை விட்டு இராச்சியம் தென்மேற்காக இடம் பெயர்ந்தது முதல் கண்டி ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட காலமான 1815 ம் ஆண்டு வரையான காலம் இதில் அடங்கும். இக்காலத்தில் யாப்பஹுவா, தம்பதெனியா, குருநாகல், கோட்டே, கம்பளை, கண்டி போன்றவை தலைநகரங்களாக இருந்துள்ளன.

### இக்காலக் கட்டடங்களாவன :-

1) யாப்பஹுவா 2) எம்பக்க தேவாலயம்
3) கம்பளை இலங்காதிலக 4) கடலதெனிய விகாரை
5) தெகல்தொறுவ 6) தலதாமாளிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) களனிவிகாரை

8) தம்பவா விகாரை

9) ரிதி விகாரை

10) மெதவல விகாரை

11) முல்கிரிகல விகாரை

12) சூரியகொட விகாரை

## இக்கால சிற்பங்கள் :-

1) எம்பக்க தேவாலய சிற்பங்கள்

2) யாப்பகூவ அரண்மனைச்சிற்பங்கள்

3) லங்காதிலக புத்தர்

4) கடலதெனிய புத்தர்

5) தெகல்தொறுவ புத்தர்சிலைகள்

6) தம்புள்ள புத்தர்சிலைகள்

7) கண்டி தலதாமாளிகையிலுள்ள சிற்பங்கள்.

**கண்டிக்கால ஓவியங்கள்** : தெகல்தொறுவ, தம்புள்ள, லங்காதிலக, தம்பவா, தம்பிட்டவிகாரை, தலதாமாளிகை, றிதிவிகாரை, களனிவிகாரையின் பழையமண்டபம் மெதவெலவிகாரை, முல்கிரிகல போன்றவற்றில் காணப்படுகின்றன.

## 4) கொழும்புக் காலம் :-


1815ம் ஆண்டிலிருந்து இன்றுவரையான காலம் இதில் அடங்குகிறது. தூபராமதாதுகோபம் போன்ற பல வழிபாட்டுத்தலங்கள் இக்காலத்தில் திருத்தப்பட்டன. களனி விகாரையில் புதிய மண்டபங்கள் அமைக்கப்பட்டு ஓவியங்கள் வரையப்பட்டன. பொன்னம்பலவாணேச்சரம் என்னும் சிவாலயம் கருங்கல்லினால் கொழும்பில் அமைக்கப்பட்டது.

## தாதுகோப நிர்மாண விருத்தி:-

உடல் எச்சங்களை அதாவது தாதுப்பொருட்களை வைத்துக் கட்டப்படுவதால் தாதுகோபம் என அழைக்கப்பட்டது. பெரியோர் எச்சங்களின் மீது எழுப்பப்பட்ட மணமேடு போன்ற சமாதி அமைப்பிலிருந்து தோன்றிவளர்ந்ததால் தூபி எனப்படுகின்றது. ஆரம்பத்தில் புத்தர்சிலை வணக்கம் வழக்கத்திலிருக்கவில்லை. இதனால் புத்தரின் வாழ்வுடன் இணைந்த சமயச்சின்னங்கள், எச்சங்கள் வைக்கப்பட்டு மணமேடு போன்று அமைக்கப்பட்ட தூபிகளை வணங்குவதன் மூலமாக புத்தரை வணங்கினர். பிற்காலத்தில் உடல் எச்சங்களைக் கொண்டிராத தூபிகளும் எழுந்தன. சமயத்தோடு இணைந்த சில இடங்களைப் பேணிக்காப்பதற்கும் தொழுவதற்கும் கூட தூபிகளை அமைத்தனர். இவ்வாறு இந்தியாவில் தோன்றிய தூபி அல்லது தாதுகோப வணக்கமானது பௌத்த சமயத்தின் பரம்பலுடன் வெவ்வேறு நாடுகளிலும் பரவிக் கொண்டது. ஒவ்வொரு நாடுகளிலும் வெளியமைப்பானது அந்நாடுகளுக்குரிய சிறப்பான முறைகளில் வளர்ச்சி கண்டது. இவ்வாறே இலங்கையிலும் பௌத்த சமயத்தின் வரவுடன் தூபி அல்லது தாதுகோபம் அமைத்தல் ஆரம்பமானது. இவை காலத்திற்குக் காலம் பல படிகளில் வளர்ச்சியைப் பெற்று இன்றுள்ள வடிவத்தை அடைந்துள்ளது.

தாது கோபம், தூபி, சைத்திய போன்ற சொற்கள் ஒரே கருத்தைக் கொண்டவை.

புத்தர்சிலை வணக்கத்திற்குமுன் தாதுகோபத்துடன் புனிதகாலடி, குடை,தர்மசக்கரம் போன்றவை வணங்கப்பட்டன.



## தாது கோபத்தின் பகுதிகளும் வடிவங்களும்.

தாது கோபமானது அடித்தளம், அண்டம், தூபி ஆகிய மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டிருக்கும்.

அடித்தளமானது நிலமட்டத்தை விட உயரமானதாகவும், சுற்றுப்பிரகாரங்களைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும். அடித்தளத்தின் மேல் அண்டம் அமைக்கப்படும். அண்டமானது கோளவடிவமானது. அண்டத்தின் மேல் தூபி அமைக்கப்படும். தூபியானது பின்வரும் பகுதிகளையுடையது.

1) அண்டத்துடன் இணைந்த சதுரவடிவமான பகுதி சதுரக்கோட்டம் எனப்படும். (ஹதரஸ் கொட்டுவ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) சதரக்கோட்டத்தின் மேல் உள்ள உருளைவடிவமான பகுதி தேவகோட்டம் எனப்படும். (தேவதா கொட்டுவ)


3) கோட்டவின் உச்சியிலுள்ள பகுதி சிகரம் (கொத்ஹறல்ல) எனப்படும்.

அடித்தளத்துடன் அமைந்த உயரமான சுற்றுப்பிரகாரத்திற்குச் செல்ல அநேகமாக நான்கு திசைகளிலும் வாசல்கள் அமைக்கப்பட்டிருக்கும். வாசலானது நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

1) உயரத்திற்கேற்ப அமைந்த படிகள்
2) படிகளின் இருபுறமும் கைப்பிடிவரிசை
3) கைப்பிடிவரிசையின் முன்பாக படிகளின் இருபுறமும் காவற்சிலை
4) படிகளின் இறுதியில் சந்திரவட்டக்கல்


சுற்றுப்பிரகாரத்தைப் பிரிப்பதற்காகக் கட்டப்படும் சுவர் வேதிகை எனப்படும். வேதிகைக்கு உட்பக்கமிருப்பது 1ம் சுற்றுப்பிரகாரம், வெளிப்புறம் இருப்பது 2ம் சுற்றுப்பிரகாரம், ஒன்றிற்கு மேற்பட்ட வேதிகைகளும் அமைக்கப்படலாம்.சுற்றுப்பிரகாரத்திலுள்ள முற்றம் சலபத்மமுவ எனப்படும்.

அடித்தளத்தில் அண்டம் ஆரம்பிக்கும் இடத்தில் அண்டத்தைச் சுற்றிவர மூன்றுவரிகளில் படிக்கட்டுக்கள் போல் அமைந்த பகுதியானது துன்மால் பேசாவா / பேசாவளலு/புஸ்பதான எனப்படும். இந்தியாவில் உள்ள தூபிகளில் இவ்வமைப்பு மேதிய எனப்படுகிறது.




## வாஹல்கட :-

தாது கோபத்தின் நான்கு வாசல்களுக்கும் எதிராக அண்டத்துடன் அமைக்கப்பட்டிருக்கும் செதுக்கல் வேலைப்பாடு கொண்ட அமைப்பே வாஹல்கட ஆகும். இதன் புராதனகாலப்பெயர் அயக்க என்பதாகும். இந்தியாவில் சாஞ்சி தூபியில் காணப்படும் தோரணத்திற்குப் பதிலாக இலங்கைச் சிற்பிகள் இதனை அமைத்தார்கள் எனக் கருதப்படுகிறது. கந்தகசைத்திய, றங்கொத்தவிகாரை, ரூவான்வெலிசாய ஆகியவற்றில் காணப்படுகிறது.



## சங்கிராமம் :-

தாதுகோபத்துடன் சேர்ந்ததாக சிலைமனை, போயாமனை, போதிமனை (அரசமரம்) பொக்குண (குளம்) முறகே (காவல்நிலையம்) உபோசத இல்லம் (விரத இல்லம்) போன்றவை ஒருங்கே காணப்படும். இவை எல்லாம் ஒன்று சேர சங்கிராமம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாதுகோபத்தின் வடிவங்கள் :-

அண்டத்தின் வடிவத்தை அடிப்படையாக வைத்து ஆறுவகையாகப் பிரிக்கப்படலாம். அவையாவன.

1) தானியகார (நெற்குவியல் வடிவம்) உ-ம் :- களனி, ஒட்டப்புவ தாதுகோபம்.
2) ஹண்டகார (மணிவடிவம்) உ-ம் :- தூபராம தாதுகோபம்
3) ஹெற்றகார (பானைவடிவம்) உ-ம் :- மிரிஸ்வெத்தி தாதுகோபம்
4) புலகார ( நீர்க்குமிழி வடிவம்) உ-ம் :- ருவான்வெலிசாய
5) ஆமலகார (நெல்லிக்காய் வடிவம்)
6) பத்மகார (தாமரை வடிவம்)

ஆமலகார, பத்மகார ஆகிய வடிவங்களில் இலங்கையில் தாதுகோபங்கள் அமைக்கப்படவில்லை.




தானியகார புலகார ஹெற்றகார ஹண்டகார

## இலங்கையின் தாதுகோபங்கள் :-

### 01. தூபராமதாதுகோபம் :-

இதுவே இலங்கையில் முதன்முதலில் அமைக்கப்பட்ட தாதுகோபமாகும். இது அநுராதபுரத்தில் தேவநம்பியதீசனால் கி.மு. 3ம் நூற்றாண்டில் நெற்குவியல் வடிவில் அமைக்கப்பட்டது. இது 1842இல் மணிவடிவமாகத் திருத்தப்பட்டது. 59அடி விட்டமுடையது. இத்தாது கோபத்தைச்சூழ நான்கு வட்டங்களில் சிறந்த செதுக்கல்கள் உள்ள போதிகைகளைக் கொண்ட 88 தூண்கள் காணப்படுகின்றன. இத்தூண்களின் மேல் தாது கோபத்தைப் பாதுகாப்பதற்காக வட்டதாமனை அமைக்கப் பட்டிருத்தல் வேண்டுமெனக் கருதப்படுகிறது.



### 02. ருவான்வெலிசாய :-

கி.மு. 2ம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் துட்டகைமுனுவால் அமைக்கப்பட்டது. நீர்க்குமிழி வடிவமுடையது. 298அடி விட்டமுடையது. இது மகாதூபி எனவும் அழைக்கப்படுகிறது. இதன் நாலு பக்கங்களிலும் வாஹல்கடங்களும், பூவில்லங்களும் காணப்படுகின்றன. சுற்றியுள்ள கல்மதிலில் யானைத்தலைகள், வாமன உருவங்கள், இலைக்காட்டுருக்கள் போன்றவை செதுக்கப்பட்டுள்ளன. தாதுகோபத்தின் சுற்றுப்பிரகாரத்தில் தாதுகோபத்தின் நகல் ஒன்று கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இது உபயதூபி எனப்படுகிறது. இது 4அடி 2 அங்குல உயரமுடையது. சிலைமனையின் வாசலில் நான்கு ஒரே மாதிரியான புத்தர் உருவங்கள் உள்ளன.




உள்ளே புத்தர்சிலை எல்லாளன், துட்டகைமுனு ஆகியோர் படைவீரர்களுடன் யானையில் அமைந்துள்ள சிற்பங்கள், ருவான்வெலிசாயவின் வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியம் என்பன உண்டு. வாசலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புறம் துட்டகைமுனு, விகாரமகாதேவி சிலைகள் உள்ளன.


கி.மு 59-50 இறகிடையில் துட்டகைமுனுவின் தம்பி மகனான இலஞ்சதீசன் இதற்கு சிற்பவேலைகள் செய்வித்துள்ளதாக வரலாறு கூறுகிறது.

03. மிரிசுவெத்தி :-



அநுராதபுரத்தில் துட்டகைமுனுவால் அமைக்கப்பட்டது. பானை / குட வடிவமுடையது. 168அடி விட்டம் உடையது. 200அடி உயரமுடையதாகும். மேலுள்ள தூபி தற்போது காணப்படவில்லை. வாஹல்கடங்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.


04. அபயகிரி :-



கி.மு. 1ம் நூற்றாண்டில் வட்டகாமினி அபயனால் (வலகம்பாகு) அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டது. இலங்கையில் இரண்டாவது பெரிய தாதுகோபம் இதுவாகும். 375அடி வரை உயரம் உடையது. ரூவான்வெலிசாய போன்ற வாஹல்கட அமைப்பு, சந்திரவட்டக்கல், குள்ளர் உருவத்தைக்கொண்ட காவற்சிலைகள் போன்றன காணப்படுகின்றன.

முதலாம் கஜபாகுவினால் இத்தாதுகோபம் திருத்தப்பட்டதாகவும், கனிஷ்டதீசனால் இதற்கு வாஹல்கடங்கள் அமைப்பிக்கப்பட்டதாகவும் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

05. இலங்காராம :-



இத்தாதுகோபம் அபயனால் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டதாகும். இதன் பழையபெயர் சிலாசொப்பகந்தக ஆகும். 44அடி விட்டமுடையது.

06. அத்தனகலை தாது கோபம் :-

இது கோடாபயன் என்னும் அரசனால் கி.பி. 309 - 322 ம் ஆண்டுகளுக்கிடையில் அமைக்கப்பட்டதாகும். மேல்மாகாணத்தில் உள்ள அத்தனகலையில் உள்ளது.

07. ஜேதவனராம :-



இலங்கையில் மிகஉயர்ந்த தாதுகோபம் இதுவாகும். மகாசேனன் என்னும் மன்னனால் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டது. உயரம் 390 அடி. நான்கு புறமும் செதுக்கல் வேலைகொண்ட கல்வேலியும், வாஹல்கடங்களும் உள்ளன. பாம்பின் உருவத்தைக் கொண்ட காவற்சிலைகளும் இங்கு காணப்படுகின்றன.

08. அம்பத்தலை தூபி , மகாதூபி மிஹிந்தலை :-


அம்பத்தலைதூபி மிஹிந்தலையில் மஹிந்தரை தீசன் சந்தித்த இடத்தில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேவநம்பிய தீசன் காலத்தில் அமைக்கப்பட்டது. 29அடி உயரமுடையது. மிஹிந்தலை மகாதூபி கி.பி 67-79 ஆண்டிற்கிடையில் மகாநாகன் என்னும் அரசனால் அமைக்கப்பட்டது. 136அடி விட்டமுடையது.

## 09. கந்தகசைத்திய :-

மிஹிந்தலையில் காணப்படுகின்றது. இத்தாது கோபத்தை அமைத்தவரின் பெயர் வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படவில்லை. இலஞ்சதீசன் என்னும் அரசனால் கி.மு 59-50ம் ஆண்டுகளுக்கிடையில் திருத்தப்பட்டுள்ளது. இலங்கையில் சிறந்த வாஹல்கடங்களைக் கொண்ட தாதுகோபம் இதுவாகும். இதன் நான்கு புறமும் உள்ள வாஹல்கடங்கள் கருங்கற்களால் ஆக்கப்பட்டுள்ளது. வாகல்கடங்களில் கிழக்கில் யானையும், வடக்கில் சிங்கமும், தெற்கில் எருதும், மேற்கில் குதிரையும் செதுக்கப்பட்டுள்ளது.







வாகஹல்கட செதுக்கல்கள்

## 10. ஒட்டப்புவ தாதுகோபம்:-

அநுராதபுரத்தில் ஒட்டப்புவ என்னும் இடத்தில் காணப்படுகிறது. நெற்குவியல் வடிவமானது.

## 11. கிரிவிகாரை தாதுகோபம் :-



கி.பி. 12ம் நூற்றாண்டில் மகாபராக்கிரம பாகுவினால் பொலநறுவையில் அமைக்கப்பட்டது. 88 அடி உயரமுடையது.


## 12. தெமழமகாசாய (உனகலாவிகாரை) :-



இத்தாதுகோபம் பராக்கிரமபாகுவினால் பொலநறுவையில் அமைக்கப்பட்டது. ஆனால் முழுமை பெறவில்லை. முழுமையாக அமைந்திருப்பின் இதுவே இலங்கையின் மிகப்பெரிய தாதுகோபமாக இருந்திருக்கும் எனக் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இரங்கொத்த விகாரை :-



இத்தாதுகோபம் கி.பி. 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொலநறுவையில் நிசங்கமல்லனால் அமைக்கப்பட்டது. 186அடி உயரமுடையதாகும். நான்குபுறமும் வாஹல்கடங்களும் ,வாஹல்கடங்களுக் கிடையே 8 சிலைமனைகளும் உள்ளன. சிலைமனையில் புத்தர் உருவங்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன.


14. பபுலு விகாரை:-



பொலநறுவையில் பராக்கிரமபாகுவின் மனைவி ரூபாவதியால் அமைக்கப்பட்டது. மேற்பகுதி முற்றுப்பெறவில்லை. இதன் வடிவம் ஏனைய தாது கோபங்களை விட வேறுபட்டது.

**விகாரைகளில் சிறப்புப் பெற்றவை:-**

01. இசுறுமுனிய விகாரை :-



அநுராதபுரத்தில் இசுறுமுனிய என்னும் இடத்தில் தேவநம்பியதீசன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள சிற்பங்கள் காலத்தால் பிற்பட்டவையாகும். உள்ளே வலதுபுறம் சரிந்த நிலையில் துயில் கொள்ளும் புத்தரின் உருவம் வர்ணம் தீட்டப்பட்டுக் காணப்படுகிறது. அருகில் உள்ள நூதனசாலையில் காதலர்சிலை, தேவர்உருவம், அரசகுடும்பம், அப்சரா, வாமன உருவம், கின்னரர், கல்லாசனம், சிங்கஉருவம் என்பன சிற்பங்களாக உள்ளன. பாறையுடன் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கும். விகாரையில் புத்தர், ஆனந்தர், சீவலிபிக்கு, தேவனம்பியதீசன், அமைச்சன், சாலிய குமரன், விஷ்ணு சிற்பங்கள் உள்ளன. உள்ளே இசுறுமுனியவின் சரித்திரம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. குளத்திற்கு அருகிலுள்ள பாறையின் மேற்புறத்தில் குதிரைத்தலையும் போர்வீரனும் சிற்பமும், அடிப்புறத்தில் குளத்து நீருடன் தொடுமாறு குளிக்கும் யானைகள் செதுக்கலும் காணப்படுகிறது.

02. கல்விகாரை :-


இது பொலநறுவையில் நீண்ட கற்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட புத்தர் சிலைகளைக் கொண்ட சிலைமனையாகும். 12ம் நூற்றாண்டில் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்டது. இதன் முன்னைய பெயர் உத்தரராமய.


இங்கு மூன்று நிலைகளிலும் நாலு புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. இங்குள்ள முக்கியமான சிலைகள் நான்கிற்கும் தனித்தனியாக விகாரைகள் அமைக்கப்பட்டிருந்தன. எனினும் இடைச்சுவர்கள் இப்போது சிதைந்துவிட்டன. கற்பாறையின் தன்மைக்கேற்ப சிலைகள் ஆக்கப்பட்டுள்ளன. இங்குள்ள வித்தியாதரக்குகையில் பொலநறுவைக்கால ஓவியங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதில் நீண்ட வெண்ணிறத் தாடியுடன் முதியவரொருவரின் உருவம் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. திவங்க ஆலயம் :- (பொலநறுவை ஜேதவனராமய)

இது பொலநறுவையில் 12ம் நூற்றாண்டில் 1ம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட சிலைமனையாகும். தென்னிந்திய திராவிட சிற்பமுறையில் அமைந்தது. மண்டபம், அந்தராளம், கர்ப்பக்கிரகம் ஆகிய மூன்று பகுதிகளை உடையது. மூன்று புத்தர் சிலைகள் உள்ளன. இங்குள்ள கர்ப்பக்கிரகத்தில் உள்ள நின்ற புத்தர் சிலையானது செங்கல்லினால் ஆக்கப்பட்டது. திரிபங்கநிலையில் அமைந்துள்ளது. பெண் வாமன உருவங்கள் காணப்படும் ஒரேயொரு இடம் இதுவாகும். பொலநறுவைக்கால ஓவியங்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இது மூவம்ச சிற்பக்கூடம் எனவும் அழைக்கப்படுகின்றது.


திவங்கஆலயக்கட்டிடம்



விமானம்


சிற்பம்

## 04. பொலநறுவை இலங்காதிலக :-

பொலநறுவையில் கி.பி. 12ம் நூற்றாண்டில் 1ம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்டது. மிகஉயர்ந்த விகாரை இதுவாகும். செங்கற்களால் ஆக்கப்பட்ட நின்ற நிலைப்புத்தர்சிலை காணப்படுகின்றது. சிறந்த கைபிடிவரிசை, காவற்சிலை, படிக்கட்டுக்கள் போன்றவற்றையும் இங்கு காணலாம். வாசலிலுள்ள தூண்களில் தேவர் உருவங்கள் காணப்படுகின்றன.


இலங்காதிலக கட்டிடம்


விமானம்


சிற்பம்

## 05. பொலநறுவை தூபராமய:-

12ம் நூற்றாண்டில் பொலநறுவையில் அமைக்கப்பட்ட இக்கட்டிடம் இன்றும் நல்லநிலையில் காணப்படுகின்றது. கர்ப்பகக்கிரகம், மண்டபம், அந்தராளம், விமானம் ஆகிய இந்துமத கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்டது. இவ்விகாரையின் கூரையானது சாலபஞ்சிகா (சைவக்கோவில் கூரை அமைப்பு) என அழைக்கப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. இவ்விகாரையின் வெளிச்சுவர்கள் மிருகங்களின் அலங்காரம், தாதுகோப நகல்கள், சிறிய தூண்கள் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. உள்ளே நடுவில் அமர்ந்த புத்தர் சிலையும் இருபுறமும், நின்ற புத்தர் சிலைகளும் உள்ளன.

## 06. கடலதெனிய :-



கண்டியில் கடலதெனிய என்னுமிடத்தில் கி.பி. 14ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். இலங்கையில் முழுவதும் கருங்கல்லினால் ஆன ஒரேயொருவிகாரை இதுவாகும். ஒருங்கிணைக்கப்பட்ட மும்முன்று தூண்களையும், தட்டையான கூரைஅமைப்பையும் உடையது. மூலஸ்தானத்தில் தலையில் ஒளிச்சுடருடன் கூடிய அமர்ந்தநிலைப்புத்தர் சிலை காணப்படுகிறது. தென்னிந்திய சிற்பமுறையில் அமைந்த இவ்விகாரையின் சிற்பவேலைக்குப் பொறுப்பான சிற்பி கணேசாச்சாரி என்பவராவார்.

## 07. கம்பளை இலங்காதிலக :-



14ம் நூற்றாண்டில் நான்காம் புவனேகபாகுவின் அமைச்சர் சேனா இலங்காதீர என்பவரால் சிறிய மலையொன்றின் உச்சியில் இவ்விகாரை அமைக்கப்பட்டதாகும். செங்கற்களால் அமைக்கப்பட்ட இவ்விகாரை ஏனையவிகாரைகளை விட விசாலமானதாகும்.

உட்புறத்தில் அமர்ந்தசிலையும், இருபறமும் நின்றபுத்தர் சிலைகளும் காணப்படுகின்றன. மூலஸ்தானத்தில் உள்ள புத்தர்சிலை தலையில் ஒளிச்சுடரையும், அலையலையான ஆடைமடிப்பையும், திறந்த கண்களையும் உடையது.


இங்கு ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கும் கண்டிக்கால ஓவியங்களும், மேற்கூரைகளில் கொடிஅலங்காரங்களும், மகரதோரணமும், கஜசிம்ம அலங்காரங்களும் உள்ளன. வாசலில் முழுத்தாமரை அலங்காரம் கொண்ட சந்திரவட்டக்கல் காணப்படுகின்றது.

இங்குள்ள சிற்ப வேலைப்பாடுகளுக்குப் பொறுப்பான சிற்பி ஸ்தபதிராயர் என்பவராவர்.

## 08. ஹிந்தகல:-

கண்டியில் ஹிந்தகல என்னுமிடத்தில் காணப்படுகின்றது. இது ஓர் கற்குகை விகாரையாகும். 27அடி நீளமான துயில் நிலைப்புத்தர் சிலையொன்றுள்ளது. இங்குள்ள ஓவியங்களில் அநேகமானவை அழிந்த நிலையில் உள்ளன. இச்சித்திரங்கள் சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டபின் வரையப்பட்டவையாகக் கருதப்படுகின்றது.

## 09. தம்புள்ள:-



மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள என்னுமிடத்தில் 500அடி உயரமான குன்றில் காணப்படும் குகைவிகாரையாகும். இங்கு 5 குகைப்பிரிவுகள் உள்ளன.

அபயன் , நிசங்கமல்லன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் போன்றோர் காலத்திற்குக் காலம் இக்குகையில் ஓவியம் வரைந்து புதுப்பித்து வந்ததாக கூறப்படுகின்றது. இங்குள்ள ஓவியங்களை அனுராதபுரக் காலத்தவை, பொலநறுவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தவை, கண்டிக் காலத்தவை, தற்காலத்தவை என வேறுபடுத்தலாம். இலங்கையில் கூரைச்சித்திரங்களுக்குப் பெயர்பெற்ற இடம் இதுவாகும். மாத்தளை நீலகம பரம்பரையினர் இங்கு ஓவியங்களை வரைந்துள்ளனர். மூன்று நிலைகளிலும் பல புத்தர்சிலைகள் உள்ளன. முதலாவது விகாரையின் கூரையில் 24 புத்த நிலைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இரண்டாவது குகையில் சிறந்த மகரதோரணம் காணப்படுகின்றது. இதில் யானையின் வாய்க்குப்பதிலாக மகரத்தில் சிங்கத்தின்வாய் காணப்படுகின்றது.

## 10. தெகல்தொறுவ:-

கண்டியில் மகாவலி ஆற்றங்கரையில் இருபாறைகள் சேருமிடத்தில் காணப்படுகின்றது. கண்டிக்கால மிகப் பிரபல்யம் வாய்ந்த விகாரை இதுவாகும். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் மொறத்தொட்ட தம்மங்கந்தி என்னும் பௌத்தபிக்குவினால் இவ்விகாரை அமைக்கப்பட்டதாகும். இவ்விகாரையின் வாசலில் மரத்தால் ஆக்கப்பட்ட மகரதோரணம் காணப்படுகின்றது. மகரதோரணத்தில் நான்கு பறவை உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உள்ளே நான்கு வரிசையில் நான்கு ஜாதகக் கதைகள் வரையப்பட்டுள்ளன.

## 11. றிதிவிகாரை:-




றிதிகலை என்ற இடத்தில் கற்பாறையுடன் சேர்த்து இவ்விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இவ்விகாரையில் கலையம்சம் நிறைந்த மகரதோரணம் காணப்படுகின்றது. கற்செதுக்கல், யானைத்தந்தச் செதுக்கல் ஆகியவற்றுடன் கண்டிக்கால ஓவியங்களும் காணப்படுகின்றன.

## 12. களனி விகாரை:-

கொழும்பில் களனியில் அமைந்துள்ளது. விகாரையுடன் நெற்குவியல் வடிவத்தாது கோபமும் காணப்படுகின்றது. இவ்விகாரை தென்னிந்திய சிற்ப முறையில் அமைக்கப்பட்டதாகும். இதன் பழைய மண்டபத்தில் ஜாதகக்கதைகளைச் சித்தரிக்கும் கண்டிக்கால ஓவியங்களும் புதிய மண்டபத்தில் சோளியஸ் மெண்டிசினால் வரையப்பட்ட தற்கால ஓவியங்களும் உள்ளன.


விகாரைக் கட்டிடத்தின் அடிப்பாகத்தில் அன்னம், குள்ளர், யானைகள், போன்றன வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன. நடுப்பகுதியில் மகரதோரணத்தின்கீழ் தேவர் உருவங்கள் மகரத்தின்மேல் நிற்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது.



களனி விகாரை, தாதுகோபம்



தோறணவாசல்



செதுக்கல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. கோதமி விகாரை:-


கொழும்பில் பொரளையில் அமைந்துள்ளது. ஜோர்ஜ் கீத் என்னும் ஓவியரால் வரையப்பட்ட புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகளைச் சித்தரிக்கும் தற்கால ஓவியங்கள் இங்கு வரையப்பட்டுள்ளன.

## 14. தலதா மாளிகை - கண்டி (புனித தந்த ஆலயம்):-

புத்தரின் தந்தமானது மகாமேகவனம், ஹட்டதாகே, பெலிகலை, தம்பதெனிய, யாப்பஹுவ, போன்ற இடங்களின் பின் விமலதர்மசூரியனால் அமைக்கப்பட்ட கண்டி தலதா மாளிகையில் வைக்கப்பட்டது. இங்குள்ள பத்திரிப்புவ என்னும் எண்கோண மண்டபம் கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் தொடங்கப்பட்டு விக்கிரமராஜசிங்கன் காலத்தில் முடிக்கப்பட்டது. இங்குள்ள தூண்கள் நாயக்கர் சிற்பமுறையில் அமைக்கப்பட்டவையாகும். கண்டிக்கால ஓவியங்கள், கூரைச்சித்திரங்கள் , மகரதோரணங்கள், தற்காலத்தில் அமைக்கப்பட்ட நுண்ணிய வேலைப் பாடமைந்த கதவுகள் போன்றவற்றைக் காணலாம். வெளிப்புற வாசலின் இருபுறமும் யானையும் பாகனும் செதுக்கப்பட்ட புடைப்புச்சிற்பமும் காணப்படுகிறது.

இங்கு ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் காலத்தில் தேவேந்திர மூலாச்சாரி என்னும் சிற்பியைக்கொண்டு வளைவான வேலைப்பாடமைந்த சுற்றுமதில் அமைக்கப்பட்டது.





வாசலில் காணப்படுகின்ற சிற்பம்

## 15. எம்பக்க தேவாலயம்:-

14ம் நூற்றாண்டில் நான்காம் புவனேகபாகுவின் காலத்தில் கம்பளையில் அமைக்கப்பட்டது. இது இலங்கையின் மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்குப் பெயர்பெற்ற இடமாகும். இங்கு கம்மாலு என்னும் மரத்தினால் ஆக்கப்பட்ட 32 தூண்களில் 128 சிற்பங்கள் காணப்படுகின்றன. வாசலில் 10 தூண்களாலான சிறிய மண்டபமொன்று உள்ளது. இங்குள்ள தூண்கள் நாயக்கர் சிற்பமுறையில் அமைந்துள்ளன.

இக்கட்டிடத்தின் கூரையமைப்பு தனித்துவமானது. ஒரு மையத்திலிருந்து 26 கம்புகள் நாற்புறமும் செல்கின்றன. மையத்தில் பின்னறமல அலங்காரம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வகைக் கூரையமைப்பு மடல்குருப்பாவ எனப்படுகின்றது. இங்குள்ள சிற்பவேலைப்பாடுகளுக்குப் பொறுப்பானசிற்பி தெல்மடமூலாச்சாரி ஆவார்.


இங்குள்ள சிற்பங்கள் சதுரவடிவான கட்டங்களில் இடத்தை நிரப்பும் வகையில் தாழ்புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவையாவன-

01) நடனமாது - இது கண்டிய நடனத்தொனியில் அமைந்தசிற்பம்.
02) றபானா அடித்தல் - அக்காலச் சமுகவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிற்பம்.
03) மல்யுத்தவீரர் - அக்காலச் சமுகவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிற்பம்.
04) கின்னரப்பெண் - மேற்புறம் பெண்ணின் உருவத்தையும் கீட்புறம் பறவையின் உருவத்தையும் கொண்ட கற்பனை அமைப்பு.
05) கஜசிம்ஹ - யானைத்தலைகொண்ட சிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


06) ஹம்சபூட்டுவ - அன்னப்பிணையல்
07) நாரிலதா - பெண்ணைப்போன்ற உருவமுடைய கற்பனைப்பூ
08) பேருண்டப்பறவை - இருதலைப்பட்சி
09) ஏத்ஹந்தலிகினிய - குஞ்சரப்பட்சி
10) பாலுட்டும்தாய் - தாயன்பைப்பிரதிபலிக்கும் சிற்பம்.
11) உசம்ப குஞ்சரம் - யானையும் மாடும் சேர்ந்த வடிவம்
12) குதிரைவீரன் - சவுக்குடன் குதிரையில் செல்லும் மனிதனைக் கொண்ட சிற்பம்.
13) ஹம்சம் - அன்னப்பட்சி
14) சாரிய அன்னப்பட்சி - அன்னத்தின் ஒருவகை.
15) பின்னறமல - நான்கு இதழ்களுடைய சதுரவடிவமுடைய பூ



மல்யுத்தவீரர்



குதிரைவீரன்



கின்னரப்பெண்


நடனமாது


றபானா அடித்தல்


பேருண்டபக்ஷய


ஹம்சபூட்டுவ


நாரிலதாவெல


போர்வீரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. வட்டதாகே:-


தாதுகோபத்தினைப் பாதுகாக்கக் கட்டப்படும் அமைப்பே இதுவாகும். மெதிரிகிரிய, பொலநறுவை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

மெதிரிகிரிய வட்டதாகே பராக்கிரமபாகுவினால் கி.பி 12ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். நிஸங்கமல்லன் காலத்தில் புனரமைக்கப்பட்டு சிற்பவேலைகளும் செய்யப்பட்டன. நடுவில் 7 அடிஉயரமான தாதுகோபத்தின் சிதைவுகள் காணப்படுகின்றன. இதில் சிற்ப வேலைப்பாட்டைக்கொண்ட 68 தூண்கள் உள்ளன. நான்கு பக்கங்களிலும் வாசல்கள் உள்ளன. வாசலில் சந்திரவட்டக்கல் , காவற்சிலைகள், சித்திரப் படிக்கட்டுகள் கைபிடிவரிசை போன்றன உள்ளன.

பொலநறுவை வட்டதாகே நிஸங்கலதா மண்டபத்திற்கும், ஹட்டதாகேயிற்கும் இடையில் காணப்படுகின்றது. முதல் தளத்திற்கு செல்லும் நுளைவாசல் கைபிடிவரிசை , சந்திரவட்டக்கல், காவற்கற்கள், படிகள் போன்றவற்றைக் கொண்டது. படிவரிசையில் சிரிப்பூட்டும் வாமன உருவங்கள் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன.

இரண்டாவது தளத்திற்குச்செல்ல நான்கு வாசல்கள் உள்ளன. இவற்றில் உள்ள சந்திரவட்டக்கற்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. இரண்டாவது தளத்தில் கட்டிடத்தைச் சுற்றிவர மூன்றுஅடி உயரமான சுவர்கள் உள்ளன. இதில் சிங்கவரிசை அலங்காரம் செதுக்கப்பட்டுள்ளது. அடித்தளத்தின் சுவர்களில் குள்ளர், பின்னறமல போன்ற அலங்காரங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இதன் நடுவே பழுதடைந்த தாதுகோபம் உள்ளது. நான்கு பக்கமும் நான்கு புத்தர் சிலைகள் அமர்ந்த நிலையில் உள்ளன. இச்சிலைகளின் கேசம் சுருளற்றுத் தட்டையாகவும், அங்கி உடலோடு ஒட்டியதாகவும் காணப்படுகின்றது. தரையிலும் செப்பனிடப்பட்ட கற்கள் பதிக்கபட்டுள்ளன. 68 தூண்கள் மூன்று வரிசைகளில் உள்ளன. இவற்றின் போதிகைகள் சிறந்த சிற்ப வேலைப்பாட்டினைக் கொண்டுள்ளன. இத்தூண்களில் வட்ட அமைப்புடைய கூரை இருந்ததாகக் கருதப்படுகின்றது.



வட்டதாகே - மெதிரிகிரிய வட்டதாகே - பொலநறுவை

## 17. மெதவல விகாரை, தம்பவா விகாரை, தம்பிட்ட விகாரை, சூரியகொட விகாரை:-

மெதவலவிகாரை கண்டியில் ஹாரிஸ்பத்துவவில் காணப்படுகின்றது. 18ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. உயரம்குறைந்த கதவும் , ஜன்னல்கள் அற்றும் காணப்படுவதால் எந்நேரமும் உட்புறம் இருளாகவே உள்ளது. வெஸ்ஸந்தரா ஜாதகம், போதிமரமும் புத்தரும் சம்பந்தப்பட்ட காட்சிகள், நாகராஜன் உருவம் போன்றவை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

ஏனைய மூன்று விகாரைகளும் கண்டிக்காலத்திற்குரியன. 18ம் நூற்றாண்டைச் சேர்ந்தன. மூன்றுஅடி உயரமான கற்றூண்களின்மேல் அமைக்கப்பட்டுள்ளமை இவ்விகாரைகளின் சிறப்பம்சமாகும். இவ்விகாரைகளிலும் ஜாதகக்கதையைச் சித்தரிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

## 18. அட்டதாகே:-

ஹட்டதாகே அருகில் அட்டதாகே என்னும் கட்டிடம் உள்ளது . 75அடி நீளமானது. 54 தூண்களைக்கொண்டுள்ளது.தூண்களில் செதுக்கல்கள் காணப்படுகின்றன. இதிலும் ஒன்பது அடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர நின்றநிலைப் புத்தர் சிலையொன்றுள்ளது. விஜயபாகுவினால் புத்தரின் பல்லை வைப்பதற்கு அமைக்கப்பட்டதாகும். இது ஹட்டதாகேயிலும் காலத்தால் முற்பட்ட கட்டிடம். வாசலில் சந்திரவட்டக்கல், கைபிடிவரிசை ஆகியன உள்ளன.



## 19. ஹட்டதாகே:-


இது பொலநறுவையில் புத்தரின் பல்லை வைப்பதற்கு அமைக்கப்பட்ட புனிததந்த ஆலயம் ஆகும். வட்டதாகேயிற்கு முன்புறம் உள்ளது. நிஸங்மல்லனால் அமைக்கப்பட்டது. அறுபது நாட்களில் அமைப்பிக்கப்பட்டதால் இப்பெயரைப் பெற்றது. இங்கு மூன்று நின்ற நிலைப்புத்தர் சிலைகள் உள்ளன. அடித்தளத்தில் அன்னம், வாத்து அலங்காரங்கள் செதுக்கப்பட்டுள்ளன.



# இலங்கையிலுள்ள சிறந்த பண்டைக்காலக் கட்டிடங்கள்:-


## 01. நிஸங்கலதா மண்டபம்:-

நிஸங்கமல்லனால் பொலநறுவையில் கி.பி 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டது. வட்டதாகே, தூபராமய போன்றவற்றிற்கு அருகில் உள்ளது. தாமரைத் தண்டின் வடிவத்தில் இதன் தூண்கள் அமைக்கப்பட்டிருப்பது இக்கட்டடத்தின் சிறப்பியல்பாகும். உட்புறத்தில் 3அடி உயரமுடைய சிறிய தாதுகோபம், சிங்காசனம் என்பனவும் வாசலில் சந்திரவட்டக்கல், காவற்சிலை என்பனவும் காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### 02. நாலந்த கெடிகே:-




கி.பி 7ம் நூற்றாண்டில் (மாமல்லபுரக் காலம் ) அமைக்கப்பட்ட கட்டிடமாகும். பௌத்த கட்டிடமான இது கோவில் போன்ற தோற்றத்தை உடையது. பல்லவ சிற்பமுறையில் அமைந்தது. கல்லால் ஆனமையால் கெடிகே எனவும் நாலந்த சர்வகலாசாலையின் பெயரால் நாலந்த எனவும் சேர்த்து இப்பெயரைப் பெற்றது. அனுராதபுரக்காலத்திற்குரிய சிறந்த கருங்கற் கட்டிடமாகும்.

### 03. பொலநறுவை அரசசபை மண்டபங்கள்:-

பொலநறுவையில் பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் ஆகியோரால் அமைக்கப்பட்ட இரண்டு மண்டபங்கள் உள்ளன. . இரண்டுமே உயரமான அடித்தளத்தைக் கொண்டவை' கூரை அழிந்துவிட கூரையைத்தாங்கிய தூண்கள் மட்டும் காணப்படுகின்றன. வாசலின் இருபுறமும் சிங்கங்கள், கைபிடிவரிசை போன்றன செதுக்கப்பட்டுள்ளன. பராக்கிரமபாகுவின் அரசசபை இராஜவெஸ்ய பூஜாங்க எனப்படுகிறது.



பராக்கிரமபாகுவின் அரசசபை மண்டபம்



நிஸங்கமல்லனின் அரசசபை மண்டபம்

### 04. பொலநறுவை சிவன் கோவில்கள்:-

பொலநறுவைக் காலத்தில் 5 சிவாலயங்கள் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. ஆனால் தற்போது மூன்று சிவாலயங்களே எஞ்சியுள்ளன. ஓராம் சிவாலயம் காலத்தால் பிற்பட்டது, பாண்டிய சிற்பமுறையில் அமைந்தது. இதில் நந்தி, செங்கல்லால் அமைக்கப்பட்ட கோபுரம் போன்றவை காணப்படுகின்றன.


இரண்டாம் சிவாலயம் பதினோராம்நூற்றாண்டில் (கி.பி 1020 - 1042) இராஜராஜசோழனால் அமைக்கப்பட்டது. ஓராம் சிவாலயத்தைவிட அளவில் பெரியதும் கருங்கல்லில் அமைக்கப்பட்டதுமாகும். சோழர் சிற்பமுறையில் அமைந்தது . வானவன்மாதேவி ஈசுரமுடையார் ஆலயம் எனவும் வழங்கப்படுகின்றது. அடித்தளத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் மிருக உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உள்ளே ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இங்கு சிவன் பார்வதி, நடராஜர், சுந்தரர், அப்பர், சம்பந்தர், மணிவாசகர், காரைக்கால் அம்மையார், பிள்ளையார் போன்ற சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டு கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் சிவாலயம் கருங்கல்லால் ஆனது. சோழர் சிற்பமுறையில் அமைந்தது. மூன்றாம் சிவாலயமருகில் விஷ்ணு ஆலயம் உள்ளது. இது சிறியதாகவும் கருங்கல்லால் அமைக்கப்பட்டதாகவும் உள்ளது. சோழர் சிற்பமுறையில் அமைந்தது. உள்ளே நின்ற விஷ்ணுவின் கருங்கற்சிலை காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1ம் சிவன்கோயில்



2ம் சிவன்கோயில்




விஷ்ணு கோயில்



5ம் சிவன்கோயில்

05. சத்மஹால் பிரசாத:-



பொலநறுவையில் ஹட்டதாகேயிற்குப் பின்புறம் உள்ளது. ஏழு அடுக்குகளைக் கொண்ட இக்கட்டிடம் தென்கிழக்காசிய (தாய்லாந்து) பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மேலுள்ள ஏழாவது அடுக்கு முழுவதுமாகச் சிதைவடைந்துள்ளது. ஒவ்வொரு அடுக்கும் கீழிருந்து மேல்நோக்கிச் செல்கையில் படிப்படியாகச் சிறுத்துக்கொண்டு செல்கின்றன. ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு புறமும் நடுவில் தெய்வஉருவங்கள் காணப்படுகின்றன. அடிப்பகுதி 39சதுரஅடி பரப்புடையது. உயரம் 53 அடியாகும். இதுவும் ஓர் தாதுகோபமாக இருக்கலாம் என்பது பரணவிதானவின் கருத்தாகும்.


06. யாப்பஹுவ:-

இது இலங்கையின் பழைய இராசதானிகளில் ஒன்றாகும். தற்போது அரண்மனையின் வாசற்பகுதியே காணப்படுகின்றது. இங்குள்ள சுவர்களில் நடனமாடும் கன்னியர், இசைக்கருவிகள் மீட்டும் கன்னியர், படிகளின் இருபுறமும் சிங்கம் போன்றவை காணப்படுகின்றன. அருகில் காணப்படும் நூதனசாலையில் இங்குள்ள சிதைவுகளில் இருந்த கண்டெடுக்கப்பட்ட கல்ஜன்னல், நாகஉருவம், துர்க்கை, விஷ்ணு , வாமன உருவம் போன்றவை வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் பாண்டிய சிற்பமுறையைத் தழுவியவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் சிறியவிகாரை போன்ற கருங்கற் கட்டிடமொன்று உள்ளது. அதில் புத்தர் சிலைகள், மகரதோரணம் போன்றவை காணப்படுகின்றன.



அரண்மனைவாசல்



மகரதோரணத்தின்கீழ் புத்தரின் உருவம்



துர்க்கை



விஷ்ணு



வாசலிலுள்ள சிற்பம்



கன்னியர் உருவங்கள்

## 07. பொன்னம்பலவாணேச்சரம்:-

இவ்வாலயம் கொழும்பில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேர் பொன் இராமநாதனால் அமைக்கப்பட்டதாகும். தென்னிந்திய சிற்பமுறையில் அமைந்த கருங்கற் கட்டிடமாகும். தரிசன மண்டபம், சுற்றுப்பிரகாரம் என்பன கருங்கற்களால் வேயப்பட்டுள்ளன. சுற்றுப்பிரகாரத்தின் இருபுறமும் கருங்கற் தூண்கள் காணப்படுகின்றன. தூண்களிலுள்ள செதுக்கல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. தூண்களில் போதிகை. நடுப்பகுதி, அடிப்பகுதி ஆகியவற்றில் செதுக்கல்கள் உள்ளன. மேற்குப்பக்கத்திலுள்ள தூண்களின் போதிகைகளில் குள்ளர் உருவங்களும், ஏனைய தூண்களின் போதிகைகளில் சிங்கமும் செதுக்கப்பட்டுள்ளது. முன்புறத்தூண்களின் அடிப்பகுதியில் வணங்கியபடி இருக்கும் முனிவர்களும் மற்றைய தூண்களில் தேவர்கள், யாழி, மயில், அன்னம், பாம்பு, கொடி அலங்காரம் போன்றவையும் செதுக்கப்பட்டுள்ளன.


## 08. திரிநிற்றி தேவாலயம்:-

கண்டியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயமாகும். இதில் அதிக தூண்களையுடைய அரைச்சுவரைக்கொண்ட மண்டபம் உள்ளது. இதன் கூரைஅமைப்பானது புராதன சிங்கள கலைப்பாணியில் அமைந்துள்ளது.

இங்கு டேவிட் பெயின்டர் என்பவரால் வரையப்பட்ட கிறிஸ்தவசமய ஓவியங்கள் காணப்படுகின்றன. இயேசுநாதரையும் அருகில் இருவரையும் சிலுவையில் அறைந்துள்ள காட்சி, சீடர்கள் புடைசூழ இயேசுநாதர் காயமடைந்தவர்களுக்குப் பரிகாரம் செய்தல், சீடரின் பாதங்களைக் கழுவுதல் , அருகிலுள்ள குதிரை போன்ற ஓவியங்களை இங்கு காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. பொரளை சகல புனிதர் ஆலயம்:-



கொழும்பில் பொரளையிலுள்ள கிறிஸ்தவ ஆலயம். இத்தாலிய கோதிக் (Gothic) பாணியிலமைந்த அலங்கார யன்னல்கள் காணப்படுவது இவ்வாலயத்தின் சிறப்பியல்பாகும்.இங்கு 10 ஓவியங்கள் காணப்படுகின்றன. இதில் கன்னி மரியாளுடன் குழந்தை யேசு என்னும் ஓவியம் சிறந்ததாகும்.

## இலங்கையின் சிறந்த புத்தர் வடிவங்கள்:-

* இலங்கையிலுள்ள புத்தர் வடிவங்களை அவற்றின் நிலையைவைத்து மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) அமர்ந்த / தியான வடிவம்.
உ+ம் - மகாமேகவன, தொலுவில, வட்டதாகே புத்தர் வடிவங்கள்.

2) நின்ற வடிவம்
உ+ம் - மகாஇலுப்பலாகம, அவுகண, ரூவான்வெலிசாய, கல்விகாரை புத்தர் வடிவங்கள்

3) பரிநிர்வாண / உறங்கு நிலை
உ+ம் - கல்விகாரை, ஹிந்தகல, தம்புள்ள இடங்களிலுள்ள சிலைகள்.

*புத்தர் சிலைகளை அவற்றின் காலத்தை வைத்தும் மூன்றாகப் பிரிக்கலாம்.

1) அனுராதபுரக்காலப் புத்தர் சிலைகள்.

இவற்றின் கண்கள் பொதுவாக மூடியவாறு காணப்படுகின்றது. ஆடையானது தனியான கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.
உ+ம்:- மகாஇலுப்பள்ளம, தொலுவில, அவுகண, மகாமேகவன புத்தர் சிலைகள்.

2) பொலநறுவைக்காலப் புத்தர் சிலைகள்.

இவற்றின் கண்கள் பாதி திறந்தவை. ஆடைமடிப்புகள் சோடியான ரேகைகளால் காட்டப்பட்டிருக்கும்.
உ+ம்:- கல்விகாரைப் புத்தர் சிலைகள்.

3) கண்டிக்காலப் புத்தர் சிலைகள்.

இவற்றின் கண்கள் முழுமையாகத் திறந்திருக்கும். தலையில் ஒளிச்சுடரைக் கொண்டவை. ஆடைமடிப்புகள் அலையலையாகக் காட்டப்பட்டிருக்கும்.
உ+ம்:- இலங்காதிலக, கடலதெனிய புத்தர் சிலைகள்.

*புத்தர் சிலைகள் செதுக்கப்பட்ட ஊடகத்தை அடிப்படையாக வைத்தும் புத்தர் சிலைகளை வகைப்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிலைகள்.

உ+ம்:- தொலுவில, மகாமேகவன, அவுகண சிலைகள்

2) உலோகச்சிலைகள்.

உ+ம்:- பதுளை வெண்கலச்சிலை, களனிவிகாரைச்சிலை

3) மூங்கில், மண் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிலைகள்.

உ+ம்:- எம்பக்க சிலைகள்

4) செங்கல்லால் ஆக்கப்பட்ட சிலைகள்

உ+ம்:- திவங்க ஆலய, தூபராம, இலங்காதிலக சிலைகள்

## 01. சமாதிப்புத்தர் சிலை:- ( மகாமேகவனம் )



அநுராதபுரம் மகாமேகவனப் பூங்காவில் காணப்படும் சமாதிச்சிலையான இது கருங்கல்லால் ஆக்கப்பட்டது. கைகள் தியான முத்திரையைக் குறிக்கின்றன. கால்கள் வீராசன முறையில் அமைந்துள்ளன. உயரம் ஏழரை அடியாகும். கண்கள் கீழ்நோக்கியவாறும் ,சாந்தமான முகத்துடனும் உள்ளது. ஆடையானது உடலுடன் ஒட்டியவாறும், நெஞ்சிற்குக் குறுக்கே செல்லும் கோட்டினாலும் காட்டப்பட்டுள்ளது. குப்தமரபின் சாயலுக்குட்பட்டது. காலம் கி.பி 5ம் நூற்றாண்டு. இதன் தலைப்பகுதி சேதமடைந்து தற்போது திருத்தப்பட்டுள்ளது.

## 02. தொலுவில புத்தர்சிலை:-



அநுராதபுரத்தில் தொலுவில என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலை. அமர்ந்த சிலையான இது கருங்கல்லில் ஆக்கப்பட்டது. ஐந்தடி ஒன்பது அங்குல உயரமுடையது. கைகள் தியான முத்திரையைக் குறிக்கின்றன. கால்கள் வீராசன முறையில் அமைந்துள்ளன. உதடு, நாடி, மூக்கு , கண் போன்றவை மிகத்துல்லியமாகச் செதுக்கப்பட்டுள்ளன. காலம் கி.பி 5ம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இது அமராவதி மரபின் செல்வாக்கிற்குட்பட்ட சிலையாகும்.

## 03. பதுளை வெண்கலச்சிலை:-



பதுளையில் கண்டெடுக்கப்பட்டு கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது . வெண்கலத்தால் ஆனது. அமர்ந்த சிலையான இது கி.பி 5ம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்படுகின்றது. இதன் வயிற்றுப்பகுதி சேதமடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. மகாஇலுப்பள்ளம புத்தர்சிலை:-

இது மகாஇலுப்பள்ளமவில் காணப்படுகின்றது. ஆறடி உயரமுடைய நின்ற சிலையாகும். பளிங்குக்கல்லால் ஆனது , அமராவதி சிற்பமுறையின் சாயல் உள்ளசிலை. இது இலங்கையின் பழைமையான புத்தர் சிலையாகக் கருதப்படுகின்றது. ஆடைமடிப்புக்கள் தெளிவாக உள்ளன.

## 05) ரூவான்வெலிசாய புத்தர்சிலை:-

ரூவான்வெலிசாயவின் சிலையறையில் உள்ளது. தலையின் பிற்புறம் வட்ட அலங்காரம் காணப்படுகின்றது. அமராவதி சிற்பமுறையின் சாயலுடையது. ஆடை மடிப்புகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

## 06) அவுகண புத்தர்சிலை:-

அநுராதபுரத்தில் கலாவெவவிற்கு அண்மையில் அவுகண என்னுமிடத்தில் உள்ளது. இலங்கையின் மிகவுயர்ந்த சிலையாகும். தாமரைப்பூவின்மேல் நிற்பது போன்று அமைக்கப்பட்ட நின்ற சிலை. தாமரைப்பூவுடன் சேர்த்து 46அடி உயரம் உடையது. தலையில் ஒளிச்சுடரைக் கொண்டுள்ளது. ஒளிச்சுடர் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. சிவுர எனப்படும் காவியுடை அணிந்துள்ளது. இடது கையானது ஆடையை தாங்கியிருப்பது போல் உள்ளது. ஆடை மடிப்புகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிலை தாதுசேன மன்னன் காலத்தினது எனக்கருதப்படுகிறது.


மகாஇலுப்பள்ளம


ரூவான்வெலிசாய


அவுகண


அட்டதாகே


புதுறுவகல

## 07) சஸ்சேறுவ புத்தர்சிலை:-

அவுகண சிலைக்கெதிரேயுள்ள சஸ்சேறுவ புராதன விகாரையில் உள்ளது. இடக்கையானது அபயமுத்திரையைச் சித்தரிக்கிறது. கி.பி 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கருங்கல்லால் ஆனது.

## 08) புதுறுவகல புத்தர்சிலை:-

புதுறுவகலவில் காணப்படுகிறது. பாறையுடன் சேர்த்துச் செதுக்கப்பட்டுள்ளது. கி.பி 8-9ம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது. நின்றசிலையான இதற்கு அருகில் போதிசத்துவர் சிலையும் செதுக்கப்பட்டுள்ளது.

## 09) அட்டதாகே புத்தர்சிலை:-


பொலநறுவைக்கால புனிததந்த ஆலயமான அட்டதாகேயில் உள்ளது. கருங்கல்லில் ஆக்கப்பட்ட நின்றசிலை. ஆடைமடிப்புகள் ஆழமான தெளிவான கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவையில் அட்டதாகேயிற்கு பக்கப்புறம் ஓர் சிலைமனை உள்ளது. அதில் உறங்கு நிலைப்புத்தர்சிலை ஒன்று உள்ளது. 36அடி நீளமானது . செங்கல்லால் அமைக்கப்பட்டு சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டுள்ளது.

## 10) பங்குளிய புத்தர்சிலை:-



பங்குளிய என்னுமிடத்தில் காணப்படும் அமர்ந்த சிலை. கருங்கல்லில் ஆக்கப்பட்டது. இதன் வலது கையானது அபய முத்திரையைச் சித்தரிக்கிறது. கால்கள் வீராசன முறையில் அமைந்துள்ளன. அநுராதபுரக்காலத்தைச் சேர்ந்தது.

## 11) வட்டதாகே புத்தர்சிலைகள்:-



இவை பொலநறுவை வட்டதாகேயின் நான்கு வாசல்களிற்கும் எதிராக உள்ளன. கருங்கல்லால் ஆக்கப்பட்டவை. தலைகள் மழிக்கப்பட்டது போலவும் , ஆடை உடலுடன் ஒட்டியதாகவும் காணப்படுகின்றது. இந்திய மதுரா கலைப்பாரம்பரிய தாக்கத்தை உடையவை. கால்கள் வீராசன முறையிலும், கைகள் தியான முத்திரையைக் குறிப்பதாகவும் உள்ளன.

## 12) கல்விகாரைப்புத்தர் சிலைகள் :-

இவை கருங்கல்லில் செதுக்கப்பட்டவையாகும் நின்ற சிலை, உறங்குகின்ற சிலை ஆகியவற்றுடன் அமர்ந்த சிலைகள் இரண்டும் காணப்படுகின்றன.

அமர்ந்தசிலை I

தியானமுத்திரையுடன் கூடியது. வீராசனமுறையில் அமைர்ந்துள்ளது. 4அடி7அங்குல உயரமுடையது. இச்சிலையின் பின்னால் தோரணம் காணப்படுகின்றது. தோரணமானது மகாயான பௌத்தத்தின் அம்சமாகும்.

அமர்ந்தசிலை II

இது வித்தியாதரக்குகையில் உள்ளது. அலங்கரிக்கப்பட்ட தோரணத் தூண்கள் காணப்படுகின்றன. இருக்கும் ஆசனத்தில் சிங்கஉரு காணப்படுகிறது. தூணின் பின்னால் இரண்டு கால்களில் நிற்கும் இரண்டு சிங்கங்களும், சாமரைவீசும் இருசேவகர்களும் உண்டு. சிலையின் பின்னால் ஒளிவட்டமும் உள்ளது. சிலைக்க மேல் விஷ்ணு, பிரமன், சிவன், இந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

நின்ற சிலை

23அடி உயரமுடையது. விரிந்த தாமரையின் மேல் நிற்கின்ற பாவனையில் உள்ளது. இருகைகளையும் மார்போடணைத்தவாறு காணப்படுகிறது.


இது பாவதுக்க துக்கித முத்திரை எனப்படுகிறது. இதனைப்புத்தரின் சீடர் ஆனந்தரின் சிலை எனக் கூறுவோரும் உளர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உறங்குநிலைச் சிலை / பரிநிர்வாணச் சிலை/ சயனச்சிலை :-

இது46 அடி நீளமானது. தலையணையின் மேல் வலது கையை வைத்து அதில் தலையை வைத்து உறங்குவது போல் உள்ளது. தலையணையில் தாமரை அலங்காரம் செதுக்கப்பட்டுள்ளது.




அமர்ந்த சிலை I



அமர்ந்தசிலை II



சாமரைவீசுபவன்



நின்ற சிலையும் , சயனச்சிலையும்

## 13) கம்பளை இலங்காதிலக, கடலதெனிய புத்தர்சிலைகள்:-

இவ்விரண்டு இடங்களிலுமுள்ள புத்தர் சிலைகள் ஒரேமாதிரியானவை. திறந்த கண்கள், தலையில் ஒளிச்சுடர், அலையலையான ஆடைமடிப்பு ஆகிய அம்சங்களை உடையவை. செங்கல்லால் செய்யப்பட்டு தங்கமுலாம் பூசப்பட்டவை. பின்புறத்தில் மகரதோரண அலங்காரம் செதுக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய சிற்பமுறையில் அமைந்துள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் சிறந்த சிற்பங்களும், செதுக்கல்களும்:-

### 01) சந்திரவட்டக்கல்:-

இவை அரண்மனைகள், வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றின் வாசலில் படிக்கட்டின் இறுதியில் காணப்படும் அரைவட்டவடிவப் படிக்கல்லாகும். கருங்கல்லில் அரைபுடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அநுராதபுரக்காலச் சந்திரவட்டக்கல்லின் செதுக்கல்கள் பொலநறுவைக்காலச் சந்திரவட்டக்கல்லின் செதுக்கல்களைவிட நேர்த்தியானவை.

* அநுராதபுரக்காலச் சந்திரவட்டக்கல்:-



இது குப்தமரபில் அமைந்தது. நடுவில் அரைத்தாமரை வடிவத்தையும் , அடுத்த வரிசையில் அன்னப்பட்சி அலங்காரத்தையும், அடுத்த வரிசையில் இலை கொடி அலங்காரத்தையும், அடுத்த வரிசையில் யானை குதிரை சிங்கம் எருது ஆகிய மிருகங்கள் ஒன்றையொன்று துரத்துவது போலவும், இறுதி வரிசையில் தீச்சுடரும் காணப்படுகிறது. மிருகவரிசையில் ஓட்டமும் அசைவும் தென்படுகிறது. இக்காலச் சந்திரவட்டக்கற்களில் சிறந்தது அநுராதபுர ராணிமாளிகை வாசலில் காணப்படுகிறது.


* பொலநறுவைச் சந்திரவட்டக்கல்:-



பொலநறுவையின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறுபட்ட அலங்காரங்களைக் கொண்டதாக உள்ளன. பொலநறுவை வட்டதாகே வாசலில் காணப்படும் நான்கு சந்திவட்டக்கற்களில் ஒவ்வொன்றும் வேறுபட்ட அலங்காரங்களைக் கொண்டுள்ளன.

நடுவே அரைத்தாமரையும், அடுத்து கொடியலங்காரமும், அடுத்து 12 குதிரைகள்கொண்ட வரிசையும், அடுத்து 14 யானைகள்கொண்ட வரிசையும், அடுத்து 30 அன்னப்பட்சிகள் கொண்ட அலங்காரமும், இறுதியில் தீச்சடரும் செதுக்கப்பட்டுள்ளன. எருது, சிங்கம் ஆகிய மிருகங்கள் செதுக்கப்படவில்லை. எருது செதுக்கப்படாததற்குக் காரணம் சோழர் ஆட்சியின் தாக்கமாகும்.

* கண்டிக்காலச் சந்திரவட்டக்கல்:-



இக்காலச் சந்திரவட்டக்கற்களில் இலைக் காட்டுருக்கள் (லியவெல) தாமரைவடிவம் போன்ற உருவங்களே செதுக்கப்பட்டுள்ளன. ஹங்குராங்கெற்ற ரஜமகாவிகாரையில் உள்ளது முக்கோணவடிவ முடையதாகும். கம்பளை இலங்காதிலகவில் முழுத் தாமரை வடிவத்தையுடையதாகக் காணப்படுகின்றது.

கண்டிக்காலச் சந்திரவட்டக்கல் மற்றைய சந்திரவட்டக்கற்களைவிட கலையம்சம் குறைந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. காவற்சிலை:-

வழிபாட்டுத்தலங்கள், அரண்மனைகள், குளக்கட்டுகள் ஆகியவற்றிற்கு முன்பாக வாசலின் இருபக்கமும் அமைக்கப்படும் சிற்பமே காவற்கல்லாகும். இவ்வமைப்பானது சாதாரண கல்வடிவில் ஆரம்பித்து கலசம், ஆறுதலைப்பாம்பு, கணங்கள், குள்ளர் உருவங்கள், துவாரபாலகர் உருவத்தைக்கொண்ட சிலையாக வளர்ச்சியடைந்து வந்துள்ளதைக் காணலாம். ஜேதவன தாதுபோபத்தின் முன்பாகவும் , கந்தகசைத்தியவிலும் , குட்டம் பொக்கணவிலும் பாம்பின் உருவத்தைக்கொண்ட காவற்கல் காணப்படுகிறது. குளக்கட்டுகளில் காணப்படும் அநேகமான காவற்கற்கள் பாம்பின் உருவம் கொண்டதாகவே உள்ளன. அநுராதபுரம் அரசமாளிகை வாசலில் உள்ள காவற்கல்லில் குள்ளர் உருவம் காணப்படுகின்றது. நாகராஜதுவாரபாலகர் உருவத்தைக்கொண்ட காவற்சிலைகளே அதிகளவில் காணப்படுகின்றது.

இரத்தினபிரசாத எனப்படும் காவற்சிலையே இலங்கையில் மிகச்சிறந்த காவற்சிலையாகும். இது அநுராதபுரக்கால காவற்சிலையாகும். பொலநறுவைக்காலக் காவற்சிலைகளில் சிறந்தது வட்டதாகே வாசலில் உள்ளதாகும். அநுராதபுரக் காவற்சிலைகளின் மேற்பகுதி பூவிதழ் வடிவிலும், பொலநறுவைக்காலக் காவற்சிலைகளின் மேற்பகுதி மட்டமான வளைவாகவும் உள்ளது. இவை கருங்கல்லில் அரைப்புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளன.


இரத்தினபிரசாத காவற்சிலை 4அடி2அங்குல உயரமும் 3 ½ அடிஅகலமும் உடையது. நடுவே திரிபங்க நிலையில் அமைந்த துவாரபாலகர் உருவமும், தலையின் பின்புறம் பாம்பின் உருவத்தைக்கொண்ட திருவாசியும், உள்ளது. ஒரு கையில் தென்னம்பூவும் மறுகையில் கலசமும் காணப்படுகிறது. கால்களின் இருபறமும் குள்ளர் உருவங்கள் உள்ளன. ஆடை ஆபரணச்செழிப்பு காட்டப்பட்டுள்ளது. இது செல்வச்செழிப்பைக் குறிக்கிறது.



பாம்பு



கலசம்



கணங்கள்



குள்ளர்




நாகராஜதுவாரபாலகர்
உருவம்கொண்ட
காவற்சிலை

## 03. மகரதோரணம்:-


இது இருபுறமும் மகரங்களையும் , நடுவே நாசித்தலையையும் மற்றும் சூரியன், சந்திரன், தாமரை, கொடிஇலைக்காட்டுரு போன்றவற்றை இணைத்து ஆக்கப்பட்ட ஓர் கலையாக்கம். வாசல்களின் மேற்புறத்திலும், புத்தர்சிலைகளின் பின்புறத்திலும் இவ்வமைப்பு செதுக்கப்பட்டுள்ளது. தலதா மாளிகை, தம்புள்ள, கம்பளை இலங்காதிலக, நிதிவிகாரை, தெகல்தொறுவ, களனி விகாரை போன்ற இடங்களில் காணப்படுகின்றது. அநுராதபுரக்கால கலைவெளிப்பாடுகளில் இவ்வடிவம் காணப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரதோரணம்



## 04. புங்கலசம் (நிறைகுடம்):-




இது தலங்கள், குளங்கள் போன்றவற்றின் முன்னாலும், துவாரபாலகர் உருவத்தின் கையிலும் காணப்படுகின்றது. கருங்கல்லில் செதுக்கப்பட்டது. தாமரைமலரின்மேல் வைக்கப்பட்டது போன்று காணப்படும் இதன் மூடியிலும் அலங்காரம் காணப்படுகின்றது. அநுராதபுரம் குட்டம்பொய்கையில் 10 புங்கலசங்கள் உள்ளன. இவையே மிகச்சிறந்ததாக் கருதப்படுகின்றன.


## 05. வாமனஉருவங்கள் (குள்ளர் உருவங்கள்):-


இவை இலங்கையின் பல்வேறுபட்டகால கட்டிடக்கலை வெளிப்பாடுகளில் செதுக்கல்களாகவும், ஓவியங்களாகவும் உள்ளன. படிகட்டுகள், துவாரபாலகர் உருவத்தின் கால்களின் இருபுறம், தூண்களின் போதிகைகள் ஆகியவற்றில் இவை புடைப்புச்சிற்பங்களாக உள்ளன. விகாரமான முகம், பருத்தவயிறு, குட்டையான தடித்த கைகால்கள் போன்றவை இதன் அம்சமாகும். கருங்கல்லில் செதுக்கப்பட்டவை. இவர்கள் கூடிய பாரத்தைச் சுமக்கக்கூடியவர்கள் என்பது ஓர் நம்பிக்கையாகும். இவற்றை அபயகிரி, மிரிஸ்வெத்தி, மிஹிந்தலை, திவங்கஆலயம், வட்டதாகே தூண்கள், ரூவான்வெலிசாய போன்றவற்றில் காணலாம்.


இசுறுமுனியவிலுள்ள வாமனஉருவங்கள் இசைக்கருவிகளுடன் காணப்படுகின்றன. பொலநறுவை திவங்க ஆலயத்தில் மட்டுமே பெண்வாமன உருவங்கள் காணப்படுகின்றன.

ரூவான்வெலிசாயவின் கிழக்கு வாஹல்கடவில் பறவைக்குள்ளன் அமைப்புக் காணப்படுகின்றது. ஒரு தண்டிலிருந்துவரும் இலைகள், அரும்புகள், மலர்கள் ஆகியவற்றைக் கொண்ட சுருள் வடிவமானது. நடுவில் மனிதத்தலையும், பறவையின் உடலும்கொண்ட உருவம் உள்ளது.









ஜீவனவிருட்ஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜீவனவிருட்சம் என்னும் வடிவமானது அடியில் வாமன உருவத்தைக் கொண்டது. வாமன உருவத்தின் தலையில் ஒரு குடத்திலிருந்து விரிந்து செல்லும் கொடிபோன்ற அமைப்பும் , அதன் உச்சியில் பூவும், சிங்க உருவங்களும் உள்ளன. ரூவான்வெலிசாய, ஸ்ரீமாபோதி போன்றவற்றிலுள்ள தூண்களின் நடுவில் செதுக்கப்பட்டுள்ளது.

## 06. கைப்பிடிவரிசை (கொரவக்கல):-

வாசல்களில் வாசல் அலங்காரத்திற்காகவும், படிவரிசையின் பாதுகாப்பிற்காகவும் பிடித்து ஏறுவதற்கு சுலபத்திற்காகவும் படிகளின் இருபறமும் அமைக்கப்பட்டுள்ள அமைப்பாகும். கருங்கல், செங்கல், சுண்ணாம்புக்கல் போன்றவற்றால் இது அமைக்கப்பட்டதாகும். வட்டதாகே, இலங்காதிலக, கிரிவிகாரை, தூபராம, பொலநறுவை இராஜசபாமண்டபம், கடலதெனிய, தலதாமாளிகை போன்றவற்றின் வாசலில் காணப்படுகின்றது.

அநுராதபுர அரசமாளிகையிலுள்ள கைப்பிடிவரிசையானது மகரத்தின்வாயிலிருந்து விரிந்து செல்லும் கொடி அலங்காரமாகவும் உள்ளது. இடையில் சிங்கமும், காவல்காரன் உருவமும் உள்ளது. கண்டிக்காலத்தில் மகரத்திற்குப் பதிலாக கஜசிங்கம் செதுக்கப்பட்டுள்ளது.






## 07. புராதன சிற்பத்தூண்கள்:-

இவை இலங்கையின் பல புராதன கட்டிடங்களில் கூரையைத் தாங்குவதற்காக அமைக்கப்பட்டவையாகும். இரண்டு வகைப்படும்.
1) சிற்ப வேலைப்பாடு உடையவை.
2) சிற்ப வேலைப்பாடு அற்றவை.

சிற்பவேலைப்பாடுகள் தூண்களின் மேலுள்ள போதிகைகளிலேயே காணப்படுகின்றன. வாமன உருவங்கள், தாமரை, பலாபெத்தி, லியவெல போன்ற வடிவங்களே பெருமளவில் செதுக்கப்பட்டுள்ளன.

வட்டதாகே, தூபராம, நிசங்கலதா மண்டபம் போன்றவற்றில் சிறந்த வேலைப்பாட்டைக்கொண்ட கற்றூண்களும், எம்பக்க, தலதாமாளிகை போன்றவற்றில் சிறந்த சிற்பவேலைப்பாடுள்ள மரத்தூண்களைக் காணலாம்.



## 08. இசுறுமுனிய சிற்பங்கள்:-

இவை அநுராதபுரத்தில் இசுறுமுனிய என்ற இடத்தில் காணப்படுகின்றன. கருங்கல்லில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலர்சிலை:-

இது குப்த மரபைத்தழுவி ஆக்கப்பட்டது. கி.பி 5ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஓர் ஆண் பெண்ணொருவரை இடதுகையால் அணைத்தபடி அமர்ந்துள்ளதுபோல செதுக்கப்பட்டுள்ளது. பின்புறத்தில் வாள், கேடயம் போன்றவை காணப்படுகின்றன.

குதிரைத்தலையும் போர்வீரனும்:-

இது பல்லவமரபில் அமைந்தது. கி.பி 6ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. குளத்திற்கு மேலாக உள்ள பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. அமர்ந்திருக்கும் வீரனின் வலது பக்கத்தில் மேற்புறமாகக் குதிரைத்தலை தென்படுகின்றது. வீரனின் காதில் வளையல் காட்டப்பட்டுள்ளது.


குளிக்கும் யானைகள் :-


இவை இசுருமுனியவிலுள்ள குளத்துடன் தொடுமாறு செதுக்கப்பட்டுள்ளன. பல்லவ மரபில் அமைந்தது. கி.பி 6ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. குளத்தில் நீர நிரம்பும்போது யானைகள் குளிப்பதுபோல் தோற்றமளிக்கும்.


அரசகுடும்பம்:-


பல்லவ மரபில் அமைந்தது. கி.பி 6ம் நூற்றாண்டிற்குரியது. நடுவில் இருப்பவர் அரசனென்றும் வலதுபுறம் சாலிய குமாரனும், இடதுபுறம் அசோகமாலாவும் உள்ளதாகக் கருதப்படுகின்றது. ஏனையோர் சேவகர்கள்.

மற்றும் அமர்ந்திருக்கும் அரசனொருவரின் உருவம், தேவரொருவர் உருவம், குள்ளர் உருவம், இசைக்கருவி மீட்டும் வாமன உருவம், சிங்கமொன்றின் சிற்பம், உடைந்த புத்தர்சிலையொன்று, கல்லாசனம் போன்றவையும் காணப்படுகின்றன. இவை 6 - 8ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை.


அரச குடும்பம்


குளிக்கும் யானைகள்


காதலர் சிலை


குதிரைத்தலையும் போர்வீரனும்


தேவர் உருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. மைத்திரேய போதிசத்துவர்:-


மகாயான பௌத்த பிரிவைச்சேர்ந்த இவ்வடிவம் உலோகத்தால் ஆனது. திரிபங்க நிலையில் அமைந்தது. உயரம் 18.6 அங்குலம். விதர்க்க வரத முத்திரையுடையது. தூபராம தாதுகோபத்திற் கண்மையில் கண்டெடுக்கப்பட்டது. கி.பி 7ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

## 10. பொலநறுவை போதிசத்துவர்:-

வட்டதாகேயிற்கும், நிஸங்கலதா மண்டபத்திற்குமிடையில் காணப்படுகின்றது. நின்ற உருவம். தலையில் கூம்புருவில் கிரீடம் உள்ளது. கருங்கல்லில் செதுக்கப்பட்டது. ஆடை ஆபரணச் செழிப்பு காணப்படுகிறது. தற்போது இரண்டு கைகளும் உடைந்த நிலையில் உள்ளது.

## 11.புதுறுவகல போதிசத்துவர்:-

இது புதுறுவகலவிலுள்ள பாறையொன்றில் செதுக்கப்பட்டுள்ள புடைப்பச் சிற்பமாகும். அருகில் தாராதேவி உருவமும் செதுக்கப்பட்டுள்ளது.



| மைத்திரேய போதிசத்துவர் | சித்துல்பவ்வ போதிசத்துவர் | புதுறுவகல போதிசத்துவர் | பொலநறுவை போதிசத்துவர் | பத்மபாணி போதிசத்துவர் | வஜ்ஜிரபாணி போதிசத்துவர் |
|---|---|---|---|---|---|

இங்கு படத்திலுள்ள பத்மபாணி போதிசத்துவர் உருவம் அமர்ந்தநிலை, செப்பில் செய்யப்பட்டு தங்கமுலாம் பூசப்பட்டது. நூதனசாலையில் உள்ளது. கி.பி 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
வஜ்ஜிரபாணி போதிசத்துவர் உருவம் செப்பினால் ஆனது. கி.பி 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. நின்ற சிலை. நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அநுராதபுரக் காலத்திற்குரியன.

## 12. சித்துல்பவ்வ போதிசத்துவர்:-

நின்ற நிலையில் அமைந்த இச்சிலை பளிங்குக்கல்லில் ஆக்கப்பட்டது. முடியணிந்தவாறு உள்ள இவ்வடிவம் மகாயான பௌத்த பிரிவைச் சார்ந்தது. கி.பி 3ம் நூற்றாண்டிற்குரியது.

## 13. பத்தினி (தாராதேவி):-

மட்டக்களப்பில் குருக்கள்மடம் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டு பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது. உலோகச்சிலையான இது 58.5 அங்குல உயரமுடையது. கி.பி 8ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கைகள் விதர்க்க வரத முத்திரையைக் குறிக்கின்றன. இது போன்றதொரு நகல் செய்யப்பட்டு கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்தினி / தாராதேவி



பராக்கிரமபாகு

## 14. பராக்கிரமபாகு சிற்பம்:-

இது பொலநறுவை பொத்கல் விகாரைக்கு அருகிலுள்ள பாறையில் பாறையுடன் சேர்த்து செதுக்கப்பட்டுள்ளது. தாடியுடனும், கையில் ஏட்டுடனும் காணப்படுகிறது. இடுப்பிற்குமேல ஆடையெதுவும் காட்டப்படவில்லை. 12 அடி உயரமுடையது. கி.பி 12ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

## 15. சிராவஸ்தியின் அற்புதச்செயல்:-

ஆந்திர சிற்பமுறையில் அமைந்த மிகப்பழைய சிற்பமாகும். புடைப்புச்சிற்பமான இது தற்போது கொழும்பு நூதனசாலையில் உள்ளது. பளிங்குக்கல்லில் செதுக்கப்பட்டது. மாயாதேவியின் கனவும், சிராவஸ்தியின் அற்புதச்செயலும் மனித உருவங்களை ஒரே தளத்தில் குழுவாகக் காட்டும் சிற்பியின் முயற்சி எனக்கருதப்படுகிறது.

## 16. மாயாதேவியின் கனவு:-

ஆந்திர சிற்பமுறையில் அமைந்த பளிங்குக்கல்லில் ஆக்கப்பட்ட புடைப்புச்சிற்பம். தற்போது கொழும்பு நூதனசாலையில் உள்ளது.



## 17. நடராஜர் வெண்கலச்சிற்பம்:-

பொலநறுவை சிவன் கோயிலிலிருந்து கண்டெடுக்கப்பட்டு தற்போது கொழும்பு நூதனசாலையில் உள்ளது. இது வெண்கலத்தால் ஆக்கப்பட்டது. சோழர் காலத்தைச் சேர்ந்தது. சிவனது நடனத்தின் மூலம் பிரபஞ்சத்தினது இயக்கம் குறிப்பிடப்படுகிறதெனச் சொல்லப்படுகின்றது. உத்தரீயம் நடன வேகத்தைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றிலுள்ள உடுக்கை - படைத்தல், வலக்கை அக்கினி - அழித்தல், இடக்கை அபயமுத்திரை - காத்தல், வலக்கை சின்முத்திரை - அருளல், முயலகனை மிதித்தல் - மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களைக் குறிக்கின்றது. இச்சிலையின் அங்கங்களின் குறியீடு 13 அகும்.

பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட சிவன், பார்வதி, சிவமூர்த்தம், பிள்ளையார், சுந்தரர், அப்பர், சம்பந்தர், மணிவாசகர், காரைக்காலம்மையார், அனுமான் ஆகிய சிற்பங்களும் வெண்கலத்தால் ஆனவை. இவற்றில் அனுமான் சிற்பம் பாரிசில் உள்ளது. ஏனையவை கொழும்பு நூதனசாலையிலுள்ளன.

இவற்றின் அளவுகள் - அனுமார் - 30.48 அங்குலம், சுந்தரர்- 25.04 அங்குலம், சம்பந்தர்- 19.44 அங்குலம், மணிவாசகர்- 29.08 அங்குலம், சிவமூர்த்தம்- 26.08 அங்குலம்.

## 18. பார்வதி சிற்பம் :-

உலோகப் பார்வதி சிலைகள் பொலநறுவை, திருகோணமலை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட சிலை கலையம்சம் மிக்கது. இச்சிலைகள் நின்ற, இருந்த நிலைகளில் காணப்படுகின்றன. முழுச்சரீரமும் நகைகள் அணியப்பட்டு, அதற்கிடையால் சரீர அமைப்பு தெரியக்கூடியவாறு ஆக்கப்பட்டுள்ளது. 2ம் சிவாலயத்திலிருந்து எடுக்கப்பட்ட சிலையில் தலையில் மாணிக்கம் முத்து அணியப்பெற்ற முடியும், கழுத்தில் மாணிக்க மாலையும் அணியப்பட்டுள்ளது.


விநாயகர்


நடராஜர்


சிவமூர்த்தம்




பார்வதி சிலைகள்


தட்சிணாமூர்த்தி


காரைக்காலம்மை


பார்வதி


விஷ்ணு



நாயன்மாரின் சிற்பங்கள்

## 19. விஷ்ணு சிற்பம் :-

பொலநறுவை விஷ்ணு கோவிலில் உள்ளது. கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. சோழசிற்ப முறையில் அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. பொலநறுவைக் கல்வெட்டிலுள்ள சிற்பம்:-



ஹட்டதாகேயிற்கு அருகில் உள்ள கல்வெட்டின் பக்கப்புறங்களில் சிறந்த செதுக்கல்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டானது 26அடி 6அங்குல , நீளம், 4அடி 7 அங்குல அகலம், 2அடி 2 அங்குல உயரம் உடையது. இதில் கஜலக்ஷ்மி, வாத்து அலங்காரங்கள் சிறப்பான வையாக உள்ளன.


## 21. பொலநறுவை அரசசபை மண்டபத்திலுள்ள செதுக்கல்கள்:-

இவை பராக்கிரமபாகுவின் அரசசபை மண்டபத்திலும், நிஸங்கமல்லனின் அரசசபை மண்டபத்திலும் சிறப்பான செதுக்கல்கள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டினதும் வாசல்களில் சிங்கங்கள் காணப்படுகின்றன. இதைவிட சுவர்களிலும் சிறந்த செதுக்கல்கள் உள்ளன. யானைகள் , மனித உருவங்கள் போன்றவை சிறப்பாக அமைந்துள்ளன.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் சிறந்த ஓவியங்கள் :-

இலங்கையிலுள்ள சுவரோவியங்களை அவை வரையப்பட்ட காலங்களை அடிப்படையாக வைத்து பின்வருமாறு பிரிக்கலாம்.

1) பௌத்தத்தின் வருகைக்கு முற்பட்ட ஓவியங்கள்
2) அநுராதபுரக்கால ஓவியங்கள்
3) பொலநறுவைக்கால ஓவியங்கள்
4) கண்டிக்கால ஓவியங்கள்
5) கொழும்புக்கால ( தற்கால) ஓவியங்கள்


### 1. பௌத்தத்தின் வருகைக்கு முற்பட்ட ஓவியங்கள் :-

இக்கால ஓவியங்கள் யாவும் அபிவிருத்தியடைந்த கலைவெளிப்பாடாகக் கருதமுடியாதன. தந்திரிமலை, கதுறுக்குள, பிசில்கொட, இராஜகல்கந்த ஆகிய இடங்களிலுள்ள குகைகளின் சுவர்களில் தீட்டப்பட்டுள்ளன. மதச்செல்வாக்கிற்கு உட்படாதவையாகக் காணப்படுகின்றன.

★ தந்திரிமலையில் கோடுகளால் வரையப்பட்ட பசு, மயில், உடும்பு போன்ற விலங்குகள், சிவப்பு கறுப்பு புள்ளிகளைக்கொண்ட புலி உருவம், அம்பு வில்லுடனான வேட்டைக்காரன் உருவம் போன்றவை வரையப்பட்டுள்ளன.
★ பிசில்கொடக் குகையில் ஆண், பெண் உருவங்கள், முதலை போன்றன ஓவியங்களாக உள்ளன.
★ இராஜகல்கந்தவில் விலங்கு, மனித உருவங்கள் என்பன தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றன
★ கதுறுக்குள குகையில் பெரிதாக வரையப்பட்ட யானை, மாடு, மான் போன்ற விலங்குகளும் , விலங்குகளின் மேல் சவாரிசெய்யும் மனித உருவங்களும் காணப்படுகின்றன.



தந்திரிமலை



இராஜகல்கந்த



கதுறுக்குள

### 2. அநுராதபுரக்கால ஓவியங்கள் :-

இவை அநுராதபுரம் தலைநகரமாக இருந்தபோது இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வரையப்பட்டவையாகும். அநேகமான ஓவியங்கள் தெளிவற்ற, அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

□ சித்துல்பவ்வ குகையில் இரண்டு காவியுடையணிந்த உருவங்கள், மானின் உருவம், வீட்டுநிர்மாணத் திட்டப்படம் போன்றவை ஓவியமாக உள்ளன.
□ கரகம்பலவில் ஆண், பெண் உருவங்கள் வரையப்பட்டுக் காணப்படுகின்றன.
□ கொனாகொல்லவில் இரண்டு பெண்உருவங்கள் ஓவியங்களாக உள்ளன.
□ கொட்டியாகலவில் அரைவட்டத்தின் மத்தியில் யானைக்குட்டியொன்று தும்பிக்கையை உயர்த்தியவாறு காணப்படும் ஓவியமொன்று உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கந்தலமே-தொட்டல்கந்தவில் தலையில் கிரீடமணிந்த , வலக்கையில் நீண்ட காம்புகளையுடைய பூவொன்றைப் பிடித்துவைத்துள்ள உருவம் ஒன்று கால்களைப் பின்னியவாறு அமர்ந்திருப்பது காணப்படுகின்றது.
- வெஸ்ஸகிரிக் குகையில் தலையில் பூச்சூடி . நகைகள் அணிந்து காணப்படும் பெண் உருவமும், வானில் பறப்பதுபோன்ற ஆண் உருவமும் உள்ளன. இவ்ஓவியங்கள் சிகிரியாவை ஒத்தவை. கி.பி 5-7ம் நூற்றாண்டு வரையான காலத்தில் வரையப்படிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.
- மிஹிந்தலை கந்தகசைத்திய தாதுகோபத்திற்குக் கிழக்கே ஓவிமொன்று காணப்படுகின்றது. கைகளில் பூக்களைச்சுமந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் தேவர் கூட்டமொன்று மேகத்திலிருந்து வெளிப்படுவது போன்று வரையப்பட்டுள்ளது. சிவப்பு, கறுப்பு நிறங்கள் மட்டும் இங்கு பாவிக்கப்பட்டுள்ளன.
- ருவான்வெலிசாயவில் பறவைக்குள்ளன், குள்ளர் உருவங்கள் ஓவியமாக வரையப்பட்டுள்ளன. குள்ளன் உருவமானது தோளில் தடியொன்றை வைத்து இரு கைகளாலும் பிடித்தபடி உள்ளது. தலையில் தலைப்பாகையும், கழுத்தில் மாலையும் காணப்படுகின்றன.
- மஹியங்கன தூபி கி.மு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இங்கு கி.மு ஓராம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. பழுதடைந்த நிலையிலுள்ள இவ்ஓவியங்கள் தற்போது அநுராதபுரம் நூதனசாலையில் உள்ளன. வெண்ணிறத் தாடியுடைய தேவர்கள் இருபுறமும் நிற்க நடுவே புத்தர் அமர்ந்திருக்கிறார். பின்புறத்தில் அரசமரமும், தலையைச்சுற்றி ஒளிவட்டமும் காணப்படுகிறது. இவ்வோவியம் புத்தர் முத்திநிலையடைதல் எனக் கருதப்படுகின்றது. இது தவிர வேறு மூன்று ஓவியங்களும் உள்ளன. தலையில் கிரீடம் அணிந்து நான்கு கைகளையும், திரிசூலத்தையும் கொண்டுள்ள திரிபங்கநிலையில் உள்ள உருவம் சிவன் எனவும், நான்கு கைகளையும் ஒருகையில் சங்கினையும் , தலையில் கிரீடத்தையும் உடைய உருவம் விஷ்ணு எனவும், ஒருகையில் வாளும், மறுகையில் கேடயமும் கொண்ட உருவம் யமன் எனவும் கருதப்படுகின்றது.





மஹியங்கன ஓவியங்கள்



வெஸ்ஸகிரி ஓவியம்



கொனாகொல்ல ஓவியம்



ஹிந்தகல ஓவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மிஹிந்தலை ஓவியம்



ருவான்வெலிசாய ஓவியம்

## சிகிரியா ஓவியங்கள்:-

இவ்வோவியங்கள் காசியப்ப மன்னன் காலத்தில் அதாவது கி.பி 5ம் நூற்றாண்டில் சிகிரியாக் குன்றில் வரையப்பட்டவையாகும். ஐநூறு வரையான ஓவியங்கள் வரையப்பட்டிருந்தாலும் தற்போது 21பெண் உருவங்கள் மட்டுமே தனித்தனியாகவும், சோடிசோடியாகவும் உள்ளன. இவ்வோவியங்கள் யாவும் ஈரச்சுதை முறையில், ரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கீழைத்தேயப்பாணியில் வரையப்பட்டுள்ளன. பெண்களின் இடைப்பகுதிவரை மட்டுமே வரையப்பட்டுள்ளது. சிலபெண்கள் மலர்தட்டுக்களை ஏந்தியுள்ளனர், சிலர் மலர்களைக் கையில் வைத்துக்கொண்டுள்ளனர். கறுப்பு நிறம் பாவிக்கப்படவில்லை. நீலநிறம் அரிதாக உள்ளது. கடும்சிவப்பு, ஒளிப்பச்சை, பொன்மஞ்சள், கபிலம் போன்றவை அதிகளவில் பாவிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் அஜந்தாவிலுள்ள 16ம், 17ம் குகை ஓவியங்களுக்கு இவை ஒப்பிடப்படுகின்றன. மலரேந்தியமாது என்னும் ஓவியம் இங்குள்ளவற்றில் மிகச்சிறந்த ஓவியமாகக் கருதப்படுகின்றது.

சிகிரியாவில் பிரசித்திபெற்ற பெண்ஓவியங்களைவிட வேறு மூன்று குகைகளினுள்ளும் ஓவியங்கள் உள்ளன.

- நாகபடக்குகையில் பாவுகை வடிவமைப்பு அலங்காரம் வரையப்பட்டுள்ளது
- இருக்கைக்குகையில் அலங்காரத்தாவரங்கள், மனிதஉருவமொன்றின் பாதிப்பகுதி போன்றவை உள்ளன.
- சித்திரகூடக்குகையில் படுத்திருக்கும் நிலையிலுள்ள புத்தர் உருவம் காணப்படுகிறது.

இவ்வோவியங்கள் காசியப்பன் காலத்திற்கு முற்பட்டவையாகக் கருதப்படுகின்றன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியப்பன்
காலத்திற்கு
முற்பட்ட
ஓவியங்கள்
(சிகிரியா)





## ஹிந்தகல ஓவியங்கள்:-

கண்டியிலிருந்து 6 மைல் தொலைவில் காணப்படும் இக்குகையில் 12வரையான ஓவியங்கள் வரையப்பட்டிருந்தாலும் தற்போது ஒருசிலமட்டும் எஞ்சியுள்ளன.

வலப்பக்கமுள்ள ஓவியத்தொகுதியில் புத்தர் அழகிய வேலைப்பாடமைந்த ஆசனத்தில் தியான நிலையில் அமர்ந்திருக்கிறார். வலதுகை அபய முத்திரையைக் காட்டுகிறது. காலடியில் தேவர் கூட்டம்கூட்டமாகக் காணப்படுகின்றனர். பெண்தேவர்கள் உருவமும் உள்ளது. இரண்டு கின்னரப்பட்சிகளும் உள்ளன.

மற்றைய ஓவியத் தொகுதியில் துசித்தவின் போதனை, புத்தர் தபச, பல்லுக வியாபாரிகளிடம் தானத்தை ஏற்றல, மற்றும் தேவர்கள் , பசுக்கள் போன்றனவும் வரையப்பட்டுள்ளன.

புத்தரின் தலையைச்சுற்றி ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. மஞ்சள் நிறம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்ஓவியங்கள் கி.பி 7ம் நூற்றாண்டைச் சேர்ந்தனவெனக் கருதப்படுகிறது.

## 3. பொலநறுவைக்கால ஓவியங்கள்:-

இக்கால ஓவியங்கள் திவங்க ஆலயம், கல்விகாரை, லங்காதிலக, திம்புலாகல, இரண்டாம் சிவன்கோவில் போன்றவற்றில் வரையப்பட்டிருந்தனவெனினும் தற்போது ஒருசில ஓவியங்களே எஞ்சியுள்ளன.

## திவங்கஆலய (ஜேதவனராம) ஓவியம் :-

இங்கு ஜாதகக்கதைகள் புத்தரின் வாழ்க்கைக் குறிப்புகள் போன்றன ஓவியங்களாக உள்ளன. உட்புறத்தில் ஆசங்கவதி ஜாதகம், சசஜாதகம், விதுரபண்டித ஜாதகம், சூலபத்ம ஜாதகம், மைத்திரிபால ஜாதகம், தேமிய ஜாதகம், உம்மக்க ஜாதகம், மாயாதேவியின் கனவு போன்றவை அழிந்து மங்கியநிலையில் உள்ளன.

தேமிய ஜாதகத்தில் பெரிய மரங்கள் அடங்கிய காட்டுப்பிரதேசத்தில் இருகுதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் சாய்ந்திருக்கும் தேமியகுமாரனைப் புதைப்பதற்கு சாரதி குழிதோண்டும் காட்சி ஓவியமாக உள்ளது.

சூலபத்ம ஜாதகத்தில் அரசனின் முன்னால் கை, கால்களை இழந்த காதலனை தோளில் தூக்கிவைத்திருக்கும் பெண்ணின் உருவமும், தாடியுடைய வயோதிபரும் உள்ளனர்.

தெய்வஅழைப்பு என்னும் ஓவியத்தில் புத்தர் பலதேவர் கூட்டங்களுக்கிடையே வீற்றிருக்கின்றார். கூம்பு வடிவத்தில் தலைக்கிரீடங்கள் காணப்படுகின்றன. ஆபரணச்செழிப்பும் காட்டப்பட்டுள்ளது.

புத்தர் சங்கிஸ்ஸபுரத்திற்கு வருகைதரல் என்னும் ஓவியத்தில் ஏணிபோன்ற அமைப்பின்மூலம் புத்தர் அயபமுத்திரையுடன் தேவலோகத்தில் இருந்து இறங்கி வருகிறார். இந்திரன் குடையொன்றைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரிடம் கொடுக்கின்றான். பிரமன் பூவொன்றுடன் காணப்படுகிறார். அருகில் வேறுதேவர் உருவங்கள் உள்ளன. இங்கு புத்தரின்உருவம் முப்பரிமாணத்தில் காட்டப்பட்டுள்ளது. இங்கும் கூம்புவடிவமான தலைக்கிரீடங்கள் காணப்படுகின்றன. பின்னணிக்கு சிவப்பு நிறமே அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

சச ஜாதகக்கதையில் இந்திரன் சந்திரனில் முயல் வரையும்காட்சி ஓவியமாக உள்ளது.


காதலர்கள் ஐக்கியமும் பிரிவும் என்னும் ஓவியத்தில் பெண் காதலனின் பிரிவாற்றாமையை நினைத்து மானுக்கு உணவூட்டும்காட்சி காணப்படுகிறது.




தெய்வ அழைப்பு




சச ஜாதகம்



தேமிய ஜாதகம்



புத்தர் சங்கிஸ்ஸபுரத்திற்கு வருகைதரல்




சூலபத்ம ஜாதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காதலர் ஐக்கியமும் பிரிவும்

## திம்புலாகல ஓவியம்:-

தலையின் பின்புறம் ஒளிவட்டத்துடன் புத்தர் தியானித்துக்கொண்டிருக்கிறார். புத்தரின் இடது பக்கத்தில் மூன்று உருவங்கள் வணங்கியபடி உள்ளன. நன்றாக அலங்கரிக்கப்பட்ட அன்னப்பட்சியொன்றின் உருவமும் காணப்படுகின்றது.

இன்னொரு பகுதியில் துதிக்கையை உயர்த்தியவாறு காணப்படும் யானை , இளவரசன் எனக்கருதக்கூடிய ஆணின் உருவம், சசஜாதகக்கதை , அரசகுடும்பத்தைச்சேர்ந்த ஒருவரின்பிரிவு போன்றவை தற்போது மங்கிய நிலையில் காணப்படுகின்றன.







## கல்விகாரை ஓவியம்:-

இங்குள்ள வித்தியாதரக்குகை பூராகவும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஆனால் தற்போது ஒருசில ஓவியங்கள் மட்டுமே தென்படுகின்றன. இவற்றில் நீண்ட வெண்ணிறத்தாடியுடைய முதியவரொருவரின் ஓவியம் உள்ளது. பூணூல் அணிந்த இவ்வுருவம் வலதுகையில் நீண்ட காம்புடைய பூவொன்றை வைத்துள்ளது. இவ்ஓவியத்தின்கீழ் கிரீடம் அணிந்த , தலையைச்சுற்றி ஒளிவட்டமுள்ள தேவர் உருவரின் உருவமும் அதன்கீழ் சிலதேவர் உருவங்களும் உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கண்டிக்கால ஓவியங்கள்:-

இலங்கையில் கண்டிக்காலத்திலேயே மரபுரீதியான ஓவியக்கலையானது பெருவளர்ச்சி யடைந்திருந்தது. அரசரின் அனுசரணையும் இதற்கு முக்கியமானதொரு காரணமாகும்.

கண்டிக்கால ஓவியங்கள் மக்களின் சம்பிரதாயத்திற்கமையவும் பக்திஉணர்வை மேம்படுத்தவும் வரையப்பட்டன. இவ்வோவியங்கள் பௌத்த சமயசம்பந்தமான ஜாதகக் கதைகளையும் , புத்தரின் சரிதையையும் சித்தரிப்பனவாய் உள்ளன. சுவரின் ஓர் எல்லையிலிருந்து மற்றைய எல்லைவரை கதையானது தொடர் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் இருபரிமாணத்தன்மை கொண்டவை, தூரநோக்கற்றவை, இரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. உலர்சுதை முறையில் வரையப்பட்டுள்ளது. சகலஉருவங்களும் ஒரேதளத்திலேயே காட்டப்பட்டுள்ளன.

ஓவியங்கள் வரைவதற்கு அணில் , பூனைமயிர்கள், தாழைவேர் போன்றவற்றில் தூரிகைகள் ஆக்கப்பட்டுள்ளது. நுண்ணிய கோடுகள் வரைவதற்கு தெலித்தன என்னும் புற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புத்தர் , மனிதஉருவங்கள் மஞ்சள் நிறமாகவும், மரம் செடி கொடி இருண்டபச்சை நிறமாகவும் , மேலிருந்து கீழாக வரையப்பட்டநதி நீலம் அல்லது சாம்பல் நிறமாகவும் பின்னணியானது சிவப்பாகவும் காட்டப்பட்டுள்ளது. இராட்சதர், ஆவி, அசுரர் போன்றவற்றிற்கு இருண்டவர்ணம் தீட்டப்பட்டுள்ளது. விஷ்ணு, தேவர்கள் நீலநிறத்தால் காட்டப்பட்டுள்ளனர்.

ஜாதகக்கதைகளில் வெஸ்ஸந்தரா , சுத்தசோம , மகாசீலவ , சத்தபத்த, மஹாபல்லவ போன்றவையும், புத்தரின் சரிதையில் ஏழுவாரம், 24 விபரம், அசுரயுத்தம், துசித்தவின் வானுலகப்போதனை, புத்தர் ஞானம்பெறுதல், புத்தர் பூமாதேவியுடன் உரையாடுதல் போன்றனவும் கருத்துச்செறிவுடன் சித்தரிக்கப்பட்டுள்ளன. வெஸ்ஸந்தரா ஜாதகக்கதையில் வெள்ளை யானையைப் பரிசளித்தல் (அலிஅதுன் தனதீதம) முக்கியமாக வரையப்பட்டுள்ளது.



தேவரகம்பொல சில்வரட்ண உணான்சே , ஹிரியால நயிந்தே, ஹீன்அப்பு சித்தற, நிலகம படபெந்த போன்றோர் கண்டிக்கால ஓவியங்களை வரைந்தவர்களில் முக்கியமானவர்களாவர்.

- கண்டிக்காலத்தில் தாழ்நிலப் பிரதேசங்களில் போத்துக்கேயர் , ஒல்லாந்தர் தாக்கம் காரணமாக மலையகத்தைவிட வித்தியாசமான ஓவியப்போக்குக் காணப்படுகின்றது. ஆடை ஆபரணம், பழக்கவழக்கம், பொருள்பண்டம், போன்றவற்றில் அந்நியத் தாக்கத்தினால் வேறுபாடு ஏற்பட்டுள்ளது. பின்னணியாக வெள்ளை அல்லது நீலநிறம் பாவிக்கப்பட்டுள்ளது.

  நரகம், பாதாளம் போன்றவை ஓவியத்தின் கீட்பகுதியிலும், தேவலோகம் மேற்புறத்திலும் காட்டப்பட்டுள்ளது. பெண்உருவங்கள் முக்காடுடன் காணப்படுகின்றன.

  தாழ்நில விகாரைச்சித்திரங்கள் கரகம்பிட்டிய, முல்கிரிகல, தெல்வத்தை, அம்பலாங்கொடை, சுதர்ஸனராம ,தொட்டகமுவை, கத்தமுவை போன்றவற்றில் காணப்படுகின்றன. முல்கிரிகலை விகாரையில் நவக்கிரகக்கூட்டம், இராட்சதர் உருவம், பறைகொட்டும் பெண்கள், றபானா அடிக்கும் பெண்கள் , வயலின் போன்ற கருவிகள் வைத்திருக்கும் பெண்கள் போன்றவை தீட்டப்பட்டுள்ளன.
- கண்டிக்காலத்தில் விகாரைகளை அலங்கரிக்க சமயசம்பந்தமான ஓவியங்கள் துணிகளிலும் வரையப்பட்டுள்ளன. இவ்வாறு துணிகளில் வரையப்பட்ட ஓவியங்கள் பெத்திகொட என்ற பெயரினால் அழைக்கப்பட்டன. ஹங்குராங்கெற்ற ஆராதனா ரஜமகாவிகாரையில் மூன்று சிறந்த துணிச்சித்திரங்கள் இன்றும் காணப்படுகின்றன. இரு தேவர்கள்சூழப் புத்தர் மகரதோரணத்தின் கீழ் அமர்ந்துள்ள ஓவியம் காணப்படுகிறது. வஹகோட்டை துடாவரஜமகா விகாரையில் முதலாவது தர்மஉபதேசம், ஏழுவாரம் போன்றவை துணிகளில் வரையப்பட்டுள்ளன.
- கண்டிக்காலத்தில் ஓலைஏடுகளைப் பாதுகாக்க செய்யப்பட்ட உறைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. மேலுறைகளில் சங்கிலிச்சோடனை, ஓரங்களில் விரிந்த இதழ்அலங்காரம், மலர்த்தொடர் போன்றனவற்றைக் ஏடுகளின் உறைகளில் காணலாம். மல்லிகை, தாமரை, இணைஅன்னம் போன்றவையே அதிகளவில் வரையப்பட்டுள்ளன. சிவப்பு மஞ்சள் நிறங்களே அதிகமாகப் பாவிக்கப்பட்டுள்ளன. கல்லவக்க , சரார்த்ததீபனி புத்தகஉறை போன்றவற்றில் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்உறைகள் இரண்டும் கி.பி 13ம் - 14ம் நூற்றாண்டிற் கிடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை.
- கண்டிக்காலத்தில் மக்களிடையே வழங்கிய பூசை, வசியம், மாந்திரீகம், போன்றவற்றிற்காகவும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வகையில் வரையப்பட்ட சித்திரங்கள் பில்லிச்சித்திரங்கள் எனப்பட்டன. பில்லிச்சித்திரங்களும் துணிகளிலும் வரையப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டிக்கால ஓவியங்களில் மரங்கள், மனிதஉருவங்கள்



கல்லவக்கயின் உறை




சரார்த்ததீபனியின் உறை



ஓலை ஏடுகளின் உறையலங்காரம்



பில்லிச் சித்திரம்



பெத்திகொட ஓவியம்


1. தம்புள்ள குகைஓவியங்கள்:-

இங்கு கண்டிக்கால புகழ்பெற்ற கூரைச்சித்திரங்களும், சுவரோவியங்களும் காணப்படுகின்றன. அபயன், நிஸங்கமல்லன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் போன்றோரால் காலத்திற்குக்காலம் இக்குகையானது புதுப்பிக்கப்பட்டு ஓவியங்களும் வரையப்பட்டுவந்ததாக வரலாறு கூறுகிறது.

இங்கு வரையப்பட்டுள்ள ஓவியங்களாவன:-

24 புத்தநிலைகள், ஏழுவாரம், புத்தரின் முதல் தர்மஉபதேசம், சித்தாத்தர் வில்வித்தை பழகுதல். புத்தர் இசிபத்தான, வேலுவனராம , ஜேதவனராம போன்றவற்றில் வாழ்ந்தவிதம், இறுதித்தானத்தை ஏற்றல், வேறுதெய்வங்களின் பூசையை ஏற்றல், பரிநிர்வாணமடைதல், அஸ்தி பங்கிடப்படல், போன்றவற்றுடன் விஜயனின் தரையிறக்கம், மஹிந்தன் வருகை, வெள்ளரசு வருகை, மிஹிந்தலைப் புதையல், எல்லாளன் துட்டகைமுனு யுத்தம் போன்ற சரித்திர வரலாற்றுக் கதைகளும் ஆறுமுகத்துடன் காணப்படும் கதிர்காமக்கந்தனின் ஓவியமும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சித்தார்த்தர் வில்லித்தை பழகுதல்

கதிர்காமக்கடவுள்






எல்லாளன துடகைமுனு யுத்தம்






புத்தரின் பல்வேறு தோற்றங்கள்

ஞானம் பெறுதல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்புள்ள ஓவியங்கள், சிற்பங்கள்

## 2. றிதிவிகாரை ஓவியங்கள்:-

24 புத்த நிலைகள் , 16வழிபாட்டுத் தலங்கள், ஏழுவாரம், தேவநம்பியதீசன் எல்லைக்குறிகள் இடும் இடத்திற்கு மேலாக தேவலோகத்தில் இருந்து வருகைதரல், சிவனொளிபாத மலையைத் தரிசித்தல், இணைஅன்னங்கள், கஜசிம்ஹ, நரசிம்ஹ, உசம்பகுஞ்சரம் போன்றவை ஓவியங்களாக உள்ளன.

## 3. தெகல்தொறுவ:-


இங்கு நான்கு வரிசைகளில் நான்கு ஜாதகக்கதைகள் வரையப்பட்டுள்ளன. அவையாவன வெஸ்ஸந்தரா , சுத்தசோம, சீலவ, சத்தபத்த என்பனவாகும்.

வெஸ்ஸந்தரா ஜாதகத்தில் வெள்ளையானையை பரிசளித்தல் , இருமக்களையும் தானம்செய்தல், சுத்தசோம ஜாதகத்தில் சுத்தசோமனின் நாற்படைகள் வீழ்ச்சியடைதல் போன்றவை வரையப்பட்டுள்ளன.


மாரனின் யுத்தத்தைச் சித்தரிக்கும் ஓவியத்தில் ஐந்து தலையுடன் மாரன் காணப்படுதல், பயங்கொண்ட ஏனைய தெய்வங்கள் புத்தரைத் தனியேவிட்டு ஓடுதல் பூமாதேவி புத்தருக்குத் துணைநிற்றல் போன்றவை வரையப்பட்டுள்ளன.

மற்றும் 24 புத்தநிலைகள், ஏழுவாரம், விஷ்ணு, சமன் தெய்வங்கள், பாரிஜாதமலர் போன்றனவும், கர்ப்பக்கிரகத்தில் புத்தர் பரிநிர்வாணமடையும்போது யமன், பேய் பிசாசுகள் தடைசெய்தலும் காணப்படுகின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூமாதேவி






வெஸ்ஸந்தரா ஜாதகம்





வெஸ்ஸந்தரா ஜாதகம்



வெஸ்ஸந்தரா ஜாதகம் (வெள்ளையானை பரிசளித்தல்)



மாரயுத்தம்




சுத்தசோம ஜாதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


4. தலதாமாளிகை ஓவியங்கள்:-

இங்கு நுளைவாசலில் எட்டுப்பேர் மலர்தாங்கி நிற்கும்காட்சி, நவநாரிகுஞ்சரம், அன்னச்சோடி, கஜசிம்ஹ, ஐவர்கொண்ட கண்டிய நடனம் போன்றவை வரையப்பட்டுள்ளன.



நவநாரிகுஞ்சரம்





5. முல்கிரிகலை ஓவியம்:-

கண்டிக்காலச்சிறந்த தாழ்நிலச் சித்திரங்களைக்கொண்ட குகைவிகாரை இதுவாகும். இரண்டு குகைப்பிரிவுகள் உண்டு. கண்டிக்காலத்திற்குரிய இயல்புகள்கொண்ட 24அடிநீளமான புத்தர் உருவம் வரையப்பட்டுக் காணப்படுகின்றது. நவக்கிரகக்கூட்டம், இராட்சதர் உருவங்களால் இவ்விகாரை அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. தேலபத்த ஜாதகக்கதையும் , வெஸ்ஸந்தரா ஜாதகக்கதையும் வரையப்பட்டுள்ளன. இங்குள்ள பெண்உருவங்கள் முக்காடிட்டவாறு உள்ளன. இசைக்கருவிகளுடன் பெண்உருவங்கள் காணப்படுதல் இவ்விகாரையின் சிறப்பியல்பாகும். பச்சை, மண்ணிறம் போன்ற நிறங்கள் இங்குள்ள ஓவியங்களில் அதிகமாகப் பாவிக்கப்பட்டுள்ளன.




இசைக்கருவிகள் இசைக்கும் பெண்கள்



தேலபத்த ஜாதகம்

6. மெதிவல, சூரியகொட,தம்பவா ஓவியங்கள்:-


இவ்வோவியங்கள் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. வெஸ்ஸந்தரா, ஊரங்க போன்ற ஜாதகக்கதைகளும், புத்தரின் சரிதையும் வரையப்பட்டுள்ளன.




தம்பவா ஓவியங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மெதவல விகாரை ஓவியங்கள்



கரகம்பிட்டிய விகாரை ஓவியம்




சூரியகொட விகாரை ஓவியம்






கதமுவ பூர்வாராமயவிலுள்ள ஓவியங்கள்



ஹங்குராங்ஹெற்ற ஆராதனா ரஜமகாவிகாரை ஓவியங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 5. கொழும்புக்கால(தற்கால) ஓவியங்கள்:-

இவற்றை களனிவிகாரையின் புதிய மண்டபம் , கோதமிவிகாரை போன்றவற்றில் காணலாம். இவை கண்டிக்கால ஓவியமுறையினின்றும் வேறுபட்ட முறையில் வரையப்பட்டன. முப்பரிமாணத்தன்மை கொண்டவை.


### 1. களனிவிகாரை ஓவியங்கள்:-

பழைய மண்டபத்தில் கண்டிக்கால ஓவியங்கள் உள்ளன. புதிய மண்டபத்தில் சோளியஸ் மெண்டிசினால் இலங்கையின் சரித்திர வரலாற்றுக் கதைகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவையாவன புத்தர் களனி விகாரையைத் தரிசித்தல், வெள்ளரசு இலங்கை வருகை, ஹேமமாலா, தந்தகுமாரன் வருகை, புத்தர் பேயடக்குதல், சகராஜாவிற்கு பதவி வழங்குதல் போன்றனவாகும்.இவ்ஓவியங்களுக்கான வர்ணங்கள் சோளியஸ் மெண்டிசினாலேயே இயற்கைப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்டவை.


சகராஜாவிற்குப் பதவி வழங்குதல்


வெள்ளரசு வருகை


ஹேமமாலா தந்தகுமாரன்


விஜயன் வருகை


சமன் தெய்வம்


கதிர்காமத்தெய்வம்

### 2. கோதமிவிகாரை ஓவியங்கள்.

இங்கு புத்தரின் சரித்திரநிகழ்வுகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள் ஜோர்ஜ்கீத் என்பவரினால் வரையப்பட்டுள்ளன. தடித்த ரேகைகளும், கருமையான நிறங்களும் கொண்டு புதியபாணியில் வரையப்பட்டவற்றில் மாயாதேவியின் கனவு, புத்தரின் பிறப்பு, யமனை வெற்றி கொள்ளல் போன்ற விடயங்கள் காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாயாதேவியின் கனவு




புத்தரின் பிறப்பு




தேவாராதனை



சித்தார்த்தர் வில்வித்தை பழகுதல்




வயோதிபனைக் காணுதல்



பற்றறுக்கும் சிந்தனையில்



துறவு பூணுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் சிறந்த ஓவியர்கள்:-

1. ஜே.டீ.ஏ. பெரேரா.

அரச நுண்கலைக்கல்லூரி அமைப்பதற்கு முன்னோடியாகச் செய்யப்பட்ட இவர் பின்னர் அதன் அதிபராகவும் இருந்தார். உருவகச் சித்திரக் கலையில் சிறந்து விளங்கியவர்.இங்கிலாந்தின் றோயல் அக்கடமி உறுப்பினராகவும் இருந்துள்ளார்.


2. ஜோர்ஜ்கீத்

இவர் பத்துவயதில் சிலுவையில் யேசு என்னும் சித்திரத்தை வரைந்து விருது பெற்றார். பௌத்த, இந்து, கிறிஸ்தவ சமயசம்பந்தமான பல ஓவியங்களை இவர் வரைந்துள்ளார். இவரின் பௌத்த சமயசம்பந்தமான ஓவியங்களை பொரளை கோதமி விகாரையில் காலாம்.

கிருஷ்ணன் ராதை காதல் காட்சிகளை சித்தரிக்கும் ராகினி விராகினி, தளதா பெரகரா, குயவன் வேலைத்தளம் போன்றவை இவரின் சிறந்த ஓவியங்களுட் சிலவாகும். இவரின் ஆக்கங்களில் தடித்த தெளிவான கோடுகளின் செல்வாக்கைக் காணலாம்.








3. அமரசேகர முதலியார்

நீர் வர்ணம், எண்ணைவர்ணம் ஆகிய இருஊடகங்களிலும் திறமையாக ஓவியங்களை வரைந்தார். 1892 அமைக்கப்பட்ட கொழும்பு கலாபவனத்தை அமைப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டார். "யகதுரு தியனிய" ( பேய்நடனக்காரரின் மகள் ) என்னும் படைப்பு இவரின் உயர்ந்த ஆக்கமாகக் கருதப்படுகிறது. இதில் குறைந்த வெளிச்சமுள்ள அறையில் நடனக்காரரின்மகள் உள்ளே உள்ள பொருட்களை திகிலுடன் பார்ப்பதாக வரையப்பட்டுள்ளது. முகமூடிகள் தொங்குகின்றன. கீழே உடுக்கை போன்ற பொருட்கள் காணப்படுகின்றன. நிழலானது பின்புறம் காட்டப்பட்டுள்ளது. இவர் சிறந்த ஓவியராக மட்டுமன்றி மந்திரவாதியாகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேய்நடனக்காரரின் மகள்


நிலக்காட்சி ஓவியம்

## 4. எல்.டீ.பி.மஞ்சுஶ்ரீ

இவர் சாந்திநிகேதனத்தில் ஓவியம் கற்றார். திப்பராயா சித்தரக்கலைகள் பற்றிய அறிவை வளர்த்தார். பழைய சுவரோவியங்களைப் பிரதிஎடுப்பதிலேயே தனது வாழ்நாளைச் செலவிட்டார். புதிய பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள ஓவியங்கள் இவரால் வரையப்பட்டவையாகும். தாராதேவி என்னும் சித்திரத்தை கண்ணாடிச் செதுக்கலாக ஆக்கிய இவர் இலங்கையின் தேசியவீரர்களில் ஒருவராவர்.







## 5. சோளியஸ் மெண்டிஸ்

களனி விகாரை, உடுபத்தாவ தவபிட விகாரை போன்றவற்றில் ஓவியங்கள் வரைந்ததன் மூலம் இவர் புகழ் பெற்றார். களனி விகாரையில் வரையப்பட்ட சித்திரங்களின் முப்பரிமாணத்திற்கு மிக மென்மையான தூரிகை வீச்சினைக் கையாண்டுள்ளார். உடலழகு, ஆடைகளின் அழகு போன்றவற்றை மிகச்சிறப்பாகக் காட்டியுள்ளார். நவீன பௌத்தக்கலையை புதிய வழியில் திருப்புவதற்குக் காரணமாக இருந்தவர் இவராவார்.

## 6. டபிள்யூ. ஜே. ஜீ. பீலின்.

இவர் பம்பாயில் ஜே.ரி கலையகத்தில் ஓவியங்கற்றார். நிலக்காட்சி ஓவியங்களை அதிகம் விரைந்த இவரின் ஆக்கங்களில் பிக்காசோ, செசானின் செல்வாக்கைக் காணக்கூடியதாக உள்ளது. "அல்பீசியாமரம்" என்னும் ஓவியத்தில் இவரின் நிறப்பிரயோகம் வியக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. நிறத்தூளினால் கரடுமுரடான தன்மையக் காட்டி சித்திரங்களை ஆக்கிய இவர். அதிகளவில் நிலக்காட்சிகள், அசையாப் பொருட்கள் போன்றவற்றையே வரைந் துள்ளார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 7. எம். சார்லிஸ்

பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு ஓவியங்களைப் பயன்படுத்திய ஒரேயொரு கலைஞர் இவராவர். வீடுகளில் தொங்கவிடுவதற்கேற்ற சீவலி பிக்கு, சித்தாத்தர் பிறந்து தாமரைப்பூவில் நடந்துவருதல் போன்ற சித்திரங்கள் இவரது ஆக்கங்களாகும். சீவலி பிக்கு ஓவியம் ஜெர்மனியில் வர்ணச்சித்திரமாகப் பதிப்பிக்கப்பட்டு இலங்கைமுழுவதும் விற்பனைக்கு விடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.





சீவலி பிக்கு



புத்தரின் பிறப்பு

## 8. டேவிட் பெயின்டர்.

1946இல் சர்வதேசச்சித்திரக் கண்காட்சியில் கீழைத்தேச சிறந்தகலைஞருக்குரிய உயர்ந்த விருதைப் பெற்றார். கண்டி திரினிற்றி தேவாலயத்தில் வரையப்பட்டுள்ள கிறிஸ்தவ சமயசம்பந்தமான ஓவியங்கள் இவரின் சிறந்த ஆக்கங்களாகும்.இங்கு யேசுவை தாடியற்று இலங்கைச் சுதேசிபோல் வரைந்த இவர் நுண்கலைக்கல்லூரியின் அதிபராகவும் 10 வருடங்களுக்குமேல் இருந்துள்ளார்.





## 9. ஸ்டான்லி அபேசிங்க.

களனிப் பல்கலைக்கழகத்தில் அழகியல் பிரிவில் கடமையாற்றிய இவர் இலங்கை கலாமன்றத்தின் உபதலைவராகவும் இருந்தார். கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வரையப்பட்ட தளதா பெரகரா , சம்சார பிரச்சினை, தியானம், இலட்சுமியின் பிறப்பு, குயவன் வேலைத்தலம் என்பவை இவரின் ஆக்கங்களாகும். திம்புலாகல ஓவியத்தைப் பிரதி எடுத்தவர். யுனெஸ்கோ கீழ்நாட்டு செயல்திட்டக்குழு அங்கத்தவராகவும், யுனெஸ்கோ இலங்கைப் பிரிவின் பயிற்சியாளராகவும் கடமையாற்றியவர்.

## 10. எச். ஏ. கருணாரத்ன.

களனிப்பல்கலைக்கழகத்தில் சித்திரவிரிவுரையாளராக் விளங்கிய இவர் கொழும்பு, யப்பான், பிரேசில், அமெரிக்கா, இந்தியா, வங்காளதேசம், பிரித்தானியா ஆகிய நாடுகளில் சித்திரக் கண்காட்சியை நடத்தினார். நீர் வர்ணத்தில் காணக்கூடிய ஊடுதெரியும் தன்மையை எண்ணெய்வர்ணத்திலும் வரைந்து காண்பித்துப் புகழ்பெற்றார். வேகமான தூரிகைவீச்சைக் கொண்ட இவரது ஓவியங்கள் கட்புலனாகு காவியங்கள் எனப் பாராட்டப்பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 11. ரிச்சாட் கப்ரியால்.


இவர் 43 ஓவியர்குழுவிலும் உறுப்பினராக இருந்தார். கம்பிட்டிய தேசிய மையவாடியில் உள்ள மரச்சிற்பம், திம்பிரிகஸ்ஸாய சென் திரேசா வழிபாட்டுத்தல சுவரோவியம், மக்கள்வங்கி தலைமை அலுவலக ஓவியம், பம்பலப்பிட்டிய இயேசு இல்லத்தில் உள்ள மரச்சிற்பம் போன்றவை இவரின் ஆக்கங்களாகும்.













மக்கள் வங்கி தலைமையலுவலக ஓவியம்

## 12. ஐவன் பீரிஸ்.



இவர் நவீன சித்திரக்கலையில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். கடற்கரை, மீனவர் குடிசைகள், தென்னைமரங்கள், கடல், வள்ளங்கள் போன்றவற்றை நாம்காணும் முறையைவிட வேறுபட்டமுறையில் ஓவியமாக வரைந்தார். இவரும் 43 ஓவியக்குழுவின் ஓர் உறுப்பினராவர்.


## 13. ஜஸ்டின் தரனியகல



பிக்காசோவின் கியூபிசத்தில நாட்டமுள்ள வராகக் காணப்பட்டார். பெருமளவில் மனித உருவங்களையே வரைந்தார். யுனெஸ்கோ வழங்கிய பரிசை இவரது மீன் என்னும் சித்திரம் பெற்றுக் கொடுத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. சேனக சேனநாயக்க.



1951இல் பிறந்த இவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் பேரனாவார். 1996 நவம்பரில் இவரின் நூறாவது தனிநபர் ஓவியக்கண்காட்சி கொழும்புக் கண்காட்சியகத்தில் நடைபெற்றது. 18 நாடுகளில் இவரின் ஓவியக் கண்காட்சிகள் நடைபெற்றுள்ளன. வயல்கள், கிராமியக் காட்சிகள் போன்றவற்றுடன் அதிகமாக மிருகங்களி ‑ருவங்களையும் இவர் வரைந்துள்ளார். மகா யுத்தய, கிருஷ்ணா போன்றவையும் இவரின் சிறந்த படைப்புகளாகும்.

## 15. திலக அபேசிங்க.

மனித உருவங்களை எளிமையாகவும், நிறங்களை மென்மையாகவும் பயன்படுத்தி ஓவியங்கள் வரைந்தார். சமநிலையில் கூடிய கவனஞ்செலுத்திய இவர் தனது படைப்புகளைவைத்து பிரேசில், கனடா, பாரிஸ், இத்தாலி, வங்காளதேசம் போன்ற இடங்களில் கண்காட்சிகளை நடத்தினார். ஆகாயம், பூக்களை ஏந்திய பெண்கள். ஒரு தாயின் வாழ்க்கை போன்றவை இவரின் சிறந்த சித்திரங்களாகும்.

## 16. ஜீ. எஸ். பர்ணாந்து.

சிறந்தமுறையில் நீர்வர்ணச்சித்திரங்களை வரைந்து புகழ்பெற்றவர். காட்டூண் கலைஞராக லங்காதீபவில் பணியாற்றியவர், ராஜகீய விக்கிரயம என்னும் திரைப்படத்தில் கலைப் பணிப்பாளராகவும் இருந்தவர்.

## 17. ஹரி பீரிஸ்

43 ஓவியக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றிய இவரால் சபுமல் நிறுவனம் என்னும் ஓவிய அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.








# சிறந்த சிற்பக் கலைஞர்கள்:-

## 1. திஸ்ஸ ரணசிங்க.

இங்கிலாந்தில் செல்சியா சொசைட்டி ஒவ் ஆட்சில் சிற்பக்கலை பயின்ற இவரின் ஆக்கங்கள் ஐரோப்பிய நாடுகளிலும் பிரசித்தி பெற்றுள்ளன. கொழும்பு ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள முதலாவது பிரதமர் டீ. எஸ். சேனநாயக்காவின் உலோகச்சிலை ,றோயல் கல்லூரியின் நவரங்ககலவிலுள்ள இலங்கையின் நாடகக்கலையைச் சித்தரிக்கும் புடைப்புச்சிற்பம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரின் கடுந்தவத்தைச் சித்தரிக்கும் துஸ்தரக்கிரியாவ என்னும் உலோகச்சிற்பம் போன்றவை இவரின் சிறந்த படைப்புகளாகும்.



நவரங்ககலவிலுள்ள புடைப்பச் சிற்பம்




துஸ்கரக்கிரியாவ

## 2. ஹென்றி தர்மசேன.

பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்திற்கு முன்னால் அவுக்கண புத்தர்சிலை போன்ற சாயலில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையானது இவரது சிறந்த ஆக்கமாகும்.

# இந்துக் கட்டிடக்கலை:-




இந்துக்கட்டிடக் கலைமரபானது இந்தியாவில் தோன்றியதாகும். இந்து வழிபாட்டுத்தலங்களின் அமைப்பு மயமதம், காசியபகம், மானசாரம், போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. கோவிலானது கர்ப்பக்கிரக மண்டபம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம், சுற்றுமதில்கள், கோபுரம் என்பவற்றைக் கொண்டிருக்கும். கர்ப்பக்கிரக மண்டபமானது

1) உத்தரமட்டவேலை,
2) இரட்டைப்பஞ்சாங்க வேலை,
3) முகபத்திர வேலை ஆகியவற்றில்

ஏதாவதொரு சிற்ப முறையில் அமைக்கப்படும். எம்முறையில் அமைக்கப்பட்டாலும் பின்வரும் ஆறு பிரதான பகுதிகளைக் கொண்டிருக்கும்.

அவையாவன கீழிருந்து மேலாக


1) உபபீடம், 2) அதிஸ்டானம், 3) பாதவர்க்கம், 4) பிரஸ்தளம், 5) விமானம், 6) தூபி

என்பவையாகும்.

விமானஅமைப்பு மூலமூர்த்திகளுக்குத் தக்கவாறு மூன்று வடிவத்தில் அமைக்கப்படும்.

1) வேசரம் (வட்டம்)
2) நாகரம் (சதுரம்)
3) திராவிடம் (எண்கோணம்)

கோபுரத்திலும், தூண்களின் போதிகை களிலும், அசைவுறு பொருட்களான வாகனம், தேர் போன்றவற்றிலும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம்.




தூண்போதிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களிலுள்ள தெய்வச்சிலைகள் கருங்கல், வெண்கலம் போன்றவற்றால் ஆக்கப்பபட்டிருக்கும். விக்கிரகத்தின் பின்புறம் இடப்படும் திருவாசியானது மகரதோரணம் போன்றதாகும்.

## இஸ்லாமிய கட்டிடக்கலை:-


இஸ்லாமிய கட்டிடக் கலையின் தாயகம் அரேபியா ஆகும். கி.பி. 622 இல் மதினாவில் கட்டப்பட்ட க.்பா எனப்படும் அமைப்பே இஸ்லாமியக் கட்டிடக் கலையின் ஆரம்பகாலக் கட்டிடம் ஆகும். இது கல்லாலும், செங்கல்லாலும் கட்டப்பட்ட சதுரவடிவமான கூரையற்ற அமைப்பாகும். மினார்கள் எனப்படும் தூபி அமைப்பு முஅவியா(றலி) என்னும் கலிபாவின் காலத்தில் தோற்றம் பெற்றது.

இன்றைய மசூதியானது படிவரிசை, மினார்கள் பிறை நட்சத்திரம் கொண்ட கும்மட்டம், தூண்கள் ,முன்நுளைவாசல்கள், தடாகம், பக்கநுளைவாசல்கள் மிஹ்ராப், பிரசங்கமேடை என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளன. பள்ளிவாசலில் உருவம் எதுவும்வைத்து வணங்கப்படுவதில்லை. திருக்குரான் வசனங்கள் சுவர்களில் காணப்படும்.

பள்ளிவாசல்களில் அரபு எழுத்தணிக்கலை அலங்காரம் வரையப்பட்டிருக்கலாம். க.்பாவில் தோன்றிய அல்கூபி முறையே முதன்முதலில் தோன்றிய எழுத்தணி வடிவம் ஆகும். இதைப்போன்று 120 பிரிவுகள் தற்போது உள்ளதாயினும் ஆறுபிரிவுகளே பாவிக்கப்படுகின்றன.
அவையாவன 1) அல்கூபி, 2) அத்தீவானி 3) அஸ்ஃலுஸ், 4) அர்ரிகா, 5) அந்நஸ்கி, 6) அல்பாரிஸி. இலங்கையிலுள்ள இஸ்லாமியர் கட்டிடங்கள் மொகலாயரின் கட்டிடக்கலை முறையைப் பின்பற்றியே அமைக்கப்பட்டுள்ளன.




மசூதி



க.்பா



அரபு எழுத்தணி







அரபு எழுத்தணிகள்

## கிறிஸ்தவக்கட்டிடக்கலை:-

கிறிஸ்தவக்கட்டிடக் கலையின் தாயகம் ஐரோப்பாவாகும். போர்த்துக்கேயரின் வருகையுடனேயே இலங்கையில் கிறிஸ்தவக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. தேவாலயமானது (CHURCH) பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும், அவையாவன வாசல், மண்டபம், வாசகம் வாசிக்குமிடம், பக்கஅறை, பீடம் என்பனவாகும். முகப்பு முக்கோணவடிவத்தில் காணப்படலாம். அதன் உச்சியில் சிலுவை காணப்படும். வாசலின் ஒரு பக்கத்தில் உயர்ந்த கோபுரத்தில் மணி அமைக்கப்பட்டிருக்கும். உள்ளே உருவச்சிலைகள், சிலுவை போன்றவை காணப்படலாம். றோமன்முறை, கோதிக்முறை ஆகிய இரண்டு கட்டிடமுறைகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரோமன் கட்டிட முறையிலமைந்த கிறிஸ்தவஆலயம்    கோதிக் முறையிலமைந்த கிறிஸ்தவஆலயம்

***புத்தர் சிலைகளில் காணப்படும் முத்திரைகள்:-***



1) தியான முத்திரை

இடதுகைமேல் வலதுகைவைத்தபடி காணப்படுதல் தியான முத்திரை எனப்படும்.

உ-ம்:- அநுராதபுரம் சமாதிப்புத்தர்சிலை தொலுவில, கல்விகாரை அமர்ந்த புத்தர்சிலை போன்றன.



2) அபயமுத்திரை

வலதுகையைக் காட்டியவாறு காணப்படுதல் அபயமுத்திரை ஆகும். சஸ்சேறுவ, பங்குளிய புத்தர்சிலைகள் இவ்வாறு காணப்படுகின்றன.



3) பூமிபரிச முத்திரை.

வலதுகை பூமியை நோக்கியவாறு காணப்படுதல் பூமிபரிச முத்திரையாகும். இவ்வாறான புத்தர் சிலைகள் தம்புள்ள, மெதவல விகாரைகளில் உள்ளன.



4) தர்ம சக்கர முத்திரை

தர்மப்போதனையைக் கையினால் சித்தரிப்பது தர்மசக்கர முத்திரையாகும். இலங்கையில் தர்மசக்கர முத்திரையுடன் புத்தர் சிலைகள் காணப்படவில்லை. இந்தியாவின் சாரநாத் புத்தர்சிலை தர்மசக்கர முத்திரையுடன் உள்ளது.

## திரிபங்க நிலை



சிற்பங்கள் நேராக நிமிர்ந்து காணப்படுதல் சமபங்க நிலை எனப்படும். அவ்வாறு நேராக இல்லாமல் மூன்று இடங்களில் வளைவுகளுடன் காணப்படுதல் திரிபங்க நிலை என்று அழைக்கப்படும். இந்துக்கடவுள்களின் சிலைகளும் திரிபங்க நிலையில் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய ஓவியங்கள்:-

### 1) அஜந்தா

இந்தியாவின் மகராஷ்திரா மாநிலத்தில் (முன்னாள் ஐதராபாத்சமஸ்தானத்தில்) ஔரங்கபாத் என்னும் இடத்தில் இருந்து 65 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. மலையின் அடிவாரத்தில் பிறைச்சந்திர வடிவத்தில் 29 குகைகள் வெட்டப்பட்டுக் காணப்படுகின்றன. இக்குகைள் கி.மு. 2ம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 7ம் நூற்றாண்டு வரையான காலத்தில் வெட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இக்குகைகளில் 9, 10, 19, 28, 29 ம் இலக்கக்குகைகள் தாது கோபங்களாகவும், ஏனையவை விகாரைகளாகவும் கருதப்படுகின்றன. சமய பிரிவில் நோக்கும் போது 8, 9, 10, 12, 13 ம் குகைகள் ஹீனாயான பௌத்த (தேரவாத பௌத்தம்) பிரிவிற்குரியதாகவும் ஏனையவை மகாயான பௌத்தத்திற்கு உரியதாகவும் காணப்படுகின்றன. காலத்தின் அடிப்படையில் நோக்கும் போது 8, 9, 10, 12, 13 ம் குகைகள் கி.மு. 200 - கி.பி 200 வரையில் வெட்டப்பட்டவையாகும். 10 ஆவது குகையே மிகவும் பழைமையானது. 6,7,11ம் இலக்கக் குகைகள் கி.பி. 450 - கி.பி. 500 ம் ஆண்டு வரையில் வெட்டப்பட்டவையாகும். 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26 ம் இலக்கக் குகைகள் கி.பி. 6ம் நூற்றாண்டுக்கிடைப்பட்டவையாகும். 1, 2, 3, 4, 5ம் இலக்கக் குகைகள் கி.பி. 6ம் - 7ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டவையாகும். சாதவாகனர், குஷானர், குப்தர், வாகாடகர், ஆகிய அரச பரம்பரையினர் குகைகள் வெட்டப்பட்டு ஓவியம் வரைவதற்கு காரணமாய் இருந்தார்கள் இக்குகைகளில் 1, 2, 9, 10, 16, 17ம் இலக்க குகைகள் புகழ்பெற்றவை ஆகும்.

இக்குகைகளில் பௌத்த சமயம் சம்பந்தமான ஜாதகக் கதைகள், புத்தரின் வரலாற்று நிகழ்வுகள் போன்றவை ஓவியங்களாக உள்ளன. ஈரச்சுதை, உலர் சுதை ஆகிய இரு முறைகளிலும் ரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கீழைத்தேச பாணியில் வரையப்பட்டுள்ளன. நீண்டவிரல்கள், ஒடுங்கிய இடை, திரண்ட மார்பகங்கள், காதளவிற்கு நீண்ட கண்கள் போன்றவை இவ் ஓவியங்களின் சிறப்பியல்பாகும்.

செங்காவி, மஞ்சள் காவி, புகைகறுப்பு, நீலம், வெள்ளை போன்ற வர்ணங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

1வது குகையில் காணப்படும் தாமரைப்பூவுடனான திரிபங்க நிலையில் அமைந்த புத்தர் உருவம் மிகச்சிறந்த ஓவியமாக கொள்ளப்படுகின்றது. இவ்ஓவியம் போதிசத்துவ பத்மபாணி என்னும் சிறப்பு பெயரினால் அழைக்கப்படுகின்றது. இக்குகையில் போதிசத்துவ வஜ்ஜிரபாணி எனப்படும் ஓவியமும் காணப்படுகின்றது. 1ம் குகையில் தர்மசக்கர முத்திரையுடனான புத்தரின் சிலைஒன்றும் உள்ளது. மற்றும் புத்தரின் வரலாற்று, வாழ்க்கைச்சம்பவங்களான புத்தரும் மனைவியும் அமைந்த காட்சி, புத்தர் தவம் செய்யும் போது மாறன் என்பவன் தன்னுடைய இளம் புதல்வியர்களை அனுப்பி மேனியழகைக் காட்டி புத்தரை மயக்க முயலும் காட்சி, நந்தன் துறவு பூணுதல், புத்தர் பல்வேறு மாயஉருவங்களில் காட்சி அளித்தல், மற்றும் சிபி ஜாதகம், போன்றவையும் வரையப்பட்டுள்ளன. பின்னணியில் பரிவாரங்கள் மாந்தர்கள், தேவர்கள், அசோக கமுகு மரங்களில் குரங்குகள் குதித்து விளையாடல், ஆண் பெண் மயில்களின் காதற்காட்சிகள் போன்றனவும் காணப்படுகின்றன.

2வது குகையில் போதிசத்துவர் தத்துவத்தை சித்திரிக்கும் நீண்ட ஓவிய அணிகள், ஹம்ச ஜாதகம், விதுரபண்டித ஜாதகம், ருருஜாதகம், கசாந்தி ஜாதகம், பூரண என்பவனை புத்தர் தன்வழிப்படுத்தும் காட்சி என்பன காணப்படுகின்றன. புத்தரின் ஆயிரம் வர்ண ஓவியங்களை கொடையாக அளித்ததாக கூறும் பட்டயமும் காணப்படுகின்றது.

10 வது குகையில் ஓர் அரசன் பரிவாரத்துடன் போதிமரத்தை வழிபடும் காட்சி, ஓர் அரசன் பத்துப் பெண்களுடன் போதிமரத்தைச் சுட்டிக்காட்டி ஏதோ கூறும்காட்சி, ஷட்தந்த ஜாதகம் (அறு கோட்டியானையின் கதை) போன்றவை காணப்படுகின்றன.

16வது குகையில் தூங்கும் மாதின் உருவம், புத்தரின் மூன்று உருவங்கள், நந்தன் என்னும் அரசரின் வாழ்க்கை வரலாறு, தேவமாந்தர்கள் (அப்ரசா) அஸ்திஜாதகம், மகாஉம்மக்க ஜாதகம், சுத்தசோம ஜாதகம் போன்றவை காணப்படுகின்றன.

17வது குகையில் 7 உருவங்களில் தீட்டப்பட்ட புத்தர், காற்றில் பறந்து செல்லும் அழகிய தேவதைகள், தேவதத்தன் புத்தர் மீது யானை ஏவுதல், விஜயனின் இலங்கை வருகை, புத்தர் மனைவியிடமும், மகனிடமும் பிச்சை ஏந்துதல், இந்திரனும் சில கந்தர்வர்களும் வானத்தில் பறந்து செல்லும் காட்சி, மகாகபி ஜாதகம், சரபமிக ஜாதகம், சிம்மல அவதானகதை, இறக்கும் இளவரசி போன்றவை காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இரண்டு எருதுகள் சண்டையிடல், இரண்டு யானைகள் சண்டையிடல், நாட்டுப்புறக்காட்சிகள், அலங்காரங்கள், குள்ளர்கள் போன்றனவும் வரையப்பட்டுள்ளன.

குறிப்பு :- 16ம், 17ம் குகை ஓவியங்கள் இலங்கை சிகிரியா ஓவியங்கள் வரையப்பட்ட காலத்தில் வரையுப்பட்டவையாகும்.





பிச்சையேந்தும் புத்தர்



அமர்ந்திருக்கும் கன்னி


போதிசத்துவ பத்மபாணி



புத்தரை மயக்கமுயலுதல்




யானைகள் சண்டையிடுதல்




பாரசீக இளவரசன் வருகை



பெண்உருவம்



சாம்பேஜ ஜாதகம்






மகாஜனக ஜாதகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எருதுகள் சண்டையிடுதல்



அப்சரா


அலங்காரம்


மகாஜனக ஜாதகம்


வஜ்ஜிரபாணி போதிசத்துவர்


இறக்கும் இளவரசி


குள்ளர்


அலங்காரம்

## 2) எல்லோரா.

அஜந்தாவிந்கு தென்மேற்கே 60 மைல் தொலைவில் எல்லோராக் குகைகள் அமைந்துள்ளன. 34 குகைகளில் பௌத்த, இந்து, சமணசமயச் செதுக்கல்கள், ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை கி.பி. 6ம் நூற்றாண்டுக்கும் கி.பி. 12ம் நூற்றாண்டுககும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும். 1 - 12 வரையானவை பௌத்தகுகைகளாகும். இவை காலத்தால் முற்பட்டவை. 10வது குகை விஸ்வகர்மா குகை என அழைக்கப்படுகிறது.

13 - 29 வரையான 17 குகைகள் இந்துசமயக் குகைகள் ஆகும். இதில் 14ம் குகை இராவணன்குகை ,16ம் குகை கைலாசக்கோவில் எனவும், 21வது குகை இராமர் குகை எனவும் 29வது குகை சீதைகுளியலறை (துமார் லேனா) எனவும் அழைக்கப்படுகின்றன.

30 - 34 வரையான 5 குகைகள் சமணசமயக் குகைகள் ஆகும். 33வது குகை சகனாதன்சபை எனவும், 34வது குகை இந்திரன்சபை எனவும் அழைக்கப்படுகின்றது. இந்திரன் சபையில் 24 சமணத்தீர்த்தங்கரரின் உருவங்கள், இந்திரசபை நடனம், இந்திரன், ஐராவதம், தன்மனைவியோடு எருமையில் செல்லும் யமன் போன்றவை ஓவியங்களாக உள்ளன.

கைலாசக்கோவில் மலைக்குன்றை வெட்டி அமைக்கப்பட்ட பெரியதோர் கோவிலானது ராஷ்டிரகூட அரசன் கிட்டினனால் வெட்டுவிக்கப்பட்டதாகும். இங்கு காணப்படும் ஓவியங்களாவன.

ஒரு தாமரைக்குளம் உள்ளது. அதில் இரண்டு யானைகள் இறங்கி விளையாடுகின்றன. நீரில் ஏற்படும் சலனத்தினால் தாமரை இலை வளைந்து தெரிகிறது. யானை மீனொன்றைப் பிடித்திருக்கிறது. குளத்தில் பல குள்ளர்களின் உருவங்களும் காணப்படுகின்றன. மேலே யானையில் செல்லும் தேவன் தலையைத் திருப்பி பார்த்து வணங்குகிறான். கந்தர்வர்கள் வித்தியாதரர்கள் ஆடிப்பாடிச் செல்கின்றனர். இங்கு வரையப்பட்ட உருவங்களில் சிறிய இடை, பரந்தகன்ற மார்பு, நெடிதுயர்ந்த மகுடம் போன்றன சிறப்பியல்பாக உள்ளன.

இன்னொரு இடத்தில் சரஸ்வதியும், இலட்சுமியும் தாமரையின் மீது குவிந்த கைகளுடன் உள்ளனர். திருமால் சங்கு சக்கரமேந்தி கருடன் மீது அமர்ந்துள்ளார். முகங்களுக்கு வெளியே நீண்டிருப்பது போன்ற மூக்கும் பார்ப்போருக்கு நேராக அமைந்த நீண்ட கண்கள் பிதுங்கியுள்ளது போல் காணப்படுவதும் இவ் ஓவியத்தின் சிறப்பம்சமாகும். வேறோர் இடத்தில் தாண்டவமாடும் சிவன், பிள்ளையார், முருகன் உருவங்கள் காட்சியளிக்கின்றன. மேற்கு வாசலில் போர்க்களக்காட்சிகளை சித்தரிக்கும் பல ஓவியங்கள் உள்ளன. இதில் யானையின் தாக்குதலைத் தாங்க முடியாமல் கழுத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருப்பிப் பின்வாங்கும் குதிரையில் அமர்ந்து தாக்கமுயலும் ஈட்டி தாங்கிய வீரன், அவன்பின் யானைகள் அவற்றிற்குப் பின்னே விரைந்து வரும் குதிரைப்படை, வில்லும் அம்பும் தாங்கி கவசமணிந்து செல்லும் குதிரைவீரர்கள் போன்றவை காணப்படுகின்றன. தசாவதாரக் குகையில் தசாவதாரக் காட்சிகளும், 16வது குகையில் இராவணன் கைலாச மலையைப் பெயர்க்கும் காட்சியும் சிற்பமாக உள்ளன.


சிவன்



இராவணன் கைலாசமலையைப் பெயர்த்தல்



சிவநடனம்



கைலாசக்கோயில் செதுக்கல்கள்


கைலாசக்கோயில்


நீரில்விளையாடும் யானைகள்



யானைச்செதுக்கல்


சமணத்தீர்த்தங்கரர்கள்


குகைவாசல்

## 3) பாக்குகை ஓவியங்கள்.

இந்தியாவின் முன்னாள் குவாலியர் சமஸ்தானத்தில் தற்போதைய மத்திய பிரதேசத்தில் பாக் என்னும் சிற்றூர் உள்ளது. இங்கு ஒன்பது குகைகளில் கி.பி. 5ம் நூற்றாண்டில் வரையப்பட்ட ஓவியங்கள் தற்போது அழிந்த நிலைகளில் காணப்படுகின்றன. நான்காவது குகை ரங்கமகால் என அழைக்கப்படுகின்றது. 8வது குகையில் சிங்கத்தின் உருவம் குறைப்புடைப்பு சிற்பமாகக் காணப்படுகின்றது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு காணப்படும் ஓவியங்கள் :-

ஒரு பெண் இன்னொரு பெண்ணைத் துக்கம் விசாரித்தல், நடுவில் ஒரு பெண் நிற்க அப்பெண்ணை சுற்றிவர ஒன்று விட்ட ஒருவர் கோலாட்டக் கம்புகளுடன் நின்று நடனமாடுதல், இது அல்லிசால்ய நடனம் அல்லது கூட்ட முதற்பாட்டு என அழைக்கப்படுகின்றது. பாகர்கள் அமர்ந்திருக்க ஐந்து யானைகள் பவனிவருதல், குகையின் விட்டத்தில் வரையப்பட்டுள்ள புறா உருவங்கள் போன்றன காணப்படுகின்றன.

## 4) இந்தியாவின் வரலாற்றிற்கு முற்பட்ட கால ஓவியங்கள்.

இவை இந்தியாவின் கைமூர் மலைத்தொடரில் காணப்படும் கற்குகைகள், விந்திய மலைத்தொடரில் காணப்படும் குகைகள், சிங்கண்பூர், யோகிமாரா, மீர்சாப்பூர் போன்ற இடங்களிலுள்ள குகைகள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. அனேகமாக வேட்டைக் காட்சிகள், மாடுகள் கொண்ட இவை கோட்டுச் சித்திரங்களாகும்.



## சிந்துவெளிக் கலைகள் (மொஹஞ்சதாரோ , ஹரப்பா) :-

சிந்துநதிக்கரையில் கி.மு 3250 இல் இருந்து கி.மு 2750 வரையிலான காலத்தில் சிறந்து விளங்கிய மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் காணப்பட்ட கலைவெளிப்பாடுகள் சிந்துவெளிக்கலைகள் எனப்படும். முன்பு இந்தியாவில் அடங்கிய இப்பிரதேசங்கள் பாகிஸ்தான் பிரிவினையின்பின் பாகிஸ்தானில் அடங்குகின்றன. மொஹஞ்சதாரோ சிந்து மாகாணத்திலும், ஹரப்பா மேற்கு பஞ்சாப் மாகாணத்திலும் அடங்குகின்றது. இவ்விரண்டு இடங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 300 மைல்களாகும். இவ்விரண்டு நகரங்களுக்குமிடையில் லொகூஞ்சதாரோ, தகஞ்சதாரோ, சக்பூர்பானிசியால், அலிமொறாத் , பாண்டிவாகி, அம்ரி, கோட்காறிகாங்கன் , குல்லி போன்ற இடங்களிலும் பழைய நாகரீகங்களின் எச்சங்களைத் தாங்கிய மண்மேடுகள் காணப்படுகின்றன.

சேர் ஜோன் மார்ஷல், சேர் அலெக்சாண்டர் கன்னிங்காம் போன்றோர் செய்த அகழ்வாராய்ச்சியின் பயனாக இந்நாகரிகங்கள் 1921ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன.

திட்டமிட்ட நகரஅமைப்பு , வீதியமைப்பு, வடிகால்அமைப்பு போன்றவை இந்நாகரிகத்தின் சிறப்பம்சங்களாகும். வீடுகள் அமைக்க சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்லில் செய்யப்பட்ட திரிகைகள், சில்லுப்பூட்டிய வண்டிகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. துளையிட்ட சிவலிங்கங்கள் செய்து கழுத்தில் அணிந்திருந்தனர், சாயமூட்டிய ஆடைகளை உபயோகித்துள்ளனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள், முத்திரைகள் இங்கு வாழ்ந்த மக்களின் கலைத்திறனை நமக்கு உணர்த்துகிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட கலைவெளிப்பாடுகள்:-

1) பூசாரி அல்லது மதகுரு.

இவ்வுருவம் சுண்ணாம்புக்கல்லில் செதுக்கப்பட்டது. தாடியும், உடையில் இலைவடிவ அலங்காரத்தையும், நெற்றியில் தாயத்தையும் கொண்டுள்ளது. ஏழுஅங்குல உயரமுடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) முண்டப்படிமை.

இது செம்மணற்கல்லில் செதுக்கப்பட்டது. தலை, கைகால்கள் அற்றநிலையில் உள்ளது.

3) தாயும் இரட்டையரும்.

இது சுடுமண் சிற்பம். தாய் இரண்டு குழந்தைகளை அணைத்துள்ளவாறு உள்ளது.

4) நடனப்படிமை.

சுண்ணாம்புக்கல்லால் ஆனது. நான்கு அங்குல உயரமுடையது.

5) நாட்டிய மங்கை.

வெண்கலத்தால் ஆனது. இடதுகை முழுவதும் வளையல் அணிந்துள்ள நிர்வாண உருவமாகும். நான்கு அங்குல உயரமுடையது.

6) முந்துசிவன் அல்லது கொம்புக்கடவுள்.

தலையில் இரண்டு கொம்புகள், நடுவே இலைக்கொத்து, இடுப்பில் இரட்டைவார்ப்பட்டை, மூன்று முகங்கள், ஒருபுறம் யானை புலி மறுபுறம் எருது காண்டாமிருகம், கீழ்ப்புறம் மான்கள் கொண்ட இவ்வுருவம் முந்துசிவனாக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. இது சுடுமண் சிற்பமாகும்.

7) ஒருபெண் ஒருகையால் வயிற்றையும், மறுகையால் நிலத்தையும் தொட்டுக்கொண்டிருக்கின்றது. இது பூமாதேவி எனப்படுகின்றது.

8) ஓர்உருவம் அமர்ந்திருக்க அதன் இருமருங்கிலும் மக்கள் வரிசையாக வணங்குவது போலுள்ள வடிவம்.

9) கொம்புத்தெய்வமும் கொம்புப்புலியும் சண்டையிடல்.

10) ஆடையின்றி தலையில் கொம்புகளுடன் யோகநிலையிலுள்ள வடிவம். இது யோகி எனப்படுகின்றது.

11) கொம்புள்ள தேவதைகள்.

12) ஒற்றைக்கொம்பு எருது.

13) ஆறுதலை விலங்கு.

14) யானை

15) ஆறுகதிருடன் கூடிய எருது உருவங்கள்.

16) தலையாட்டும் எருது

17) காண்டாமிருகம்

18) முதலை

19) முறுக்குண்ட கொம்புகளையுடைய செம்மறியாடுகள்

20) புறா, கருடன், பாம்பு


21) விந்தையான உருவையுடைய விலங்குகள்.


22) காட்டுக்கோழிகள் சண்டையிடல்

23) மிருதங்கம் , வீணை போன்ற வாத்தியக் கருவிகள்.

24) அலங்காரமிடப்பட்ட மட்பாண்டங்கள் என்பவையாகும்.

சில முத்திரைகளில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் இதுவரையில் வாசித்தறியப்படவில்லை.




கொம்புக்கடவுள் மதகுரு/ பூசாரி நாட்டியமங்கை ஒற்றைக்கொம்பு எருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யானை முத்திரைகள்



கூடையுடன்பெண்



பெண்தெய்வம்




ஆறுகதிர்களையுடைய எருது முத்திரைகள்




மட்பாண்டம்



முண்டப்படிமை



தலையாட்டும் எருது



குல்லிப்பதுமைகள்



குரங்கு

## இராஜபுத்தான ஓவியங்கள்:- ( கி.பி 16ம் - கி.பி 19ம் நூற்றாண்டு )

இந்தியாவில் ஆர்ச்சாவிலிருந்து பிக்கானிர் வரையும் தாட்டியா, உதய்பூர், ஜெய்ப்பூர், செனகட் போன்ற இடங்களில் வளர்ந்த ஓவியங்கள் இராஜபுத்தான ஓவியங்கள் எனப்படும். இவை சைவ, வைஷ்ணவ சமயம் சார்ந்த ஓவியங்களாகும்.

இக்காலத்தில் இமயமலைச்சாரலிலுள்ள பஷோலி, குலோர் , காங்ரா, கத்வால் முதலிய இடங்களில் வளர்ந்த ஓவியம் பஹாரி ஓவியம் எனப்படும்.

இராஜபுத்திரரின் இசையை ஓவியங்களால் விளக்கும் சித்திரமானது இராகமாலா சித்திரங்கள் எனப்படும்.

ஆச்சார்யா அரண்மனையிலுள்ள கிருஷ்ண கோபியர் , நடனமங்கையர், குதிரைவீரர்கள், தாட்டியா அரண்மனையிலுள்ள இராசலீலைஓவியம், மதுமாதவி போன்றவை இக்கலைமரபில் வரையப்பட்டவையாகும்.

பஹாரி ஓவியங்களை எடுத்துக்கொண்டால் அதில் கிருஷ்ணர் ராதை காதல் காட்சிகளைச் சித்தரிக்கும் ஓவியம் காங்ரா என்றஇடத்தில் வரையப்பட்டதால் அவை காங்ரா ஓவியங்கள் எனப்படும். மற்றும் கோதூளி, வனிதையும் வல்லூறும், இராமர் இலங்கை முற்றுகை, வர்சவிகாரம் போன்றவையும் சிறந்த பஹாரி ஓவியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருஷ்ணன் ராதை



கோதூளி





வர்ஷவிகாரம்

## மொஹலாயக்கலை:- ( கி.பி 16 - கி.பி 18ம் நூற்றாண்டு ):-

மொகலாய மன்னனான பாபர் 1526ல் இந்தியாவில் மொகலாயர் ஆட்சியை நிறுவியதைத் தொடர்ந்து அவர்களினால் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட கலைமரபு மொகலாயக்கலை எனப்படுகிறது. இக்கலைமரபானது மொகலாயரின் தாயகமான பாரசீகத்தில் இருந்தே தோன்றியதாயினும் பின்பு இந்தியக் கலப்புக்கொண்டதாகவே வளர்ச்சியடைந்தது. இக்கலைமரபில் வரையப்பட்டவற்றில் அநேகமானவை சிற்றோவியங்களாகும். இந்தியாவின் முதலாவது மொகலாய மன்னனான பாபர் இவர் காலத்து ஓவியரான ''பிராத்'' என்பவரின் ஓவியங்களில் மனதைப்பறிகொடுத்து ஓவியக்கலையில் நாட்டங்கொண்டார். இவரினால் பஞ்சாப், டில்லி போன்ற இடங்களில் மசூதிகள் மட்டுமே அமைக்கப்பட்டன.

பாபரின் பின் ஆட்சிக்குவந்த மகனான ஹுமாயூன் ஆக்ராவிலும், பாத்திபாத்தி என்னுமிடத்திலும் மசூதிகளை அமைத்தான். இவரின் காலத்திலேயே மீர்சையத்அலி, வாகாஅப்துல் ஸமது போன்ற ஓவியர்கள் பாரசீகத்திலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். அமீர்ஹம்சா என்றநூல் ஓவியவடிவமாக்கப்பட்டது. இதற்கு இந்திய ஓவியர்களும் துணைபுரிந்தனர். ஹுமாயூன் இறந்தபின்பு அவனது மனைவி ஆசிபேகத்தினால் ஹுமாயூன் கல்லறைமாடம் அமைக்கப்பட்டது. எண்கோண வடிவான அறைகளையும்140அடி உயரமுள்ள வளைகூண்டையும் இதுகொண்டது.

இவரின் மகனான அக்பர் ஆட்சிப்பீடம் ஏறியதும் மொகலாயக்கலை பெருவளர்ச்சியடைந்தது. அக்பர் அப்தல் ஸமதுவிடம் ஓவியம் பயின்று தானும் ஓவியம் வரைந்தார். இந்திய ஓவியர்களான தஸ்வந்த், வாசவ்கேசவ், லால், ஹரன். ஜகன்நாத் போன்றோர் பாரசீக ஓவியர்களுடன் சேர்ந்து தாரப்நாமா, தைமூர்நாமா, பாபர்நாமா, இராமாயணம், மகாபாரதம், கீதகோவிந்தம், பஞ்சதந்திரம் போன்ற நூல்களுக்கு ஓவியங்கள் வரைந்தார்கள். சூரியஉதயம், மறைவு, அண்மை சேய்மை, மேகஅடர்த்தி ஆகிய ஓவியங்கள் மேலைத்தேய பாணியில் வரையப்பட்டன. அக்பரினால் ஆக்ராக்கோட்டை, லாகூர்க்கோட்டை, அலகபாத்கோட்டை, ஆச்மீர்க்கோட்டை, பதேபூர்சிக்ரி போன்றவை அமைக்கப்பட்டன. லாகூர்க்கோட்டையில் 1440அடி நீளமுள்ள படக்கலரியில் யானைச்சண்டை, போலோ விளையாட்டு , வேட்டைக்காட்சிகள் வரையப்பட்டிருந்தன. அக்பர் காலத்து அநேககட்டிடங்கள் செஞ்சந்தனக் கற்களால் ஆக்கப்பட்டவை.


அக்பரின் மகனான ஜஹாங்கீர் காலத்தில் அரண்மனையில் பறவைகள், விலங்குகள் வரைவதில் சிறந்து விளங்கிய அபுல்ஹசன் என்போனுடன் மனித உருவங்கள் வரைவதில் வல்லவர்களான விஸ்ணுதாஸ், கோவர்த்தனன், மனோகர், தௌலத் போன்றோர் இணைந்து பறவைகள், விலங்குகள், மாந்தர் உருவங்கள், இயற்கைக்காட்சிகள், அரண்மனைத் தர்பார், போன்றவற்றை ஓவியமாக வரைந்தார்கள். சிக்கந்தரா கல்லறைமாடம், ஜலந்தர் தோரணவாசல் போன்றவை ஜஹாங்கீர் காலத்துக் கட்டிடங்கள் ஆகும்.

ஜஹாங்கீரின் மகனான ஷாஜஹான் காலத்தில் சித்திரத்தில் புதியமுறைகள் புகுத்தப்பட்டன. ஓவியத்தின் சுற்றயலில் அலங்காரம் இடப்பட்டது. நிறக்கற்களைப் பதித்து இலை,கொடி,பூ அலங்காரம் ஆக்கப்பட்டது. இவ்வலங்காரம் பீற்றாதுரா எனப்பட்டது. ஷாஜஹான் மொகலாய மன்னர்களின் உருவங்களை வரைவித்து நூலாக்கினான். இவனது அரசசபையில் பக்ருல்லா, கரன், மீர்ஹீம், முகம்மது, மனோகர், கல்யாணதாஸ், அனுப்சதர், முகம்மதுநாதிர் போன்ற ஓவியர்கள் இருந்தனர். ஆனாலும் ஷாஜஹான் காலத்தில் கட்டிடக்கலை வளர்ந்தளவிற்கு ஓவியக்கலை வளரவில்லை. டில்லிசெங்கோட்டை, தாஜ்மஹால், முத்துமசூதி போன்றவை ஷாஜஹான் காலத்துச் சிறந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்களாகும்.

ஷாஜஹானின் மகனான அவுரங்கசீப் தூயசமயவாதியாக விளங்கியதால் ஓவியம், இசை போன்றவற்றை வெறுத்தான். இதன் காரணமாக மங்கத்தொடங்கிய ஓவியக்கலை அரச ஆதரவற்றதாலும், இறுதியில் மொகலாயப்பேரரசு அழிந்ததாலும் அஸ்தமனம் அடைந்துவிட்டது. இவனால் தாஜ்மஹால் பாணியில் இராபியாதுராணி என்னும் கட்டிடமும், பத்மசாகி மசூதியும் அமைக்கப்பட்டன.



தாஜ்மஹால்




மும்தாஜ




ஷாஜஹான்



யானைச்சண்டை



வான்கோழி



செங்கோட்டை



இனாயத்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய கட்டிடக்கலை:-

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பரந்திருக்கும் இந்தியத்தேசமானது பல்லின மக்களைக் கொண்டதாகக் காணப்பட்டமையினால் இந்தியக்கலையானது பொதுத்தன்மையற்று ஒவ்வொரு இனக்குழுக்களின் அடையாளங்களைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.


இந்து கங்கைச் சமவெளியில் அமைந்த வடபகுதி , மத்திய பகுதியில் அமைந்த தக்கண மேட்டுநிலம், தென்பகுதியில் அமைந்த தென்னகத்தையும் பல்வேறு அரசவம்சங்கள் ஆட்சிசெய்தன. ஒவ்வொரு இனங்களும் தத்தமக்கே உரிய தனித்துவமான எச்சங்களை விட்டுச்சென்றுள்ளதை இன்று காணக்கூடியதாக உள்ளது.

வடபகுதியில் மொஹஞ்சதாரோ-ஹரப்பா நாகரீகத்தின்பின் நிலவிய வேதகாலத்தின் கலைவெளிப்பாடுகளின் எச்சங்கள் எதுவும் தற்போது காணக்கூடியதாக இல்லை. இவைபற்றிய விபரங்கள் அக்கால நூல்களிலேயே காணப்படுகின்றன. வேதகாலக்கட்டிடங்கள் இலகுவில் அழிந்து போகக்கூடிய பொருட்களினால் ஆக்கப்பட்டிருந்ததனாலேயே எச்சங்கள் எதுவும் மிஞ்சவில்லை எனலாம்.

சிந்துவெளிக் கலைகளிற்குப்பின் காலத்தால் முற்பட்ட எச்சங்கள் மௌரியர் காலத்தவையாகும்.

## மௌரியர் கட்டிடக்கலை:- ( கி.மு 325 - 185 )

இக்காலத்தில் பௌத்தத்தின் எழுச்சி கலைவளர்ச்சிக்கு ஒருகாரணியாக அமைந்தது எனலாம். இக்கால கலைவெளிப்பாடுகள் பௌத்தசமயத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். அசோகன் காலத்தில் இந்தியா முழுவதும் 84000 தாதுகோபங்கள் அமைக்கப்பட்டதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்காலப் புத்தர் கோவில்கள், மடங்கள் என்பன இந்து சில்பசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டும் வீடுகள் மானாசார சில்பசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டும் அமைக்கப்பட்டன. கட்டிடங்கள் யாவும் புவியீர்ப்பு மையத்தை அடிப்படையாகக்கொண்டு கற்களால் அமைக்கப்பட்டது இக்காலச் சிறப்பியல்பாகும். தனிக்கல் உருவங்கள், தனிக்கல்தூண்கள், கல்வெட்டுகள் போன்றவையும் இக்காலத்தில் அமைக்கப்பட்டன.




அசோகதூணின் போதிகைகள்

அசோகனால் அமைக்கப்பட்ட சாரணாத்தில் உள்ள தூணின் போதிகையானது சுதந்திர இந்தியாவின் அரசசின்னமாக உள்ளது. இதில் நான்கு பக்கமும் சிங்கங்களும், கீழே தர்மசக்கரமும் செதுக்கப்பட்டுள்ளது.

சிதைந்த நிலையில் உள்ள பாடலிபுர அரண்மனை , சாஞ்சிதூபி , பாரூத்தூபி. சீதாமாருதிகுகை, பராபர் குன்றுகளில் உள்ள ஏழுமண்டபங்கள் போன்றவை இக்காலத்தவை. அரண்மனை, நகரங்களைச்சுற்றி பாதுகாப்பரண் அமைக்கும் வழக்கம் இக்காலத்திலேயே தோன்றியது. பாடலிபுரம், உருவேலா, காசி, இராசகிருகம் போன்ற இடங்களில் பாதுகாப்பு அரண்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## ஆந்திரர் அல்லது சாதவாகனர் கட்டிடக்கலை:- ( கி.மு 235 - 220 )

இக்காலத்தில் பௌத்த , இந்து ஆகிய இருசமய சம்பந்தமான கட்டிடங்களும் கட்டப்பட்டன. குதிரைலாட வடிவிலான சாளரங்களும், குவிந்தகூரையும் இக்கலைக்குரிய சிறப்பியல்பாகும். இவர்களினால் சாஞ்சித்தூபி புதுப்பிக்கப்பட்டு தோரணவாசல்கள் அமைக்கப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமராவதி, நாகர்ஜுனகொண்டா, கண்டசாலா, சாக்கியப்பேட்டா போன்ற இடங்களிலுள்ள தூபிகளும், நாஷிக், பாஷ்சா, பெத்சா, கொண்டேனி, அஜந்தா ஆகிய இடங்களில் உள்ள குகைக்கோயில்களும் இக்காலத்தவை.

## சுங்கர்காலக் கட்டிடக்கலை. (கி. மு. 175 - 73)

இக்காலத்திலேயே இந்து சமயம் மீண்டும் சிறப்புறத் தொடங்கியது. பௌத்த கட்டிடங்கள் அழிக்கப்பட்டு இந்துக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. ஆனாலும் பௌத்த கலைகளும் வளர்ந்த வண்ணம் இருந்தன. பாட்ஷா (BHAJA) விகாரை, பெஸ்நகர் கருடவாகன கற்றூண், நாஷிக் குகை மண்டபம் போன்றவை இக்காலத்தைச் சேர்ந்தவை.

இவர்களின் பின் கன்வாயினர் கி.மு. 73 இல் இருந்து 78வரை ஆட்சி செய்தனர்.

## குஷாணர் (காந்தார) கட்டிடக்கலை. (கி.பி. 20 - 335)

குஷானரினால் தோற்றுவிக்கப்பட்ட கலைமரபு காந்தார கலை மரபு என அழைக்கப்படுகின்றது. பெஷாவரில் காணப்படும் தூபியானது இக்காலத்தைச் சேர்ந்தது.

## குப்தர் காலக்கட்டிடக் கலை. (கி.பி. 300 - 600)

இக்காலக் கட்டிடங்களில் கோயில்கள் பெரும்பாலும் வட்டவடிவமான கருவறையையும், வேலைப்பாடமைந்த தூண்களையும் செங்கற்களால் ஆக்கப்பட்ட மேற்கூரைத்தளங்களையும் கொண்டிருந்தன. தூண்களில் நிறைகுட உருவமும், கதவுகளில் கணநாதர், மிதுனம் (காதலர் சோடி) வித்தியாதரர், துவாரபாலகர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

தைஹுவா கோயில், ஏரான்கோயில், சாகர் கோயில், பூமறா கோயில், தசாவதாரக் கோயில், பித்ராகன் கோயில், உதயகிரிக் கோயில்கள் போன்றவை இக்காலக் கட்டிடங்களாகும்.

## ஒட்டரர் கட்டடக்கலை. (கி.பி. 800 - 1250)



முன்பு கலிங்கம் எனப்பட்ட பிரதேசத்தில் தோன்றிய கலைமரபு ஒட்டரக் கலை மரபு எனப்படும். நாகர வகையில் அமைந்த கோயில்களின் தோற்றுவாய் இக்கலை மரபாகும். இக்காலக் கோயில்கள் அடிமேடையைக் கொண்டிருந்தன. பரமேஸ்வரன் கோயில் வைதைகோயில், பூரிஜகன்நாத் கோயில், கொணாறக் சூரியன் கோயில், புவனேஸ்வரம் போன்றவை இக்காலச் சிறந்த கட்டிடங்களாகும்.

## ராஸ்திரகூடரின் கட்டிடங்கள். (கி.பி. 8ம் நூற்றாண்டு - 10ம் நூற்றாண்டு)

எல்லோராவில் காணப்படும் கைலாசக் கோயிலும் மற்றும் குகைகளும் இக்காலத்தில் செதுக்கப்பட்டவையாகும்.

## கூர்ஜர கட்டிடக்கலை. (கி.பி. 725 - 1090)

இராசபுத்தானத்தில், குவாலியரில் இவர்களினால் பல கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மரபில் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் சிறியனவாகும் நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்டனவாகக் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தாலர்களின் கட்டிடக்கலை (கி.பி. 950 - 1050)




இவர்களால் கஜுராவோ என்னும் இடத்தில் எட்டு சதுரமைல் பரப்பில் 85 கோயில்கள் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் தற்போது 20 கோயில்களே காணமுடிகிறது. பார்சுவநாதர் என்னும் சமணக்கோயில் இவர்களால் அமைக்கப்பட்டதாகும். கஜுராவோவில் உள்ள கந்தேரிய மகாதேவன் கோயிலில் ஆண், பெண்பாலியல் செயற்பாடுகளை சித்தரிக்கும் சிற்பவணிகள் காணப்படுகின்றன.

## பல்லவரின் கட்டிடக்கலை. (கி.பி. 600 - 900)

இவர்களின் கட்டிடங்களை, குகைக்கோயில்கள், ஒற்றைக் கல்தேர்கள், கற்கட்டிடங்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இக்காலக் கட்டிடங்களை அவற்றின் தன்மைக்கேற்ப மகேந்திரவர்மன்பாணி, மாமல்லன்பாணி, இராசசிம்மன்பாணி எனவும் பிரிக்கலாம். பல்லவர்கால ஒற்றைக்கல் தேர்கள் மாமல்லன் காலத்திற்குரியதாகும். தமிழ் நாட்டில் உள்ள காலத்தால் முற்பட்ட கட்டிடங்களாக பல்லவரின் கட்டிடங்களே காணப்படுகின்றது. இலக்சிதன் குகைக்கோயில், பஞ்சபாண்டவர் கோயில்கள், சித்தன்னவாசல் சமணக்கோயில்கள், மாமல்லபுரம் சிவன்கோயில்கள், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், ஒன்பது ஒற்றைக்கல் தேர்கள், பனைமலை தாளகிரீசுவரர் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் போன்றவை இக்காலச் சிறந்த கட்டிடங்களாகும். பல்லவர் காலக் குகைக் கோயில்கள், ஒற்றைக்கல் தேர்கள் ,கற்கோயில் ஆகிய மூன்றுமாக அறுபது வரை அமைக்கப்பட்டுள்ளன. பல்லவர் கால சிற்பங்களை தெய்வ உருவங்கள், துணைஉருவங்கள், மனித உருவங்கள், பிறஉருவங்கள் என பாகுபடுத்தலாம். இவை முழு உருவங்களாகவோ அல்லது புடைப்புச் சிற்பங்களாகவோ காணப்படுகிறது.

மாமல்லபுரத்தில் 7 சதுர அடிப்பரப்பில் காணப்படும் விண்ணில் இருந்து இழிதரும் கங்கை, அருச்சுனன் தவம், யானைச்சிற்பங்கள், ஒன்பது ஒற்றைக்கல் தேர்களில் காணப்படும் சிற்பங்கள், கடற்கரைக் கோயிலில் காணப்படும் சிங்கத்தின் சிற்பம், வராக மண்டபத்தில் காணப்படும் திருமாலின் வராக அவதாரம், கஜலட்சுமி, கொற்றவை, திரிவிக்கிரமன் அணி, ஆதிவராகன் கோயிலில் காணப்படும், நரசிம்மவர்மனும் அரசியும், மகேந்திரவர்மனும் அரசியும், ஹெங்காதரன், ஹரிகரன், துர்க்கை அணி போன்ற சிற்பங்களும், சீயமங்கல சிற்பஅணி, அனந்தசயனன், அரங்கநாதர், வாயிற் காப்போர், மகிசாசுரவர்த்தனி போன்ற சிற்பங்களும் பல்லவர்கால சிறந்த சிற்பங்களாகும். பல்லவர்கால ஓவியங்களை சித்தன்னவாயில், கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் போன்ற இடங்களில் காணலாம்.



## சோழர்காலக் கட்டிடக் கலை. (கி.பி. 850 - 1150)

இக்காலம் தமிழகத்தில் கோயிற் சகாப்தங்கள் எனப்படுகின்றது. சோழரின் கட்டிடங்கள் பல்லவரின் கட்டிடங்களை விட அளவிற் பெரியதாகும். தஞ்சைப் பெரியகோயிலானது இந்தியாவிலே மிகப் பெரிய கோயிலாகும். இது சோழரின் கட்டிடக் கலையின் உச்சமாக மதிக்கப்படுகிறது. இதன் கருவறைவிமானம் 216 அடி உயரமானது. விஜயாலய சோழேச்சரம், கங்கை கொண்ட சோழபுரம், பாலசுப்பிரமணியர் கோயில், அரங்கநாதர் கோயில், மூவர் கோயில் போன்றவையும் சோழர் கட்டிடக்கலையில் அமைந்தவையாகும்.

## பாண்டியரின் கட்டிடக்கலை. (கி.பி. 1100 - 1350)

பாண்டியரின் கட்டிடங்கள் சோழரின் கட்டிடங்களை விட சிறியனவாகவும் கலையம்சம் மிக்கதாகவும் காணப்படுகிறது. கோயிலின் ஒவ்வொரு உறுப்பும் அலங்கார செதுக்கலினால் மக்களின் பார்வையை ஈர்ப்பனவாக அமைந்துள்ளன. சிதம்பரம், திருவண்ணாமலை கோயில்கள் இம்மரபில் கட்டப்பட்டவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயக்கர் கட்டிடக்கலை. (கி.பி. 1350 - 1565)


இம்மரபில் அமைந்த கட்டிடங்கள் துங்கபத்திரை நதியில் இருந்து தென்னாடு முழுவதும் அமைந்துள்ளன. அழிந்த நிலையில் காணப்படும் விஜயநகரக் கோட்டை, இன்றும் காணப்படும் விட்டலர் கோயில், போன்றவை,இம்மரபில் அமைந்தவையாகும். விஜயநகரைப் பேரரசு வீழ்ச்சியடைந்தபின் மதுரையை மையமாகக கொண்டு மதுரை நாயக்கர்கள் ஆட்சி செலுத்தினர். இவர்களின் கட்டிடங்கள் பாண்டிய மரபைப் பின்பற்றியே அமைந்தன. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ஸ்ரீரங்கம், இராஜேஸ்வரம், தில்லை நடராஜர் கோயில் போன்றவை இவர்களால் அமைக்கப்பட்டவையாகும்.

## இந்திய - இஸ்லாமியர் கட்டிடங்கள்.


இந்தியாவில் இஸ்லாமியர் அடியெடுத்து வைத்த கி.பி. 8ம் நூற்றாண்டில் இருந்து அவர்களின் பேரரசுகள் மறைந்த 18ம் நூற்றாண்டு வரையில் கட்டப்பட்ட கட்டிடங்கள் இஸ்லாமியர் கட்டிடங்கள் எனப்படும். இவற்றை மூன்றாகப் பிரிக்கலாம்.

1) டில்லியில் இருந்து ஆண்ட பேரரசர்களால் கட்டப்பட்ட பேரரசுப்பாணிக்கட்டிடங்கள் டில்லிப்பள்ளிவாசல், ஆஷ்மீர் பள்ளிவாசல், குதுப்மினார் போன்றவை இதற்கு உதாரணம்.
2) டில்லி தவிர்ந்த ஏனைய இடங்களில் ஆண்ட அரசர்களால் கட்டப்பட்டவை மண்டிலப்பாணி கட்டிடங்கள். இக்கட்டிடங்கள் பஞ்சாப், வங்காளம் குர்ஜரம், சாம்பூர், மாளவம், தக்கணம், பீஜாப்பூர், காஷ்மீர் போன்ற இடங்களில் காணலாம்.
3) மொஹலாயர் கட்டிடங்கள்


இவைபற்றி மொஹலாயக்கலை என்னும் அத்தியாயத்தில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.



டில்லி பேரரசுப்பாணி



மண்டிலப்பாணி



மொகலாயப்பாணி

## குசான அல்லது காந்தாரக் கலை :- (கி.பி 1ம் நூற்றாண்டு - கி.பி. 6ம் நூற்றாண்டு)

இக்காலத்தில் காந்தாரத் தேசத்தை அடிப்படையாகக் கொண்டு காந்தாரக் கலையும் மதுராபிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மதுராகலையும் வளர்ச்சியடைந்தன. காந்தாரக் கலையானது கிரேக்க கலப்புடையதாகும். முதன் முதலில் புத்தர் உருவம் செதுக்கப்பட்டது. காந்தாரக் கலைமரபிலே ஆகும். புத்தர் சிலையின் மேலாடைகளின் மடிப்புகள் கிரேக்க, உரோம மதகுருவின் ஆடை மடிப்புக்களை ஒத்ததாகவும் புத்தர் சிலைகளின் தலையானது அப்பலோவின் தலையை ஒத்ததாகவும் காணப்படுகிறது.





இப்புத்தர் சிலையின் சிறப்பம்சங்களாவன

1) தெளிவான முகங்கள்.
2) நீண்ட காதுகள்
3) குட்டையான தன்மை
4) பாரிய மயிர் முடிச்சு
5) தடித்த ஆடைமடிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுராசிலைகள் :- (கி.பி. 1ம் நூற்றாண்டு - கி.பி. 4ம் நூற்றாண்டு)



இப்பாரம்பரியத்தில் செய்யப்பட்ட சிலைகள் செம்மணற் கல்லில் செய்யப்பட்டவையாகும். இம்மரபில் இந்து, வைஷ்ண சிற்பங்களும் உள்ளன. பண்டைய இந்தியாவின் உள்நாட்டுப் பண்புகள் இச்சிலைகளில் காணப்படுகின்றன.

இச்சிலைகளின் சிறப்பியல்புகள் :-

1) சாந்தமான முகம்.
2) விரிந்த கண்கள்.
3) உடல் உறுப்புகள் ஆடைகளினூடாக வெளித்தெரிதல்.
4) மிகச்சிறிய அலையுடனான மெல்லிய மடிப்புடைய ஆடை.
5) அழகிய செதுக்கல்களுள்ள ஒளிவட்டம்
6) ஓரளவு உயர்ந்த மயிர்முடிச்சு

## குப்தர் காலச் சிற்பங்கள்.

குப்தர் காலச்சிற்பங்களில் பெரும்பாலானவை இந்து சமயத்தைச் சேர்ந்தவையாகும். குப்தர் காலச் சிற்பங்களில் அநேகமானவை கி.பி. 5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. அழகிய தோற்றம், உடல் தெரியும் வகையில் காட்டப்பட்டிருக்கும் ஆடை, மிருதுவான தன்மை, விரிந்து நோக்கிய கண்கள் போன்றவை இக்கலை மரபின் சிறப்புத்தன்மையாகும்.

திருமாலின் பத்து அவதாரங்களைச் சித்தரிக்கும் சிற்பங்கள், சிவனின் சிற்பங்கள், கங்கை யமுனை ஆறுகளின் உருவகச் சிற்பங்கள், காசியிலுள்ள கார்த்திகேயன் உருவம், காகோவிலுள்ள ஏகமுகலிங்கம், பார்வதி, காளி, கொற்றவை, நந்தி, போன்றவை குப்தர்காலச் சிறந்த இந்துசமயச் சிற்பங்களாகும்.

### 1) சாரநாத் புத்தர் சிலை.

இந்தியாவில் சாரநாத் என்னுமிடத்தில் உள்ளது. இச்சிலையானது புத்தர் தர்மஉபதேசம் செய்யும் நிலையில் வெண்சந்தனக் கல்லில் அமைக்கப்பட்ட குப்தர் காலச் சிறந்த கலை ஆக்கமாகும். 5 அடி 3 அங்குல உயரமுடையது. கைகள் தர்மசக்கர முத்திரையைக் குறிக்கின்றன. கால்கள் பத்மாசன முறையில் அமைந்துள்ளன. பாதி மூடிய கண்ணினாலும், மெல்லிய புன்னகையாலும் தர்மப் போதனை பிரதிபலிக்கக் கூடியதாக செதுக்கப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் மிகவும் சிறந்த செதுக்கல்களுடன் கூடிய ஒளிவட்டத்தின் இருபுறமும் இரு தேவதைகள் உள்ளன. கீட்புறம் சிஷ்யர்கள் காணப்படுகின்றனர். புத்தரை முதன்மைப் படுத்துவதற்காக ஒளிவட்டம், தேவதைகள், சிஷ்யர்கள் உருவங்கள் புத்தரின் உருவத்தை விடச் சிறியதாக காட்டப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) சுல்தான்கஞ்சு புத்தர் சிலை



பர்மிங்காம் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள இச்சிலையானது இந்தியாவின் கங்கைச் சமவெளியில் சுல்தான் கஞ்சு எனப்படுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். ஏழரை அடி உயரமுடைய இச்சிலை வெண்கலத்தில் செய்யப்பட்டது.

மங்குவார் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட அமர்ந்த நிலையிலுள்ள புத்தர்சிலையானது குப்தர் காலத்தைச் சேர்ந்ததாகும். இச்சிலையானது ஏனைய புத்தர் சிலைகளை விட வேறுபட்டதாகும். இதன் தலையலங்காரமானது வேறெந்தப் புத்தர் சிலைகளிலும் காணப்படவில்லை. அங்கியானது ஏனைய புத்தர் சிலைகளில் உடலெங்கும் போர்த்துள்ளது போல் இல்லாமல் இடுப்பில் கட்டும் வேட்டி போல் காட்டப்பட்டுள்ளது.


## சாஞ்சி தூபி:-


இந்தியாவில் மத்திய பிரதேசத்திலுள்ள சாஞ்சியானது அசோகன் காலத்திலிருந்து கி.பி. 11ம் நூற்றாண்டு வரை பௌத்த சமய மத்தியஸ்தானமாக விளங்கியது. இங்குள்ள தூபியானது அசோகன் காலத்தில் அமைக்கப்பட்டதாகும். பின்பு ஆந்திரர்களினால் பெருப்பிக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் இன்று காணப்படும் நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இத்தூபியானது 54அடி உயரமும் 120அடி விட்டமும் கொண்டதாகும். நான்கு பக்கங்களிலும் வாசல்களும், தோரணங்களும் உள்ளன. தூபியைச் சுற்றி கல்வேலியானது உள்ளது.


தூபியில் ஹதரஸ் கொட்டுவவில் உள்ள கம்பம் குடையினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கல்வேலியில் செதுக்கல் வேலைப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை. நான்கு தோரணங்களும் பௌத்த சமய சம்பந்தமான சிறந்த செதுக்கல் வேலைப்பாட்டைக் கொண்டுள்ளன.


சாஞ்சிதூபி





சாஞ்சி தோரண செதுக்கல்கள்







சாஞ்சி தோறணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு வாசல் தோரணத்தில் வெஸ்ஸந்தரா ஜாதகக் கதையைச் சித்திரிக்கும் செதுக்கல்களும் மற்றும் ஷட்தந்த, மகாகபி ஜாதகக் கதைகளும் செதுக்கப்பட்டுள்ளன.

புத்தரது வாழ்க்கை நிகழ்வுகளில் மாயாதேவியின் கனவு, உலக வாழ்விலிருந்து விடுபடல் புத்தராகுதல் போன்றவை செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் புத்தரின் உருவத்திற்குப் பதிலாக குறியீடுகளே காணப்படுகின்றன.

சாஞ்சியின் தோரண வாசல்களில்,

- ☐ மலல என்னும் அரசனது புத்திரர்களுக்கும், மற்றொரு அரசரின் புத்திரர்களுக்கும் இடையே ஏற்பட்ட புனித சின்னங்கள் பற்றிய கலகம்,
- ☐ யுத்த சேனைகள் முற்றுகையிடப்பட்ட விதமும், போர்புரியும் விதமும்,
- ☐ மலல அரசனது புத்திரர்கள் புனித சின்னங்களை எடுத்துச் செல்லல்,
- ☐ விலங்குருவங்கள், அரக்கர், அரக்கியர் தேவதைகள், இயக்கிகள்.
- ☐ கிழக்கு வாசற் தோரணத்தில் அசோக மன்னன் போதி மரத்தை வணங்குதல்
- ☐ தெற்கு வாசற் தோரணத்தில் அசோக மன்னன் தூபியை வழிபடுதல்.

என்பனவும் செதுக்கல்களாகக் காணப்படுகின்றன.

## பாரூத் செதுக்கல்கள்

பாரூத் தூபியானது அலகபாத்திற்கு அண்மையில் உள்ளது. அசோகன் காலத்தில் தொடங்கப்பட்ட இத்தூபியின் தோரணங்கள் சுங்கர் காலத்திலேயே முற்றுப்பெற்றுள்ளது. தூபியைச் சுற்றிவர கல்வேலியும், தோரணங்களும் உள்ளன. இவற்றில் புத்தரின் வரலாற்றுக் கதைகள் , அஜாதசத்துரு யானையிலும், பிரசேனசித்து தேரிலும் சென்று புத்தரை வணங்குதலும், மற்றும் சுதர்சன இயக்கி, இயக்கர்கள், தேவதைகள், நாக அரசர்கள், குபேரன், போன்ற சிற்பவணிகள் செதுக்கப் பட்டுள்ளன. இங்கு எந்த இடத்திலுத் புத்தரின் உருவம் செதுக்கப்படவில்லை. குறியீடுகளே காணப்படுகின்றன. தோரணத்தூண்கள் 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.




சிறிமாதேவி



இயக்கி

யானையைக்கொண்டு ஒருமனிதனின் பல்லைக் குறடினால் பிடுங்குதல் , குரங்ககள் யானையைக் கயிற்றினால் கட்டி இழுத்துச் செல்லுதல் போன்ற வேடிக்கையான செதுக்கல்களையும் இங்கு காணலாம்.



கல்வேலியிலுள்ள செதுக்கல்கள்

## அமராவதி, நாகர்ஜுனகொண்டா தூபிகள்.

இவை ஆந்திராவின் கிருஷ்ணா ஆற்றங்கரையில் காணப்படுகின்றன. அமராவதி தூபி கி.மு. 200 இல் அமைக்கப்பட்டதாகும். 162அடி விட்டம் உடையது. தோரணவாயில்களும் காணப்படுகின்றன.

நாகர்ஜுனகொண்டா தூபி 60 அடி விட்டமுடையது. இத்தூபியில் ஸ்வெஸ்திகா குறிகள் செதுக்கப்பட்டுள்ளன. ஆந்திர (அமராவதி) சிற்பமுறையில் இவை அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் பிரசித்திபெற்ற ஓவியர்கள்:-


### 1) இரவீந்திரநாத் தாகூர் :- (1861 - 1941)





மூவாயிரத்திற்கும் அதிகமான ஓவியங்கள், கோட்டுச்சித்திரங்களை வரைந்த இவரின் அநேகமான ஆக்கங்கள் பேனா, நிறமை தாமே தயாரித்தசாறு போன்றவற்றால் வரையப்பட்டவையாகும். சாந்தி நிகேதனில் கலைக்கல்லூரியை ஆரம்பித்த இவர் ஓவியராக மட்டுமன்றி கவிஞராகவும், புகழ்பெற்றார். நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலியையும் இயற்றியவர் இவராவர். மானகுட்டியின் முறையீடு, கவலை போன்றன இவரின் சிறந்த சித்திரங்களாகும்.

### 2) அவனீந்திரநாத் தாகூர் :- (1871 - 1951)



தெளிவற்ற கோடுகளையும் வண்ணக்குழப்பங்களையும் கொண்ட இந்தியபாணி ஓவியங்களை இவர் வரைந்தார்.

### 3) K.C.S பணிக்கர் :- (1912 - 1960)

சென்னை ஓவியக்கல்லூரியின் முதல்வராக இருந்தார். இந்தியாவின் பல இடங்களிலும், லண்டன், பாரீசிலும் கண்காட்சிகளை நடாத்தினார். தாய் சேய், நிர்வாணப் பெண்கள், உப்பங்கழிகளில் படகுக் காட்சிகள், காளிங்க நர்த்தனம், சிவன் தலையில் கங்கை, கல்நாகர்கள் போன்றவை இவரின் சிறந்த ஓவியங்களாகும்.

### 4) நந்தலால் போஸ் :-

ஆனந்த குமாரசாமியின் புத்தரும் அவர் போதனைகளும் என்னும் நூலுக்குப் படம் வரைந்து புகழ்பெற்றார். இந்தியாவின் பண்டைய சித்திரக்கலையை தழுவியதாகவே இவரின் ஆக்கங்கள் அமைந்தன. இந்தியாவின் பண்டைய கோத்திரக் கற்பனைக் கதைகளை ஓவியமாக்கினார். புதிய கருத்துக்களை வெளிப்படுத்திய இவரின் ஓவியங்களில் கோடுகளே முக்கிய இடத்தைக் கொண்டிருந்தன.

### 5) அமிதா ஷேகில் :- (1913 - 1941)



இந்திய ஓவியங்களில் புதியபாணியைப் புகுத்தி சிறந்த ஓவியங்களை வரைந்தார். பாரிசில் 5 வருடகாலம் ஓவியம் பயின்ற இவரின் படைப்புகளில் கிராமக் காட்சிகளே பெருமளவில் காணப்படுகின்றன. மனித உருவங்களை மெலிந்த தோற்றம், சோகமான முகம், கறுத்த மேனி போன்ற இயல்புகளுடன் வரைந்தார். சிலுவையில் யேசு, இமயத்தில் ஈசன், பிருந்தாவனத்தில் கிருஷ்ணன், பிரமச்சாரிகள், மணமகள் குளித்தல், சந்தைக்குச் செல்லும் தென்னிந்திய கிராமத்தார் போன்றவை இவரின் சிறந்த படைப்புகளாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) M.F. ஹுசைன் :-

மகாபாரதக் காட்சிகளை ஓவியமாகத் தீட்டி அரபு நாடுகளில் கண்காட்சியில் வைத்த இவர் முற்போக்கு ஓவிய அணி என்னும் அமைப்பைத் தோற்றுவித்து வழிநடத்தினார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் டெல்லிப் பிரிவுக் கட்டிடத்திலும், அலிகார் பல்கலைக்கழகச் சுவரிலும் ஓவியங்களை வரைந்து புகழ் பெற்றார்.

7) ராஜா ரவிமர்மா :- (1848 - 1906)




இவர் 1848ல் கேரளத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிறந்தார். இவரது ஓவியங்கள் மேலைத்தேய எண்ணெய்வர்ண முறையைப் பின்பற்றியதாக அமைந்திருந்தது. தெய்வ உருவங்கள், இதிகாச, புராணகதைகள், போன்றவற்றைப் பெருமளவில் வரைந்தார், வறுமை, குறத்தி, பரமசிவன், பார்வதி, கணபதி, பகீரதன் கங்கை, வெண்ணெய்த்தாழியுருட்டும் கண்ணன், தமயந்தி, கம்சவதம் போன்றவை இவரின் சிறந்த ஓவியங்களுட் சிலவாகும்.

8) றோய் செளத்திரி :-

சென்னை ஓவியக்கல்லூரி முதல்வராக இருந்தவர். சென்னை மரீனா கடற்கரையிலுள்ள உழைப்பாளர் சிலை இவரது ஆக்கமாகும்.

9) ஜாமினி றோய்

கல்கத்தா அரச ஓவியக்கல்லூரியில் ஓவியம் பயின்றவர். இவரின் ஆரம்பகால தரைக்காட்சிகள், உருவப்படங்கள் ஐரோப்பியத்தன்மை கொண்டவை. பிந்திய ஓவியங்கள் இந்தியத்தன்மையும், ராஜ்புட் ஓவியச்சாயலும் கோடுகளுக்கு முக்கியத்துவமும் நவீனத்தன்மையும் கொண்டதாகவுமுள்ளன.





மற்றும், ககனீந்திரநாத்தாகூர், சதீஸ் குஜரால், பேந்த்ரே, ராம்கோபால், வாசுதேவ், கிருஷ்ணமூர்த்தி, அல்போன்சா, ஆதிமூலம், ஆர்.பி. பாஸ்கரன் போன்றோர் இந்தியாவின் சிறந்த ஓவியருட் சிலராவார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீனக்கலை:-


சீனக்கலையானது மிகவும் பழைமையானதுடன் உலகப்பிரசித்தி பெற்றதுமாகும். இதில் பிற கலைகளின் தாக்கத்தால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பௌத்தத்தின் வருகையின் பின் சமயம் சார்ந்து கலையானது பெருவளர்ச்சியடைந்தது. புத்தரின் வாழ்க்கைகள் ஓவியங்களாக்கப்பட்டன.

வூதா வொத்ஷே, கும் தாங்வெய், கும் ஹாதே ஆகியோர் சீன ஓவியங்களின் முன்னோடிகளாவர். இவர்களில் வூதா வொத்ஷே என்பவர் 300றகு மேற்பட்ட ஓவியங்களை வரைந்திருந்தாலும் இன்று பெருமளவு அழிந்துபோய் விட்டது.

ஆறு, குளம், கடல், மலை, பள்ளத்தாக்குகள், பூக்கள், பூங்கொத்துகள், மூங்கிற்காடுகள் போன்றன மிகஅழகாக வரையப்பட்டன.

தூரதரிசனம், ஒளிநிழல் போன்றவை காட்டப்பட்டன. மெல்லிய, தடித்த, அலைகோடுகள் பாவிக்கப்பட்டன. கலை சுதந்திரமாகவும், ஆத்மீகமானதுமாக வெளிப்பட்டது. குறைந்த நிறங்கள், துல்லிய நிறப்பிரயோகம் மூலம் புதுமையான தன்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. லம்பாகார முறையில் பென்சில் பிடித்து வரைந்தனர். கடதாசிகள், துணிகளில் வரையப்பட்ட பல சித்திரங்கள் பிரசித்தி பெற்றுள்ளன.

மரத்தினாலான குதிரைத்தேர் சிறந்த படைப்பாகும். கற்கள், எலும்புகள், சிப்பி ஓடுகள் மிருகங்களின் கொம்புகள் , உருண்டை மணிகள் போன்றவற்றில் மிகநேர்த்தியான செதுக்கல்களைச் செய்துள்ளார்கள். கல்லறைகளில் வேதாளம், புலி, பறவை உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சீனப்பெருஞ்சுவரானது (காலம் கி.மு.3ம் நூற்றாண்டு) சீனக்கட்டடக்கலையின் மிகச்சிறந்த வெளிப்பாடாகும்.



ஓவியம்



புத்தர்சிலை




புத்தரின்தலை



சேவல் (உலோகம்)



சிற்பம்




மட்பாண்டம்

## ஜப்பானியக்கலை:-

ஜப்பானியக் கலாச்சாரத்தில் இயற்கையழகு இரசனை பெருமளவில் காணப்படுவதால் கலையானது மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்து வெளிப்பட்டுள்ளது. மக்களே கலையார்வத்தால் கலையை வளர்த்து வந்துள்ளனர்.

ஆரம்பத்தில் சீனக்கலையின் ஒருபகுதியாக இருந்த ஜப்பானியக்கலையானது நாளடைவில் அதிலிருந்து விடுபட்டு தனக்கென தனியான அடையாளத்துடன் வளர்ச்சியடையத் தொடங்கியது.

கி.பி 552இல் கொரியாவிலிருந்து பௌத்தம் வந்த பின்னர் கலையில் புதிய வளர்ச்சி ஏற்பட்டது. சமயத்துடன் சேர்ந்த கலைவெளிப்பாடு தோன்றி வளர்ந்தது. சமயச் சிற்பங்கள், கட்டிடங்கள், ஓவியங்கள் தோன்றின.



பூஜிகந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானிய கலைவளர்ச்சிக் காலத்தை பத்தாகப் பிரித்துள்ளனர். அவையாவன- பைதிகா சிக்க, அசுக்கா, தாரா, ஹெய்யாத், புஜிவரா, கமாக்குரா, முறோமவ், மொமொயாமா, தொருகாவா, மெஜ்ஜி ஆகும்.

ஹெய்யாத் காலத்தில் அமிதாபுத்தர், தேவர் , கன்னியர் உருவங்கள் பெருமளவில் வரையப்பட்டன. கமக்குரா காலத்தில் சீனத்தன்மை முழுவதும் அற்று சுதேசத்தன்மையுடன் கலை வெளிப்பட்டது. சமயம் தவிர்ந்த சித்திரங்களும் வரையப்பட்டன. சுருட்டக்கூடிய ஸ்குரோல் சித்திரங்கள் தோன்றின. நிலைக்குத்தான ரேகைகள் கொண்டவை மக்கிமோனோ எனவும், கிடையான ரேகைகள் கொண்டவை ஹக்கிமோனோ எனவும் அழைக்கப்பட்டன. முறோமவ் காலத்தில் எளிமையான சமயச்சித்திரங்களும், தரைக்காட்சிகளும்,இளம்பெண்களைச்சித்தரிக்கும் ஓவியங்களும், பறவை மிருக உருவங்கள் கொண்ட சித்திரங்களும் தோற்றமெடுத்தன. கட்டடிங்கள், மட்பாண்டங்கள், தளபாடங்கள் போன்றனவும் சுதேச கலையுடன் மிளிர்ந்தன. பிரகாசமான நிறங்களும் கறுத்த வெளிக்கோடுகளும் , மிகமெல்லிய ரேகைகளால் ஆன சித்திரங்களும் இக்கால விஷேட அம்சமாகும்.

17ம் நூற்றாண்டில் மரச்செதுக்கல்கள் பிரசித்தி பெற்றன. மொரனோவு என்பவரால் தொடங்கப்பட்ட இம்முறை ஹொகுசாய் என்பவரால் வளர்க்கப்பட்டது. ஹொகுசாயினால் ஆக்கப்பட்ட பூஜிகந்த ( பூஜிமலை, Fuji Mountain ) என்னும் வர்ணஆக்கம் முப்பரிமாணமுடையது. சிறந்த ஆக்கமான இதில் அலையானது லய அசைவுடன் உயிர்த்துடிப்பானதாகக் காட்டப்பட்டுள்ளது.

## எகிப்தியக் கலை:—

நைல்நதிக்கரையில் கி.மு. 4500 - 1090 வரையான காலத்தில் சிறந்த நாகரீகத்துடன் வாழ்ந்த மக்களால் தோற்றுவிக்கப்பட்ட கலையானது எகிப்தியக்கலை என அழைக்கப்படுகிறது.

இந்நாகரிககாலத்தை பழைய, மத்திய, புதிய இராசதானிக்காலம் என மூன்றாக வகைப்படுத்தலாம். பழைய இராசதானிக்காலமானது பிரமிட் எனப்படும் கல்லறைகள் அமைத்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலமாகும். மத்திய, புதிய இராசதானிக்காலமானது வழிபாட்டுத் தலங்கள் அமைத்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலமாகும்.

எகிப்தியக் கலையானது பல நூற்றாண்டுகளாக இறுக்கமான சட்ட திட்டங்களுக்கு ஊடாக வளர்ந்ததால் ஒரே மாதிரியான தன்மையைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. இக்கலை மரபானது கண்ணோட்ட நியமங்களுக்கு அப்பாற்பட்டதாகவும், வரையறுக்கப்பட்ட நிறப்பிரயோகத்தையும், கறுப்பு நிறவெளிரேகையைக் கொண்ட ஓவியங்களையும் கொண்டதாகக் காணப்படுகிறது.

ஓவியங்கள் பேரோ எனப்படும் அரசர்களின் வாழ்க்கை நிகழ்வைச் சித்திரிக்கும் தொடர் சித்திரங்களாகவும் ஓவியங்களுக்கிடையில் கைரோகிளிப்ஸ் என்னும் சித்திரவடிவ எழுத்துக்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. மனித உருவங்களின் தலையும் காலும் பக்கப்பாடாக வரையப்பட்டுள்ளது. மரம், செடி, கொடி, பறவைகள் போன்றனவும் ஓவியங்களில் உள்ளன. பிரமிட்டுக்களின் உட்புறம், பாறைச் சுவர்கள் போன்றவற்றில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. லப்பிஸ்லசுலி என்னும் கல்லிலிருந்து நீலநிறத்தைத் தயாரித்துள்ளனர்.

கட்டிடங்களை எடுத்துக் கொண்டால் பேரோக்கள் (Pharaoh) எனப்படும் அரசர்களின் இறந்த உடலான மம்மியை வைப்பதற்கு அமைக்கப்பட்ட கல்லறைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) மஸ்டபா
2) படிப்பிரமிட்டுகள்.
3) பிரமிட்டுகள்.

தேபஸ (Thebes) நகரத்திற்கு அருகில் கி.மு. 1350 இல் அமைக்கப்பட்ட துடன் காமென் அரசரின் மஸ்டபாபும் சக்கரா (Saqqara) என்னுமிடத்தில் கி.மு. 250 இல் அமைக்கப்பட்ட ஓர் அரசரின் மஸ்டபாவும் இன்றும் உள்ளன.

கி.மு. 2780 இல் சோசர் (Djozer) என்னும் மன்னனால் முதலாவது பிரமிட் சக்கரா என்னுமிடத்தில் அமைக்கப்பட்டது. இது 200அடி உயரமுடைய படிப்பிரமிட்டாகும். சுண்ணாம்புக்கல்லால் ஆக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெம்பிஸ், சக்கரா, கிசா (Giza) ஆகிய இடங்களில் பிரமிட்டுகள் உள்ளன. மிகப்பெரிய பிரமிட் 400 அடி உயரமுடையது.

வழிபாட்டுத்தலங்களாக அமைக்கப்பட்ட புராதன கட்டிடங்கள் கீழேதரப்பட்டுள்ளன. அநேகமான கட்டிடங்களின் தூண்கள் பப்பிரஸ் (Papyrus) பூவின் வடிவத்தில் அமைந்தவையாகும்.

1) தேபஸ் நகரிலுள்ள லக்சோர் ஆலயம். (Temple of Luxor) 50 அடி உயரமுடையது. கி.மு. 1411 இல் அமினோபிஸ் III என்னும் அரசன் காலத்தில் அமைக்கப்பட்டது.
2) அபுசிம்பெல் எனுமிடத்திலுள்ள சூரிய தெய்வத்தின் ஆலயம். (Temple of Amun)
3) அபிதாஸ் (Abydas) என்னும் இடத்தில் உள்ள சேதியாலயம் (Temple of Seti)
   இவையிரண்டும் கி.மு. 1300 இல் ராம்செஸII என்னும் அரசனால் அமைக்கப்பட்டவையாகும்.
4) தேபஸ்நகருக்கு அருகிலுள்ள சூரியன் ஆலயம்
   ராம்செஸ III அரசனால் கி.மு. 1200 இல் அமைக்கப்பட்டது.
5) பிலே ஆலயம் (Temple of Philae) தொலமி பிலாடிபஸ் (Ptolemy Philadepus) என்னும் அரசனால் கி.மு. 300 இல் தொடங்கப்பட்டு இயூகெற்றெஸ I (Euergetes I) என்னும் அரசன் காலத்தில் முடிக்கப்பட்டது.
6) எட்பு (Edfu) என்னுமிடத்தில் காணப்படும் ஹொராஸ் ஆலயம். (Temple of Horus) கி.மு. 237 இல் தொலமி இயூகெற்றெஸ் அரசனால் அமைக்கப்பட்டது.
7) டென்டிரா (Dendera) என்னுமிடத்தில் அமைந்துள்ள ஹதர் ஆலயம (Temple of Hathor) கி.மு. 1ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.

எகிப்தின் சிற்பங்கள் மரம், கல், மண், தந்தம், கண்ணாடி, உலோகங்கள் போன்றவற்றால் ஆக்கப்பட்டுள்ளன.

தங்கத்தால் ஆக்கப்பட்ட எகிப்தின் இலட்சினையாகிய கழுகு சிறந்த கலை ஆக்கமாகக் கருதப்படுகின்றது.

அரசனின் மேன்மையை உணர்த்த பிரமிட்டுக்களின் முன்புறம் அமைக்கப்பட்ட சிற்பமான ஸ்பினிக்ஸ் / ஸ்பிங்ஸ (Sphinx) எனப்படும் உருவும் மனிதத்தலையும் சிங்கத்தின் உடலையும் கொண்டதாகும். இவ்வகையான சிற்பங்கள் சக்கரா, அலெக்சாண்டிரியா (Alexandira) கர்ணாக(Karnak) போன்ற இடங்களில் காணப்படுகின்றன. சக்கராவில் உள்ள ஸ்பினிக்ஸ் ராம்செஸ II மன்னனால் அமைக்கப்பட்டது. 14அடி உயரமும் 26அடி நீளமும் உடையது. இதன் நிறை 80 தொன் ஆகும். கர்ணாக்கில் வரிசையாக பல ஸ்பினிக்ஸ் சிற்பங்கள் உள்ளன. இவை ராம்செஸ் XI மன்னனால் கி.மு. 11ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவையாகும். மிகப்பெரிய ஸ்பினிக்ஸ் 240அடி நீளமும் 66 அடி உயரமும் உடையது. கிசாவில் காணப்படுகின்றது.


ஏனைய சிறந்த சிற்பங்களாவன :-

- சுண்ணாம்புக்கல்லில் செதுக்கப்பட்ட நெபிரிற்றி அரசியின் (Neferiti) நிறந் தீட்டப்பட்ட மார்பளவான சிற்பம்.
- ஆதார் கோயில் வாசலில் காணப்படும் கிளியோபற்றா சிற்பம்.
- துடன்காமன் (Tutankhamun) அரசனின் சிற்பம்.
- அம்சிம்பெல் சூரிய ஆலயத்திலுள்ள ராம்செஸ் II அரசன், மனைவி ஆகியோரின் சிற்பம் இவை 65அடி உயரமுடையவை.
- கர்ணாக (Karnak) என்னுமிடத்திலுள்ள அமினோபிஸ III அரசனின் சிற்பம் இது 64அடி உயரமுடையது.
- சக்கரா என்னுமிடத்திலுள்ள மஸ்டபாவில் கி.மு 250 இல் செதுக்கப்பட்ட எகிப்தியரின் வாழ்வைச் சித்தரிக்கும் A Triumph of carving என்னும் செதுக்கல்
- கணக்காளர் அல்லது ஸ்கிறைப்
- மீடம் என்னுமிடத்திலுள்ள வாத்துச் சிற்பம் போன்றவை குறிப்பிடத்தக்கன.


  மனைப் பொருட்கள், ஆபரணங்கள் போன்றவையும் சிறந்த கலைநுட்பத்துடனேயே ஆக்கப்பட்டன.
- அகேநதன் (Akhenatan) என்னும் அரசனின் காலத்தில் மட்டுமே எகிப்தில் கலைஞர்களுக்கு சிறிது சுதந்திரம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செல்கெற்


மைசிரினஸ்


கணக்காளர்/ஸ்கிறைப்


அமினோதெப III


கழுகுஇலட்சினை


செதுக்கல்



பேரோ


செதுக்கல்



கிளியோபற்றா


கீரி



செதுக்கல்


அபுசிம்பெல் ஆலயம்



செதுக்கல்



தூண்



பப்பிரஸ் செடி



கைரோகிளிப்ஸ்



கழுகு


ஆபரணவேலைப்பாடு


பிரமிட்



முள்ளம்பன்றி


ஓவியம்


மட்பாண்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துடன்காமென் ராம்செஸ் II க..ரி கற்செபசுற் அரசி நொபேட்அரசி







ஓவியங்கள் நெபிரிற்றி மம்மி





வாத்துச் சேதுக்கல்கள் கடவுள்கள்






படிப்பிரமிட் ஸ்பினிக்ஸ் கிசா ஸ்பினிக்ஸ் ஆபரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரேக்க கலை:~

கி.மு. 2500 - கி.மு. 1400 வரையான காலத்தில் வளர்ச்சிபெற்ற கிரேக்க கலையானது எகிப்திய கலையின் தொடர்ச்சியாகவே கருதப்படுகிறது.

இக்காலமரபே பிற்காலத்தில் ரோமிலும். ஐரோப்பிய நாடுகளிலும் தோன்றிய கலைகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

கிரேக்க கலாச்சாரமும், கலைஞர்களுக்குக் கிடைத்த சுதந்திரமும் இங்கு கலைவளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்தன. இவர்கள் அளவுப்பிரமாணம், நிறங்கள், தூரதரிசனம் போன்றவற்றில் போதியளவு விளக்கத்தைக் கொண்டிருந்தனர்.

கிரேக்க தூண் அமைப்புகள் டொறிக் (Doric), அயோனிக (Iyonic) கொறிந்தியன் (Corinthion) ஆகிய மூன்று வேறுபட்ட முறையில் அமைந்திருந்தன.

கிரேக்கர்களின், வீடுகள் பொதுக்கட்டிடங்கள் போன்றவை விசாலமான சித்திரங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு உருவங்களில் பாத்திரங்களைச் செய்தலும், அதனை அலங்காரமிடலும் கலைஞரின் வழக்கமாக இருந்தது. மட்பாண்டங்கள் மனித உருவங்கள், விலங்குருவங்கள், கேத்திர கணித உருவங்களால் அலங்கரிக்கப்பட்டன.

கிரேக்கத்தின் நொஸஸ், பீஸ்ரஸ் நகரத்தின் இடிபாடுகள், பெரிக்ளிஸ் மன்னன் காலத்தில் அதென்சில் அமைக்கப்பட்ட பாதினன் தேவாலயம் போன்றவை கட்டிடக்கலைச் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. பாதினன் தேவாலயமானது டொறிக் முறையில் அமைந்த தூண்களைக் கொண்டுள்ளது.

கிரேக்க சிற்பிகள் தெய்வ உருவங்களையும், தேவாலய அலங்காரத்திற்காகவும் சிற்பங்களை ஆக்கினர். சிற்பங்களில் அழகிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இதற்காக மனித உருவங்களைப் பற்றிய அறிவைத் தேட முற்பட்டனர். நிர்வாண மனித உருவம் பற்றிய கருத்துக்களை வெளியிட்டனர். அழகுப் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆண், பெண்களை மாதிரிகளாக்கி (MODEL) ஓவியம், சிற்பம் செய்தனர். மைறன், பிரக்சிடிலஸ், பீடியஸ்,பொலிக்டீடஸ், லிஸிபஸ் போன்ற சிறந்த சிற்பக்கலைஞர்கள் சிற்பங்களை ஆக்கியுள்ளனர்.

### கிரேக்கரின் சிறந்த சிற்பங்கள்.

1) பரிதி வட்டம் வீசுபவன் / தட்டெறிபவன். இது மைரன் என்பவரால் செதுக்கப்பட்டது. இதன் மூலமாதிரி வெண்கலத்தால் ஆக்கப்பட்டது.
2) வீனஸ் சிற்பம் - இது மெலொஸ் தீவில் கண்டெடுக்கப்பட்டதாகும். பிரக்சிடிலசால் ஆக்கப்பட்டது.
3) அதீனா பெண் தெய்வம்.
4) செயுஸ் தெய்வம்

இவை இரண்டும் பீடியஸ் என்பவரால் ஆக்கப்பட்டவையாகும்.

5) ஹேர்மிஸ் தெய்வம் - பிரக்சிடிலஸ் என்பவரால் ஆக்கப்பட்டதாகும்.
6) நடிகன்
7) ஈட்டி எறிபவன்.
8) தலைமயிர் கட்டிய இளைஞன்.
9) மல்யுத்த வீரன்.

இவை இரண்டும் பொலிக்டீடஸ் என்பவரால் செதுக்கப்பட்டவையாகும்.


ஓவியர்களில் லியூக்லிஸ், பொலிக்னோடுஸ் போன்றோர் புகழ்பெற்றவராவர். பொலிக்னோடுஸ் மனித உருவங்கள் வரைவதில் சிறந்து விளங்கினார். லியூக்லிஸ் வரைந்த திராட்சைப்பழ ஓவியத்தில் பறவைகள் மயங்கி பறந்து வந்ததாகக் கூறப்படுகிறது.


தட்டெறிபவன்


குத்துச்சண்டைவீரன்



நடிகன்



விளையாட்டுவீரன்


போர்வீரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீனஸ்



ஹேர்மிஸ்


செயுஸ்



அதீனா



மினோவா மதகுரு


கடவுளும் இராட்சதனும் சண்டையிடுதல்



ஓவியங்கள்


மட்பாண்டங்கள்


மினோவான்களின் ஓவியம்


பாதினன் தேவாலயம்

தூண்வகை


டோறிக் அயோனிக் கொறிந்தியன்

## உரோமானியக் கலை :-

கி.மு. 28ம் ஆண்டிலிருந்து கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் நிலவிய உரோமானியக் கலையானது கிரேக்கக் கலையின் தொடர்ச்சியாகக் கருதப்படக்கூடியதான கலையாகும். உரோமக் கலையும் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே வளர்ச்சியடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதைகுழி அலங்கார வேலைகளிலும், வழிபாட்டு செயற்பாடுகளுக்கும் கலை பயன்படுத்தப் பட்டது. தேவாலயம் (பாந்தியன்) பொய்க்குகை வழி, வீடுகள் போன்றன கிரேக்க வீட்டு நிர்மாண முறைப்படியே அமைக்கப்பட்டன.


பொம்பெய், ஹர்கியூலேனியம் ஆகிய நகரங்களில் உள்ள கட்டிடங்களில் உரோம கலை வெளிப்பாடுகளைக் காணலாம். நிபேசியிலுள்ள தேவாலயம், பசிலிகா, கொலிசியம், டயோகிரியசின் மாளிகை போன்றனவும் சிறந்த கட்டிடங்களாகும்.

சிற்பக் கலைஞர்கள் அரசனதும், அரசியினதும், தெய்வங்களினதும் உருவங்களைச் செதுக்கினர். ஸீசரின் போர்ப்பயணம், யுத்தக்காட்சிகள் போன்றவை சிற்பங்களாக உள்ளன.


சித்திரங்கள் தேவாலயம், நூல்நிலையம், வீடுகள் போன்றவற்றிலும் வரையப்பட்டன. சித்திங்களில் சிவப்பு, கறுப்பு, இளமஞ்சள் போன்ற நிறங்களே அதிகளவில் உபயோகிக்கப்பட்டன. ஈரச்சுதை முறையிலேயே இவர்கள் சித்திரங்களை வரைந்தார்கள்.

உரோமரது நாணயங்களும், சிறந்த கலை வெளிப்பாடாகும்.


அப்பலோ


ஒகஸ்டஸ்சீசர்


யூலியஸ்சீசர்


கொலிசியம்

## இடைக்காலக் கிறிஸ்தவக் கலை:-

கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் கி.பி. 4ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் இக்கலை மரபு நிலவியது. இவை கிரேக்க, உரோமப் பாணியைக் கொண்டவையாக காணப்பட்டன. உரோம அரசர்கள் அவ்வேளையில் கிறிஸ்தவர்களாக இருக்காமையால் கிறிஸ்தவத்தைப் பின்பற்றிய மக்களைத் துன்புறுத்தினர். எனவே கிறிஸ்தவ மக்கள் தங்கள் ஓவியங்களை மறைவான, இருண்ட இடங்களில் வரைந்தனர். இக்கலைமரபில் வரையப்பட்ட அநேகமான ஓவியங்கள் குறியீட்டுத் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது.

### பைசாந்தியக்கலை:-

கி.பி. 330 இல் கொன்ஸ்தாந்திநேபிளில் இக்கலைமரபு தோன்றி வளர்ச்சியடைந்தது. கிறிஸ்தவ சமய உணர்வு, அலங்காரம், குறியீட்டுத் தன்மை, ஆகியன இக்கலைமரபின் சிறப்பியல்பாகும். இக்கலைமரபில் மதகுருமாரின் எண்ணப்படியே ஓவியங்கள் வரையப்பட்டதால் அதில் ஓவியர்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. ஓவியங்கள் சிறிது கற்பனை கலந்ததாகவே தீட்டப்பட்டன.

பலநிறக்கற்களைப்பதித்து உருவங்களையும்,அலங்காரங்களையும் ஆக்கும் குட்டிமமுறை (Mosaic, மொசெய்க்) பைசாந்தியக் கலை மரபின் சிறந்த ஆக்க முறையாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெசப்பத்தேமியக்கலை:-

யூபிரதீஸ், தைகிரீஸ் நதிகளுக்கிடைப்பட்ட பிரதேசம் மொசப்பத்தேமியா எனப்பட்டது. இங்கு காலத்திற்குக் காலம் சுமேரியர், அசீரியர், பபிலோனியர் என்போர் சிறந்த நாகரீகங்களைத் தோற்றுவித்தனர். சுட்ட செங்கற் பாவனை இந்நாகரீகத்திலேயே தோன்றியது. களிமண்தட்டுகளில் ஆப்பு வடிவத்தில் அமைந்த எழுத்துக்கள் கண்டெடுக்கப்பட்டன. இவர்களால் சிகுராக் எனப்படும் கோயில் உயரமான இடத்தில் அமைக்கப்பட்டது. அதைச்சூழ வீடுகள் அமைக்கப்பட்டன. அசீரியரின் சிங்கவேட்டை, நைனிவேயில் செரூப் மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட மனிதத்தலையும் இறக்கையும் உடைய எருதின் சிற்பம் ஆகியவை மிகச்சிறந்த கலைவெளிப்பாடாகும்.


சிங்க வேட்டை


மதகுரு



இறக்கையுடைய எருது

## வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்கள்:-

இவ் ஓவியங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு (வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்) குகைகளில் வாழ்ந்த மனிதனால் வரையப்பட்டவையாகும். இவ்வாறான குகைச் சித்திரங்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன. இவை ஆதிகால மனிதனின் கலைத்திறனைப் பறைசாற்றுவதாக உள்ளன. எலும்பு, கூரான கல் போன்றவற்றால் வரையப்பட்டு மிருக இரத்தம் போன்ற இயற்கைப் பொருட்களால் நிறந்தீட்டப்பட்டுள்ளது. வெளிக்கோடு சுரண்டி. கறுப்பினால் காட்டப்பட்டுள்ளது. பின்வரும் இடங்கள் குகை ஓவியங்களுக்குப் பிரசித்தி பெற்ற இடங்களாகும்.


### 1) வடக்கு ஸ்பெயினில் உள்ள அல்டமீரா.

இக்குகை ஓவியமானது கி.பி. 1899ம் ஆண்டளவில் எதிர்பாராத விதமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இங்கு கற்குகையின் கூரையில் பைசன் மாட்டின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. மான்கள், குதிரைகள், யுத்தத்திற்கு தயாராகும் பைசன் மாடுகள் போன்றனவும் இங்கு காணப்படுகின்றன. இங்கு வரையப்பட்டுள்ள விலங்குகள் முழுமையாகவும் பகுதியாகவும் காணப்படுகின்றது. சில விலங்கு உருவங்கள் அதன் உண்மையான அளவினதாக வரையப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) தெற்கு பிரான்சின் லஸ்கோ




இறந்த மனிதனின் பராமரிப்பு என்ற சித்திரத்தின் மூலம் இக்குகையானது பிரபல்யமடைந்தது. இறக்கும் அளவிற்கு காயப்பட்ட பைசன் மாட்டினால் மனிதன் கொல்லப்படுதல். மற்றும் காண்டா மிருகங்கள் போன்றனவும் ஓவியங்களாக உள்ளன.

வர்ணத்தில் வரையப்பட்ட பைசன் மாட்டின் வெளிக்கோடானது கறுப்பு நிறத்தினால் வரையப்பட்டுள்ளது. அருகில் மனிதன், பறவை போன்ற உருவங்களும் உள்ளன.



3) பிரான்சின் பொன்டி த கோவே

இங்கு மான்கள், மெமன் யானைகள் போன்ற உருவங்கள் வரையப்பட்டுள்ளன.




4) கிழக்கு ஸ்பெயின் குகைகள்



இங்குள்ள குகைகளில் அம்பு வில்லுடன் வேட்டையாடுவோர், தடிகளுடன் வேட்டையாடுவோர் போன்ற உருவங்கள் ஓவியமாக உள்ளன.

5) லாமெடலீன் குகை

இக்குகையில் பனிமான் கொம்பில் செதுக்கப்பட்ட கழுத்தைத் திருப்பியபடி காணப்படும் பைசன் மாட்டின் உருவம் கண்டெடுக்கப்பட்டது.



6) அவுடோபேட் (Audoubert)



தெற்கு பிரான்சில் உள்ளது. இக்குகையில் இருந்து மண்ணில் செய்யப்பட்ட பைசன் மாட்டின் உருவம் கண்டெடுக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) கோகுல் குகைகள்

பிரான்சில் உள்ளன. இங்கு நடுவில் நிற்கும் ஆணைச்சுற்றி பலபெண்கள் நிர்வாணமாகநின்று நடனமாடும் காட்சி ஓவியமாக உள்ளது.

8) லெஸ் ஏஸிஸிஸ் குகை



தெற்கு பிரான்சில் உள்ளது. அருகேயுள்ள ஓவியம் இக்குகையில் காணப்படுகின்றது.

9) விலன்டோர்ப் குகை



ஆஸ்திரியாவில் உள்ளது. சுண்ணாம்புக்கல்லில் செய்யப்பட்ட பெண்ணின் சிற்பம் இங்கு கண்டெடுக்கப்பட்டது.

## மறுமலர்ச்சிக்கால ஓவியர்கள்:-

கி.பி. 15ம் நூற்றாண்டின் பிற்பகுதி ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக்காலம் எனப்பட்டது. இக்காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள் மறுமலர்ச்சிக்கால ஓவியர்கள் எனப்படுகிறார்கள். கலையின் மறுமலர்ச்சியானது இத்தாலியின் புளொரன்ஸ் நகரத்தை மையமாகக் கொண்டு நிகழ்ந்ததால் புளோரன்ஸ் கலை மரப என அழைக்கப்பட்டது. பின்வரும் ஓவியர்கள் கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களாவர். போட்டி செல்லி, பியட்டோ, டக்சியோ, வசாரி, மசெக்கியோ, பிரமாண்டே, புறூணலிச்சி, மைக்கல் ஆஞ்சலோ, றபர்யேல், லியனாடோ டாவின்சி.

1) மைக்கல் ஆஞ்சலோ. (1475 - 1564)

இவர் இத்தாலியில் 1475 இல் பிறந்தார். இளமையிலேயே சிற்பியாக விரும்பிய இவர் புளோரன்சில் இருந்த கிரிலோண்டியா ஓவியப்பள்ளியில் கற்றார். பிற்காலத்தில் இவர் மிகச்சிறந்த சிற்பியாகவும், ஓவியனாகவும், கட்டிடக்கலைஞனாகவும், கவிஞனாகவும் விளங்கினார். இவர் தனது வாழ்நாளில் 40 வரையிலான சிற்பங்களை ஆக்கினார். சிலுவையில் அறையப்பட்ட யேசுவை தாய் கன்னிமேரி தூக்கிவைத்திருப்பது போல உள்ள பியட்டா என்னும் சிலையை இருபதாவது வயதில் ஆக்கினார். சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள இச்சிற்பம் சலவைக்கல்லால் ஆனது.

தற்போது புளொரன்சில் உள்ள டேவிட் எனப்படும் சலவைக்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பம் இவரது புகழ்பெற்ற ஆக்கமாகும். மற்றும் மோஸஸ், பாக்கஸ், சிலுவையில் அறையப்பட்ட யேசு போன்றனவும் புடைப்பு சிற்பங்களான சென்டார்ஸ்போர், படிகளில் மடோனா, குழந்தையுடன் மடோனா , இறக்கும் அடிமை என்பனவும் இவரால் செதுக்கப்பட்டவையாகும்.

ஓவியங்களுள் சிஸ்டைன் தேவாலயத்து விமானத்தில் வரையப்பட்ட இறுதித்தீர்ப்பு (அந்திமத்தீர்ப்பு) என்னும் ஓவியம் இவரின் மிகச்சிறந்த ஓவியமாகும். இது ஐயாயிரம் சதுர அடி பரப்பளவில் வரையப்பட்டது. வரைவதற்கு நாலரை ஆண்டுகள் சென்றன. மற்றும் பாலின் தேவாலயத்தில் வரையப்பட்டுள்ள புனிதபீட்டரை சிலுவையில் அறைதல், சிஸ்ரைன் தேவாலயத்தில் வரையப்பட்ட ஜகரியா, தீர்க்கதரிசினி டெல்பிகா, போன்றனவும் இவரின் ஆக்கங்களாகும்.

சென் பீட்டர்ஸ் தேவாலயக் கும்மட்டம், லாறன்ஸ் நூலகம், 2ம் யூலியசின் கல்லறை போன்றவை இவரின் கட்டிடக்கலைச் சிறப்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறக்கும் அடிமை




பியட்டா



மோஸஸ்



இறுதித் தீர்ப்பு




புனித பீற்றரை சிலுவையில் அறைதல்



லாரன்சோ டி மெடிசி



ஸ்க்காரியஸ்



இறுதித் தீர்ப்பு (சில பகுதிகள்)



டேவிட்



மடோனா



டெல்பிகா



இறுதித் தீர்ப்பு

## 2) லியனாடோ டாவின்சி (1452 - 1519)


இவர் 1452ல் இத்தாலியின் வின்சி என்ற கிராமத்தில் பிறந்தார். ஓவியர் வெர்ரோச் என்பவரிடம் ஓவியம் பயின்றார். 1495 இல் சாந்தமரியா மடாலயச்சுவரில் இறுதி இராப்போசனம் என்னும் ஓவியத்தை வரைந்து புகழ் பெற்றார். கியாகொண்டா என்னும் பெண்ணைப்பார்த்து இவர் வரைந்த ஓவியமானது மொனாலிசா என்னும் பெயரில் இவருக்கு மிக்க புகழைத் தேடித்தந்தது. மற்றும் பாறைகளில் கன்னி, லெடா, புனித ஜானின் ஞானக் குளியல், புனித அறிவிப்பு, கன்னியும் புனித அன்னியும், பெண்தேவதை போன்றவையும் இவரால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்களாகும்.

மோட்டார் வாகனம், விமானம், பரசூட், ஹெலிக்ஹொப்ரர், போர்க்கருவிகள் போன்றவற்றை அவைகண்டுபிடிக்கப்பட முன்பேயே ஓவியமாக வரைந்தார். மனித உடற்கூறுகளையும் வெட்டிப்பார்த்து ஓவியமாக வரைந்தார்.

டாவின்சியால் வரையப்பட்ட சித்திரக்குறிப்புகளின் எண்ணிக்கை ஏழாயிரத்திற்கு மேற்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இறுதி இராப்போசனம் பல்வேறு தலைகள் தேவதை பாறைகளில் கன்னி








மொனாலிசா பீரங்கி வண்டி ஹெலிகொப்ரர் மடோனா





லெடா தேவதை அரசரின் தலைப்பகுதி

## 3) றபாயேல் (1483 - 1520)

இவர் 1483ம் ஆண்டு இத்தாலியின் உப்பினோ என்ற இடத்தில் பிறந்தார். இளமையில் தன் தந்தையிடம் ஓவியம் கற்றார். பின்னர் பியட்ரோ பெருஜினோ என்பவரிடம் கற்றார். 1504ல் கன்னிமேரியின் திருமணக்காட்சி, கன்னிமேரியும் புனிதக் குழந்தைகளும் ஆகிய ஓவியங்களை வரைவதன் மூலம் பலரது பாராட்டைப் பெற்றார். சிஸ்ரைன் தேவாலயத்தில் தொங்கவிடுவதற்காக திரைச்சீலையில் ஓவியங்கள் வரைந்தார். மற்றும் கிரேக்க தத்துவஞானிகளைச் சித்தரிக்கும் அதன்ஸ்நகர கல்விச்சாலை (School of Athens) அல்பா மெடோனா, கதிரையில் மெடோனா, டிஸ்பியூற்றா, மாதுளையுடன் மடோனா போன்றனவும் இவரது சிறந்த ஓவியங்களாகும். இவரின் ஓவியங்களில் டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ ஆகியோரின் பாதிப்பு உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்கூல் ஒப் அதென்ஸ்



ஸ்கூல்ஒப் அதென்சில்




காடினல்



மடோனா ஓவியங்கள்

கன்னிமேரி திருமணம்





## உலகப்பிரசித்திபெற்ற மேலைத்தேய ஓவியர்கள்:-


### 1) பப்லோ பிக்காசோ ( 1881 - 1973 )

20ம் நூற்றாண்டின் புகழ்பெற்ற நவீன ஓவியமேதையான இவர் 1881ம் ஆண்டு ஸ்பெயினில் பிறந்தார். 14வது வயதில் பார்சிலோனாவில் உள்ள அக்கடமி ஒப் பைனாட்சில் சித்திரங் கற்றார். 16வது வயதில் தனது கலைக்கூடத்தை நிறுவி அதிலிருந்து இறக்கும்வரை ஓவியம் வரைந்துகொண்டே இருந்தார்.


போல்செசான் என்னும் ஓவியரின் இம்பிரசனிச பாணியில் இவரது ஆரம்பகால ஓவியங்கள் அமைந்திருந்தன. பின்னர் கியூபிசம், அரூபபாணி ஆகியமுறைகளில் ஓவியங்களை வரைந்தார். 1955ல் பிரான்சில் இருந்தபோது சிற்பங்களையும் ஆக்கத்தொடங்கினார். ஆரம்பகால ஓவியங்களில் வறுமையும், சோகமும் நிறைந்திருந்தன. இவரால் வரையப்பட்ட போரின் கொடுமையைச் சித்தரிக்கும் குவர்ணிக்கா என்னும் ஓவியம் மிகச்சிறந்த ஆக்கமாகக் கருதப்படுகின்றது.

வயதான ஓவியக்கலைஞன், கியூபிச முறையில் வரையப்பட்ட வடஆபிரிக்காவின் நாரைகள், மூன்று இசைக்கலைஞர்கள், கண்ணாடி முன்னால் பெண்குழந்தைகள், அலஜீரியப் பெண்கள் போன்றவை இவரது சிறந்த ஆக்கங்களில் சிலவாகும். சிற்பங்களில் உலோகப்பொருட்களால் ஆக்கப்பட்ட தோட்டத்தில் பெண்கள், சைக்கிள் கான்டிலையும் சீட்டையும் வைத்து ஆக்கிய மாட்டுத்தலை, குழந்தைகள் கார், மனிதக்காளை, ஆட்டுடன் ஆடவன் போன்றவை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிக்காசோவின் ஆக்கங்கள்



குவர்ணிக்கா



மாட்டுத்தலை

## 2) ஜோர்ஜ் பிறேக் (1882 - 1963)

இவர் பிக்காசோவுடன் சேர்ந்து செசானின் கியூபிச முறையை வளர்த்தவராவார், பாரிஸில் ஹம்பாட் அக்கடமியில் ஓவியம் பயின்றார். 1907ல் போவிச பாணியில் ஓவியம்வரைய ஆரம்பித்தார். கியூபிசத்தில் புள்ளிகள் மூலம் ஓவியம் வரையும் முறையைப் புகுத்தினார்.

வயலினும் கூசாவும், கடற்கரையில் குளிக்கும்காட்சி, பறவைகள், நோர்மண்டித்துறைமுகம் போன்றன இவரின் சிறந்த ஆக்கங்களுட் சிலவாகும்.


## 3) போல் செசான் (1829 - 1906 )

பிரான்சில் பிறந்த இவர் ஆரம்பத்தில் இம்பிரசனிசப் பாணியிலேயே ஓவியங்கள் வரைந்தார். பின்னர் கியூபிசத்தைத் தோற்றுவித்தார்.

சென்விக்ரோறியாமலை, சீட்டாட்டக்காரர்கள், வீட்டில்தொங்கும் மனிதன் போன்றவை இவரின் சிறந்த ஆக்கங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4) வின்சன்ற் வான்கோ (1853 - 1890)



பெல்ஜிய நாட்டைச் சேர்ந்தவர். 26 வயதில் ஓவியம் வரைய ஆரம்பித்து 37வயதில் தற்கொலை செய்துகொண்டார். வறுமை, காதல்தோல்விகள் இவரது வாழ்வில் பாதிப்புக்களை ஏற்படுத்தின. இலக்கிய அறிவுகொண்ட ஓவியராகத் திகழ்ந்த இவர் ஆத்மாவேதான் கலை என்ற அடிப்படையில் எக்ஸ்பிரசனிசத்தைத் தோற்றுவித்தார். இவர் வாழ்ந்த காலத்தில் இவரின் ஓவியங்கள் மக்களால் விளங்கப்பட முடியாதனவாக இருந்தன.

## 5) பிரான்சிஸ்கோ டி கோயா (1746 - 1828)



மே 3, 1808

ஸ்பெயின் நாட்டில் பிறந்த இவர் ஓவியம் கற்காமலேயே சிறந்த ஓவியராக விளங்கினார். தெய்வ உருவங்களை ஓவியமாக வரைவதை இவர் விரும்பவில்லை. பெண் உருவங்களை ஓவியமாக வரைவதில் அதிககவனம் செலுத்தினார். போர், வறுமை என்பவற்றை இவர் ஓவியம் மூலம் சாடினார்.

தி பிக்னிக், மஜா, மூன்றாம் சார்லஸ், ஒசுனா, தி மாகியன்ஸ் ஒப் பொன்டேயோஸ், மே 03 1808 ஆகிய ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை. இறுதிக்காலத்தில் பிரான்சு காதல்காவியங்களை ஓவியமாக்கினார்.

## 6) ஸர்பீட்டர்பால் ரூபன்ஸ் (1577 - 1640)

அழகான பெண்களின் உருவங்களை தனித்தும், கூட்டமாகவும் வரைந்து புகழ்பெற்றார். கிரேக்க புராணக்கதைகளையும் ஓவியமாக்கினார். இத்தாலிய நாட்டவரான இவர் ஓவியத்தைப் பார்க்கும்போது உணர்வுகளைத்தூண்டி அதனுடன் ஒன்றிப்போகும்படி செய்யும் பரோக் ஓவியக்கலையில் சிறந்து விளங்கினார். அமைதியும் போரும், தோட்டத்தில்காதல் போன்ற ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை.

## 7) ரிட்டான் (1481 - 1576)

இத்தாலியரான இவர் மேனரிச காலகட்டத்தில் பெரும்புகழுடன் விளங்கினார். போட்ரெயிட் ஓவியம் வரைவதில் கூடியகவனம் செலுத்தினார். மஞ்சள் நிறத்தை அதிகளவில் பயன்படுத்திய இவர் தூரிகையில்லாமல் விரல்களாலும் ஓவியம் வரைந்தார். யூரோப்பாவின் கற்பழிப்பு இவரின் மிகச்சிறந்த ஆக்கமாகும்.

## 8) எல்கிரிகோ (1541 - 1641)

ஸ்பெயினில் பிறந்த இவர் ரிட்டானின் மாணவராவார். சிஸ்டயின் தேவாலய ஓவியங்களுக்கு ஆடைகள் வரைந்தவர் இவராவார்.

## 9) போல் கொகான் (1848 - 1903)

பிரான்ஸ் நாட்டில் பிறந்தவர். பழைய கலையை புதிய கோணத்தில் வரையும் முறையான சிந்தெடிசம் என்னும் ஓவியமுறையைத் தோற்றுவித்தார். இம்பிரசனிசம், போஸ்ட் இம்பிரசனிசம் ஆகிய முறைகளிலும் ஓவியம் வரைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10) சால்வடோர் டாலி (1904 - 1988)



இவர் ஸ்பெயினில் பிறந்தவராவார். மிகச்சிறந்த சர்ரியலிச ஓவியராக விளங்கினார். இவரின் வழிந்தோடும் கடிகாரங்கள், சிலந்திக்கால் யானை, சிலுவையிலறையப்பட்ட யேசு ஆகியவை சர்ரியலிச முறையில் வரையப்பட்ட சிறந்த ஓவியங்களாகும்.


## 11) ரெம்பராண்ட் (1606 - 1669)


டச்சு ஓவியரான இவர் ஒளிநிழல்காட்டி வரைவதில் தனித்தன்மையுடன் சிறந்து விளங்கினார். அறுநூறுக்கு மேற்பட்ட ஓவியங்களையும், முன்நூறுக்கு மேற்பட்ட செதுக்கல்களையும் வரைபடங்களையும் இவர் ஆக்கியுள்ளார். இனந்தெரியாத மனிதன், டானியின் படுக்கையறை, கனிமேடியின் கற்பழிப்பு, மனிதன், இரவுக்காவல் போன்றவை இவரின் குறிப்பிடத்தக்க ஓவியங்களாகும்.

## 12) ஹென்றி மூர்

20ம் நூற்றாண்டின் இணையற்றசிற்பி, இங்கிலாந்தைச் சேர்ந்தவர். வெளிகளில் வைக்கத்தக்க குறியீட்டுத் தன்மைகொண்ட சிற்பங்களைப் பெருமளவில் ஆக்கியுள்ளார்.







# சித்திரத்தின் நவீன ஓவியக்கொள்கைகள்:-

## 1) இம்பிரசனிசம்:-

ஓவியத்தின் வரைவடிவமும், வர்ணமும் ஓவியனது மனப்பதிவினூடே வெளிக்கொணரப்பட வேண்டுமென்பதே இக்கொள்கையாகும். பிசாரோ, மொனே, றெனோர், கோகான், செசான் போன்றோர் இப்பாணியில் ஓவியம் வரைந்தனர்.

## 2) போஸ்ட் இம்பிரசனிசம்:-

உயிரற்ற பொருட்களை சித்திரத்திற்கு உட்படுத்துவதன்மூலம் முழுஉலகையும் காணமுடியும் என்பது இக்கொள்கையின் கருத்தாகும். செசான் வான்கோ, போன்றோர் இக்கொள்கையுடன் இயங்கினர்.

## 3) எக்ஸ்பிரசனிசம்:-

காட்சிப்புலத்தின் எல்லைகளுக்கப்பால் உள்ளடங்கியிருப்பனவற்றை வெளிக்கொணர்தல் என்பது இக்கொள்கையாகும். போல்கிளி , வான்கோ, டிராப்லூப், நொல்டி போன்றோர் இம்முறையில் ஓவியங்களை ஆக்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) பியூச்சரிசம் :-

மரிநெற்றி என்பவரே இம்முறையிலான ஓவியக் கருத்துக்களை வெளியிட்டவராவார். கார்லோகாரா, போசியோலி, லூசிருல்லோ ஆகியோர் இம்முறையில் ஓவியம் வரைந்தனர். உலகமும் அதிலுள்ள பொருட்களும் இயங்கிக்கொண்டிருப்பதால் எல்லாமே மாறிக்கொண்டிருக்கும் எனவே ஓவியமும் மாறுகின்ற இயக்கத்தைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமென்பதே இக்கொள்கையாகும்.

5) போவிசம் :-

ஹென்றி மத்தியூஸ் என்பவரே இவ்ஓவியக்குழுவின் தலைவராக விளங்கினார். பிரகாசமான நிறங்களைப் பயன்படுத்தி புறநிலை யதார்த்தங்களை வர்ணங்களாக உருமாற்றுவதே ஓவியத்தின் கடமை என்பதே இவர்கள் கருத்தாகும்.

6) கியூபிசம் :-

உருச்சிதைப்புக் கொண்டதாகவும், அழகியல் நியமங்கட்கு உட்படாததாகவும் இவ்வகையான ஓவியங்கள் அமைந்திருந்தன. கேத்திரகணித வடிவத்தன்மை கொண்டதாக வரையப்பட்டன. செசான், பிக்காசோ, யூஆன் கிறி, பிராக்ஸர், ஜோர்ஜ் பிறேக் போன்றோர் இம்முறையில் ஓவியங்களை வரைந்தனர்.

7) அப்ஸ்ரக்சன் :- ( அரூபபாணி )

இவ்ஓவியங்களானது மூலவர்ணங்களையும், நேர்ரேகைகளையும், அரூபவடிவங்களையும் கொண்டதாகும். வசீலி கண்டினிஸ்கி, பியட் மொன்றின் என்னும் இருவருமே இக்கொள்கையைத் தோற்றுவித்தனர்.

8) சர்ரியலிசம் :-

போரின் அனர்த்தங்களால் ஏற்பட்ட வழமையான சம்பிரதாயங்கள் மீதான எதிர்ப்புணர்வே இவ்வகைக் கொள்கை தோற்றம்பெறக் காரணமாயிற்று. கனவின்தன்மை, உயிர்த்துடிப்பற்ற வாழ்க்கை, பொருத்தமற்ற இணைப்புக்கள் போன்றவை இவ்வகை ஓவியங்களின் அம்சமாகும். சாரா, ஆந்தர் பிரவுடன், எலுவாட், சால்வடோர் டாலி, இசமுநாசிகி போன்றோர் இவ்வகைக் கொள்கையுடன் இயங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) ப் பரீட்சை - 2001 டிசம்பர்
51 சித்திரக்கலை


சித்திரக்கலை I | நேரம் 1 மணித்தியாலம்


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.


* 1-5 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள விவரணத்திற்கு மிகப் பொருத்தமான வடிவம் **A,B,C,D,E** எனத் தரப்பட்டுள்ள வடிவங்களுள் எதுவென இனங்கண்டு அதனைக் குறித்து நிற்கும் கூற்றிற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.


A


B


C


D


E

1) விலங்கு வகுதிக்கு உரிய ஆக்கக் காட்டுரு. (..........)
2) நிலையான இயற்கையையும் தெய்வீகத் தன்மையையும் வெளிப்படுத்தும் குறியீடு (..........)
3) நீருக்கு அதிபதி என்ற கருத்தில் நீர் உள்ள இடங்களைக் காட்டும் குறியீடு (..........)
4) விகாரையில் கூரைகளின் உட்புறத்தில் ஓவியம் தீட்டுவதற்கான அடிப்படை அலகாக பயன்படுத்துவது. (..........)
5) புராதன சித்திரக்கலையைக் கற்கும் போது இரேகை சித்திரங்களில் மேம்பாடுடைய பயன்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைக்கற்றல் (..........)

* 6-10 வரையுள்ள வினாக்களுக்குரிய திருத்தமான விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

6) **(Devil Dancers' Daughter)** "பேய் நடனக்காரரின் மகள்" யாருடைய ஆக்கம்?..............................
7) இலங்கையில் முகமூடிக் கைத்தொழிலுக்கு மிகவும் புகழ்பெற்ற பிரதேசம் எது? ..............................
8) உலர் சுதை முறைவழி வரைதலின் பயன்படுத்தப்படும் நுட்பத்தின் பெயர் என்ன?..............................
9) ரத்த வத்த அலங்காரம் எந்த கிராமியக் கலையுடன் தொடர்புடையது?..............................
10) இலங்கையில் கட்டப்பட்ட முதல் சைத்தியகர எது? ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 11-15 வரையுள்ள ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே தரப்பட்டுள்ள வடிவத்துடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ள வடிவத்தை **F, G, H, I, J** எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை வினாவின் பொருத்தமான வடிவத்துக்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

11)  (.....) **F** 

12)  (.....) **G** 

13)  (.....) **H** 

14)  (.....) **I** 

15)  (.....) **J** 

* 16 -20 வரையுள்ள வினாக்களுக்குரிய திருத்தமான விடைகளை வெற்றிடங்களில் எழுதுக.

16) இன்று அழிந்து போகும் நிலையிலுள்ள சங்கஸ்ஸ புரத்துக்கு தங்க ஏணியில் வரும் காட்சி என்ற ஓவியத்தைப் பொலன்னறுவையில் ..................................................................கர்ப்பக் கிருகத்தின் இடப்பக்கச் சுவரில் காணக்கூடியதாயுள்ளது.

17) இயேசுக்கிறீஸ்துவின் நடத்தையை வெளிப்படுத்தும் கண்டியிலுள்ள ட்ரினிற்றி தேவாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் எண்ணெய் வர்ண ஓவியம் மிகப்புகழ்பெற்ற ஓவியரான ................................................ இன் ஆக்கமாகும்.

18) மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த ........................................................ மென்மை பொருந்திய குழந்தையுடன் கூடிய மடோனா ஓவியங்களின் பெரும்பாலான ஆக்கங்களை உருவாக்கினார்

19) சிவபெருமானின் மனைவியெனக் கருதப்படும் .............................................இன் சிற்பம் பெண்ணின் உடல் வனப்பை எடுத்துக் காட்டுவதுடன் தலையணி அலங்காரமும் கொண்டு விளங்குகிறது.

20) இரண்டாம் வர்ணம் எனக் கருதப்படும் பச்சை வர்ணத்திற்கு எதிர்வர்ணம் எனப்படும் ............... மூலவர்ணங்களில் ஒன்றாகும்.

* 21-25 வரை தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ( ✔ ) அடையாளத்தையும் பிழையாயின் ( ✕ ) அடையாளத்தையும் கூற்றிற்கு எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21) கம்பளைக் காலத்திற்கு உரிய ஆக்கமான கடலாதெனிய விகாரை தென்னிந்திய விஜய நகர கட்டிடக் கலைத் தொழினுட்பத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.....)

22) மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட பூசாரி உருவம் அக்கால சிற்பியின் வார்ப்புக்கலை நுட்பத்தின் உயர்தரமான ஆக்கமாகும். (.....)

23) நகவேலை (நியபொத்துவட) எனப்படும் அரக்குவேலை (லாக்ஷா) கைத்தொழிலுடன் தொடர்புடைய காட்டுரு முறையை அமைத்தல் பட்டறை மூலம் செய்யப்படுகிறது. (.....)

24) எம்பக்க தேவாலயத்தின் மரச்செதுக்கல் ஆக்கத்தை நிர்மாணித்த பெருமை தெல்மட முலாச்சாரிக்கே உரியதாகும். (.....)

25) அவிக்னோனின் மகளிர் எனும் சித்திரம் பவ்லோ பிக்காசோவின் கலை வாழ்கையில் கனவடிவக் கொள்கைக்குப் பெயர்கின்ற காலமாக இனம் காணப்பட முடியும். (.....)

* 26 - 30 வரையுள்ள கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கு மிகத் திருத்தமான வாக்கியப் பகுதியைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

26) உலகப் புகழ்பெற்ற சாரநாத் சிலை உணர்த்துவது.
1) யமனைத் தோற்கடித்த பின்னர் ஞானமடைந்த நிகழ்வு
2) பஸ்வகதவசர்களுக்கு தர்மோபதேசம் செய்யும் நிகழ்வு
3) தாய்க் கடவுளுக்கு தர்ம அறிவுரை கூறும் நிகழ்வு
4) தியானம் செய்யும் நிலையில் அமர்ந்திருக்கும் முறை

27) சுவரொட்டிச் சித்திரத்தின் மிக முக்கியமான இயல்பு
1) விரைவாகவும் தெளிவாகவும் செய்திகளைத் தருதல்
2) வர்ணங்களின் ஒத்திசைவைக் காட்டுதல்
3) சுலோகங்களைத் தெளிவாகக் காட்டுதல்
4) கருத்துள்ள மனித வடிவங்களை உபயோகித்தல்

28) பொலன்னறுவை புத்தர் சிலைகளில் காணக்கூடிய விசேட இயல்பு
1) நெளிவரி மடிப்புகள் 2) நீரலை மடிப்புகள்
3) சோடியான இரைகை மடிப்புகள் 4) மடிப்புகளின்மை

29) கண்டியுகத்திற்குரிய தெகல்தொருவ விகாரையில் உள்ள யமனை வெற்றிகொள்ளல் எனப் பெயர் பெறும் ஓவியத்தின் அம்சம்.
1) பூமித்தாயின் உருவம் காட்டபட்டிருத்தல்
2) யமனின் புத்திரிகள் உருவம் காட்டப்பட்டிருத்தல்
3) வாளைக் கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
4) துப்பாக்கியை கையில்கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்.

30) மீடமின் வாத்துக்கள் என்ற ஓவியம்
1) கிரேக்கர்களின் ஆக்கம் 2) எகிப்தியர்களின் ஆக்கம்
3) ஜப்பானியர்களின் ஆக்கம் 4) இந்தியர்களின் ஆக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 31-35 வரையுள்ள கூற்றுகளிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

31) எம்பக்க தேவாலயத்தின் கூரையில் காணப்படும் ........................................ கம்பளைக் கால கட்டடக்கலையின் விசேட அம்சமாகும்.

32) சிகிரியா ஓவியங்களில் வெளிப்படுத்தப்படுவது மேகலா விஜ்ஜ லதா என ........................................ இனால் வெளிப்படுத்தப்பட்ட எண்ணக்கரு சிகிரியா பற்றிப் பரந்த பிரசாரத்தைத் தருகிறது.

33) இந்திய அமராவதி மரபை வெளிப்படுத்தும் ........................................ சிலை அநுராதபுர காலத்தில் தாதுசேன மன்னனால் கட்டப்பட்டதாகும்.

34) காளைகளின் குகை எனப் பெயர் பெற்ற வரலாற்றுக்கு முந்திய காலத்து ஓவியம் காணப்படும் குகை ........................................ குகை என்ற பெயரால் இனம் காணப்படுகிறது.

35) விகாரைச் சுவர்நிரைகளின் மத்தியில் ........................................ மரபில் மிக எளிமையாகக் கண்டிய ஓவியர்களால் வரையப்பட்ட ஜாதகக் கதைகள் பக்தர்களின் மனதில் பக்தியை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளன.

* 36-40 வரையுள்ள வினாக்கள் : கீழே தரப்பட்டுள்ள கலையாக்கத்தில் நீங்கள் அவதானித்த கலைத்திறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதான ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



36) ........................................................................................................

37) ........................................................................................................

38) ........................................................................................................

39) ........................................................................................................

40) ........................................................................................................

**சித்திரம் I விடைகள்**

1) **B** 2) **E** 3) **A** 4) **D** 5) **C**
6) **A.C.G.S.** அமரசேகர 7) அம்பலாங்கொட 8) பிரஸ்கோ ஸிகோ : டெம்பரா
9) தும்பறைப்பாய் 10) தூபராம 11) **G** 12) **I** 13) **J**
14) **F** 15) **H** 16) திவங்க சிலைவீடு (திவங்க பிளிமகே)
17) டேவிட் பெயின்டர் 18) றபாயேல் 19) பார்வதி, சக்தி 20) சிவப்பு நிறம்
21) ✔ 22) ✕ 23) ✕ 24) ✔ 25) ✔
26) 2 27) 1 28) 3 29) 4 30) 2
31) மடல்குருப்பாவ 32) பரணவிதான 33) அவுக்கண 34) லாஸ்கோ 35) தொடர் சித்திரம்

36-40

ஜோர்ஜ் கீட் என்பவரால் வரையப்பட்டது. தாயும் சேயும் என்ற தொனிப்பொருளில் அமைந்தது. தாய்ப்பாசத்தை வெளிப்படுத்துகிறது. ரேகைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பல்வகையான ரேகைகளைக் கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தியுள்ளார். ஜோர்ஜ் கீட்டின் தனித்துவமான பாணி மனித உருவங்களில் வெளிப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண ... ) பரீட்சை - 2001 டிசம்பர்
51 சித்திரக்கலை

சித்திரக்கலை II — நேரம் 2 மணித்தியாலங்கள்

முக்கியம்:


மேற்பார்வையாளர் உங்களுக்கு இரு தாள்களை வழங்குவார். அவற்றில் பருமட்டத் தாளைப் பூர்வாங்க வரிச் சித்திரம் வரைவதற்கும், வெள்ளை வரைதற் தாளை வர்ணச் சித்திரம் தீட்டுவதற்கும் பயன்படுத்துக.
இரு விடைத்தாள்களினதும் பின்பக்கத்தில் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக உங்களது சுட்டெண்ணை எழுதுக.
மேற்பார்வையாளரிடம் கையளிப்பதற்கு முன் வரைதல் நன்றாக உலர்ந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஈரமான வரைதல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளக்கூடும். இது உங்களுக்கு பிரதிகூலமாக அமையலாம்.
ஊடகம்: நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், கெட்டிச்சாயம் (ரெம்பெரா) பெஸ்ரல் வர்ணம் என்பவற்றைப் பயன்படுத்தலாம். (Feltpens) பெல்ட் பேனைகளைப் பயன்படுத்த வேண்டாமென ஆலோசனை வழங்கப்படுகின்றது.
சிறுகிளையின் இலைகள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் எல்லாம் கண் பார்வை மட்டத்திற்குக் கீழே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அவ்வாறு செய்யுமாறு மேற்பார்வையாளருக்கு ஞாபகமூட்டுக

சுயதீனமான ரேகைச் சித்திரம் வரைதலும் பொருள்களின் வர்ணச் சித்திர ஆக்கமும்.
மேற்பார்வையாளரினால் உங்களுக்கு முன்பாக ஒழுங்கில் வைக்கப்பட்டுள்ள பொருட் தொகுதியைக் கவனமாகத் தெரிந்து கொள்க. இந்நோக்கத்திற்காகப் பருமட்டத்தாளைப் பயன்படுத்துக. இதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவழிக்கவேண்டாம். இதற்காக நீங்கள் பேனாவை அல்லது பென்சிலை அல்லது தூரிகையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறீர்கள்.
சுயாதீன இரேகைச் சித்திரத்தைப் பூரணமாக்கிய பின் இதே ஒத்த தொகுதிப் பொருள்களை வர்ணத்தில் வரைக. (இவ்வேலைக்கு வெள்ளை வரைதற் தாளைப் பயன்படுத்துக).
உங்கள் ஆக்கத்தை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் குறிப்புகள் கவனத்திற்கு எடுக்கப்படும்.

1) பருமட்டான பூர்வாங்க வரிச் சித்திரத்தில் ஊடகத்தைக் கையாளுவதில் உங்களது திறன்.
2) வர்ணச் சித்திரம் கலைத்தன்மையுடன் ஆக்கப்பட்டிருத்தல்.
3) அளவு, தூரநோக்கு மற்றும் முப்பரிமாண வெளிப்பாட்டுக் கோட்பாடுகள் பற்றிய அறிவு
4) வர்ணங்களைக் கையாளுவதில் உங்களுக்குள்ள திறன்
5) தாளின் அளவுக்கு ஏற்ப வடிவங்களை ஒழுங்குபடுத்தல்
6) பின்புலத்தை அமைத்தல், காட்சியுறுப்பமைதி என்பவற்றில் கருத்து வெளிப்பாடு.

கவனிக்கவும்
பொருள்களின் தொகுதி உள்ள பெரிய வரைதற் பலகையை வரைய வேண்டியதில்லை. பொருள்களின் தொகுதிக்குப் பொருத்தமான வகையில் பலகையின் அளவை மாற்ற உங்களுக்குச் சித்திரம் உண்டு.

2001 டிசம்பர் பரீட்சையில்
வைக்கப்பட்ட
நிலைப்பொருட்கூட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) ப் பரீட்சை - 2001 டிசம்பர்

51. சித்திரக்கலை

**சித்திரக்கலை III** நேரம் 2 மணித்தியாலங்கள்

கவனிக்க:

வரைதல் தாளின் இடது பக்க மேல்மூலையில் பின்பக்கத்தில் உங்களது சுட்டெண்ணையும் வினா இலக்கத்தையும் தெளிவாக எழுதுக.

மேற்பார்வையாளரிடம் கையளிப்பதற்கு முன் வரைதல் நன்றாக உலர்ந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஈரமான வரைதல்கள் உங்களுக்கு பிரதிகூலமாக அமையலாம்.

பின்வரும் ஊடகங்களுள் எதற்றையேனும் பயன்படுத்துவதற்கு நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்கள் நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ட்ரல் வர்ணம், அல்லது வேறு எவையேனும் பொருத்தமான ஊடகம்.

வரைதற்தாளும் தேவைப்படுவோர்க்கு திசுத்தாளும் வழங்கப்படும்.

"அ" பகுதியை அல்லது "ஆ" பகுதியைத் தெரிவு செய்க.

பகுதி "அ" - படவாக்கம்

பின்வரும் தொனிப் பொருள்களில் ஒன்றைத் தெரிவு செய்க. நீங்கள் தெரிவு செய்த தொனிப்பொருளுக்குப் பொருத்தமான பாணியினைப் பயன்படுத்துவதற்கு உங்களுக்குச் சுதந்திரம் உண்டு

1) வயலில் வேலை செய்யும் விவசாயி ஒருவரும் வெளியிடத்தில் புல்மேயும் மாடுகளும்
2) சனநெருக்கடி மிகுந்த ஒரு வீதி
3) சடுகுடு விளையாட்டில் ஈடுபட்டுள்ள கிராமச் சிறுவர்கள்
4) சமய வழிபாட்டுத் தலமொன்றினுள் பூசையில் ஈடுபட்டுள்ள அடியார்கள்
5) வலைகளைப் பழுது பார்க்கும் மீனவர்கள்
6) கீழே தரப்பட்டுள்ள பாடலின் பொருளை எடுத்துக்காட்டும் வகையிலான வர்ணச் சித்திரம்

மாகவலி கனிநிகளு வளவை கங்கை
சிவனொளிபாதமலையிலே ஊற்றெடுத்து
பசுந்தரை களினூடே தவழ்ந்து
வளமான மணிக் கற்கள் புதைந்திருக்கும்
பள்ளத் தாக்குகளிலே பாய்தோடுகிறதே.

பகுதி "ஆ" காட்டுரு ஆக்கமும், அலங்காரமும்

கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து அதனடிப்படையில் கவர்ச்சிகரமான வர்ணக் காட்டுரு ஒன்றை அமைக்குக.

7) "ஒற்றுமையே எங்கள் பலம்" என்ற கருப்பொருளின் கீழ் ஒரு சுவரொட்டி அமைக்குக. (4 வர்ணங்களை மட்டும் பயன்படுத்துக).
8) பரிசுப் பொதியினைச் சுற்றுவதற்கான சுற்றுத்தாளுக்குப் பொருத்தமான பரவுரூப அலங்காரம்
9) ஒரு சிறுவர் நாடகத்தில் மயிலின் பாகத்தை ஏற்கும் ஒருவருக்குப் பொருத்தமான அலங்கார உடையொன்றுக்கான வர்ணக் காட்டுரு.
10) பாடசாலையில் சிறுவர் கண்காட்சி ஒன்றுக்குப் பெற்றோர்களை அழைப்பதற்கான வர்ணமயமான அழைப்பிதழ் ஒன்றுக்கான காட்டுரு.
11) "குட்டி வீரர்கள்" என்னும் சிறுவர் கதைப்புத்தகம் ஒன்றுக்குப் பொருத்தமான ஒரு மேலுறையை கருத்துள்ள வகையில் அமைத்து வர்ணந் தீட்டுக.
12) பாடசாலைக் கட்டிடத்தின் பிற்பக்கச் சுவரினை அழகுபடுத்துவதற்கு 10 x 5 அடி அளவு சுவருக்குச் செதுக்கல் முறையில் ( relief) "இயற்கையின் அழகு" என்னும் கருப்பொருளின் கீழ் ஒரு காட்டுரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்நூலாசிரியர் பற்றி சில வரிகள்...

கலைகள் பண்பாட்டின் எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. ஓவியம், சிற்பம், இசை, நடனம் எனப் பல நிலைகளில் கலைத்துறை விரிவுபட்டது. ஓவியக்கலை அதாவது சித்திரக்கலை பல்வேறு விடையங்களைக் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்தும் பாங்குடையதுடன், கண்ணுக்கும் கரத்துக்கும் உணர்வூட்டும் தன்மை கொண்டது எனலாம்.

பாடசாலை மட்டத்திலும், உயர்கல்வியிலும் சித்திரக்கலை ஒரு பாடமாகக் கொள்ளப்பட்டிருந்தும் கூட தமிழ் மாணவ, மாணவியரைப் பொறுத்தவரை இடர்கொண்ட பாடமாக விளங்குகின்றதென்ற குறை நிலவுகின்றது.

பொருத்தமான வழிகாட்டி நூல்களின்மையும், புரியாத பிற மொழிச் சொற்களின் பயன்பாடும் சித்திரப்பாடத்தை விருப்பப்பாடமாகக் கொள்வதில் தடையாக இருக்கின்றது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டும், தமிழ் மொழி ஊடாக சித்திரப் பாடத்தை சிறப்புறப் பயில ஏற்றவை செய்யப்பட்ட வேண்டுமென்ற கல்வியியலாளரின் விருப்பை ஈடு செய்யக் கூடியதாக சித்திரப்பாடத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஏ. எஸ் சற்குணராஜா அவர்களின் ஆக்கமாக வெளிவரும் இந்நூல் நல்ல பயனளிக்கக் கூடியது என எதிர்பார்க்கலாம்.

பருத்தித்துறை வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சற்குணராஜா மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தினதும், ஹாட்லிக்கல்லூரியினதும் பழைய மாணவராவார். சித்திரபாட சிறப்புப்பயிற்சி பெற்ற இவர் யா/ஹாட்லிக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றித் தற்போது கொ/புவக்பிட்டிய சீசீ, தமிழ் மகா வித்தியாலயத்தில் பணியாற்றுகின்றார்.

பொதுப்பணியில் ஆர்வமுள்ள இவர் வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையம் வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலயம் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

வடமராட்சி கல்விவலயத்தில் சித்திரபாட வளஆளணியினரில் ஒருவராகச் செயற்பட்ட சற்குணராஜாவின் தமிழ்மொழி ஆளுமை பாராட்டப்படவேண்டியதாகும். கல்வித் தேவையைக் கருத்தில் கொண்டு ஆக்கம் பெற்றுள்ள இந்நூல் சித்திரப்பாடத்தைப் பயில்வோர் மத்தியிலும், பயிற்றுவிப்போர் மத்தியிலும் வரவேற்பைப் பெறுமென எதிர்பார்க்கலாம்.

காலத்தின் தேவைக்கேற்ப இவ்வாறான பாடத்திட்டத்தோடியைந்த நூல்கள் வெளிவருவது தமிழ் மாணவ, மாணவியரின் கல்வி உயர்வுக்கு அவசியமாகும் என்பதுடன், ஆசிரியரின் இந்நன்முயற்சியை வாழ்த்தி வரவேற்பவர்களுடன் இணைந்து கொள்கிறேன்.

**தர்மலிங்கம் மனோகரன்.**

கல்விக்குழுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்.
பொதுச்செயலாளர்,
அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org